
ஊழியன்

தேசீய சித்திர வாரப்பத்திரிகை

மலர் 14. 21—9—34. இதழ் 12.



திறந்து மூடும் பாம்பன் பாலம் —Pon

யுனைடெட் இந்தியா
லைப் அஷியூரென்ஸ் கம்பெனி லிமிடெட், மதராஸ்.

லைப் அஷியூரென்ஸில் முதன்மையா யிருப்பதனைத்தையும் மிகவும் சல்லிசாக அளிப்பது
யுனைடெட் இந்தியா.

பணத்தைப் பத்திரப்படுத்திப் பாதுகாப்பதற்கு யுனைடெட் இந்தியாவில் ஒரு பாலிஸி இருப்பது நலம். ஒருவருடைய விருத்தாப்பிய காலத்திற்காகட்டும், அல்லது குடும்ப ஸ்வாதிபத்திய நிலைமைக்காகட்டும், அது முதல்தரமும் பூர்ணமும் ஆன பாதுகாப்பாகும்.

தென்னிந்தியாவிலுள்ள சிறப்பும் புகழும் படைத்திலங்கும் பிராசீன கம்பெனியாகும்
யுனைடெட் இந்தியா.

முழு விவரங்களும் இன்ஷியூரென்ஸ் சம்பந்தமான சகல அம்சங்களும் தெரியவேண்டுமானால் அடியிற் குறித்த எந்த விலாசத்திற்கேனும் எழுதுக :—

ஹெட் ஆபீஸ்:

"யுனைடெட் இந்தியா அஷியூரென்ஸ் பில்டிங்க்ஸ்"

செம்புதாஸ் தெரு, மதராஸ்.

அல்லது கிளையாபீசுகள் எதற்காவது, அல்லது பல விடங்களிலுள்ள ஏஜெண்டுகளுக்காவது எழுதவும்

சுமார் 30 வருட காலமாகத் தமிழ்நாடு எங்கும் புகழ்பெற்றது

ஸ்ரீ கௌரி

கௌரி மதனவீரிய குளிகை

இதை அநுபானப்படி உபயோகித்துவர தாது நஷ்டம், பலஹீனம், துரிதஸ்கலிதம், கோசந் துவளல், மறதி, அசதி, இடுப்பு வலி, அதிபோகத்தாலும், அல்லது வியாதியாலும் இழந்துவிட்ட ஆண்தன்மை, சொப்பன ஸ்கலிதம், சிறுபிராயத்தில் அறியாமையால் ஏற்படும் மேகச்சூடு, மேக வெட்டை, இந்திரியம் நீர்த்துப்போதல், மூளை, இருதயம் இவைகளிலுள்ள சக்திக் குறைவு முதலிய துர்க்குணங்களைப் போக்கி, மனோ உற்சாகம், ஞாபகசக்தி, வீரிய விருத்தி, பலம், இந்திரியக்கட்டு, சரீர ஆரோக்கியம், நல்ல பசி, நரம்புகளுக்கு வலிவு இவைகளைக் கொடுத்து, தாது விருத்தியை உண்டாக்கும். இது தங்க பஸ்பம், நன்முத்து பஸ்பம் அம்பர் முதலிய உயர்ந்த சரக்குகளுடன், தாதுவை விருத்தி செய்யும் சித்த மூலிகைகளின் சத்துக்களும் சேர்த்து முடிக்கப்பெற்ற சிறந்த ஔஷதம்.

25 மாத்திரை கொண்ட புட்டி ரூபா 2.

கௌரி மேக குலாந்தக கிருதம்

இதனால் தீரும் நோய்கள் கருங்கிரந்தி, செங்கிரந்தி, படை தடிப்பு, மேக ஊரல், கருமேகம், செம்மேகம், கிரந்தி, அரையாப்பு, கண்டமாலை, மேகச் சொறி, கைகால்களில் காணும் கருப்பு, கைகால் பிடிப்பு, ஸ்திரீகள் சம்பந்தத்தால் ஏற்பட்ட மேக ரோகங்கள், புற்று ரோகங்கள் முதலியவற்றைப் போக்கி ரத்தத்தைச் சுத்தி செய்து பழைய தேக அமைப்பைக் கொடுக்கும். பத்தியம் இல்லை.

20 நாள் 40 வேளை கிருதம் விலை ரூபா 4—0—0.

குறிப்பு:—டாக்டர்களும் வைத்யர்களும் பார்த்து தீராதென விடப்பட்ட எவ்வித வியாதியையும் சௌக்யம் செய்ய முடியும். சிறந்த தேசாபிமானிகளும் அநேக கனவான்களும் அளித்துள்ள தங்க மெடல்களும் நற்சாக்ஷி பத்திரமும் போதிய சான்றாகும்.

விபர காட்லாக் இனாம்.

டாக்டர் V. R. சுந்தரம்,

ஸ்ரீ கௌரி ஆயுர்வேத மந்திரம், 268, பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை

ஊழியன்

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

மலர் கச. சென்னை, பவ௵ புரட்டாசி௴ 5௳ வெள்ளி (21-9-1934) இதழ் கஉ.

இந்தியத்தாய் முடிசூடி எழிற்சிங்கா
  தனமேறி ஈடிலாது
சொந்தவா சேபுரியத் துயர்போக்கி
  யாவருமே சுகவாழ் வெய்த
இந்நிலம் வந்தவருள் இலைபிறப்பில்
  இழிவுயர்வென் இயற்கை ஓங்க
நந்தலிலா ஊழியமே நான் கொண்டேன்
  நல்லனவெந் நாளும் வாழ்க!

அடிகள் அறிக்கை

காந்தியடிகள் காங்கிரசை விட்டுப் பிரிந்துவிடப் போகிறார் எனச் சிலநாட்களாக இருந்த வதந்தியை ஒட்டி அடிகள் இவ்வாரம் ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அறிக்கை மிக நீண்டது. அதன் சுருக்கத்தை வேறு பக்கங்களில் காணலாம். அடிகளின் அறிக்கை உருக்கமும் உண்மையும்கொண்டு விளங்குகின்றது. அதனை ஊன்றிப் படிக்கவேண்டும் என நாம் கூறத் தேவையில்லை.

அடிகள், தாம் காங்கிரசிலிருந்து விலகப் போவதாக வெளிவந்த செய்தி உண்மையே என்பதை முதலில் ஒப்புக்கொண்டு, பம்பாய்க் காங்கிரஸ் முடியும்வரை விலகுதல்பற்றி எவ்விதத் தீர்மானமும் செய்தலாகாது எனத் தம் அரிய நண்பர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்கத் தமது முடிவை நிறுத்தி வைத்திருப்பதாகவும் தாம் விலக நினைப்பதற்குரிய காரணங்களை விரிவாக விளக்கியும் இருக்கின்றார் தமது அறிக்கையில்.

பம்பாய்க் காங்கிரஸ் தாம் விரும்பும் திருத்தங்களை மனமார நிறைவேற்றிச் செய்கைக்கும் கொண்டுவரும் என்ற உறுதி ஏற்படுமானால் காங்கிரசை அடிகளே தலைமை தாங்கி நடாத்தத் தயாராக இருக்கின்றார் என அடிகள் அறிக்கை நன்கு உணர்த்துகின்றது. காங்கிரஸிலுள்ள குறைபாடுகட்கும் செய்த தீர்மானங்களைக் காங்கிரஸ்காரர் மதித்து நடவாமைக்கும் அடிகள் மிகவும் வருந்துகிறார். காங்கிரசின் கொள்கை வழி ஒழுகாத காங்கிரஸ்காரர் இதற்கு வெட்கப்படுதல் வேண்டும்.

காங்கிரஸ் நிர்வாகத்தில் முற்றும் கலந்துகொள்ளா விட்டாலும் அடிகள் காங்கிரசிலேயே இருந்து வரலாம் எனச் சிலர் யோசனை கூறியிருக்கிறார். காந்தியடிகட்கு அதில் உடன்பாடு இல்லை. அடிகளின் வலது கைபோன்ற சர்தார் வல்லபாயும் அதனை மறுப்பதாகவும் அடிகள் காங்கிரசைவிட்டு விலகவேண்டிய காலம் வந்துவிட்டதாக வல்லபாய் ஒப்புக்கொள்வதாகவும் அடிகள் அறிக்கையில் கூறுகிறார். அடிகள் காங்கிரசில் இருப்பதென்றால் பேருக்கு இருப்பது சரியாகாதென அடிகளும் அவரைப் பெரிதும் பின்பற்றும் சிலரும் கருதுவது நியாயமேயாகும். உலகம் முழுமைக்கும் உய்வழி காட்டக்கூடிய ஒரு பெரியார், தமது போராற்றலைப் பயன்படுத்தாமல் பேருக்குஇருப்பதில் என்ன இலாபம்? எனவே, அடிகள் கூறும் திருத்தங்களை ஆராய வேண்டுவதே காங்கிரஸின் கடன்.

பம்பாய்க் காங்கிரஸ் கூடுவதற்கு நீண்ட நாட்கள் முன்னரே ஆராய்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து இப்பொழுதே அடிகள் தமது திருத்தங்களை விரிவாகக் கூறியிருக்கிறார். காங்கிரஸ்காரர் விஷயங்களை நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து அடிகள் திருத்தங்களை ஏற்று நடாத்துதல் என்ற முடிவுக்கு வந்தால் அடிகளின் தலைமைக் கூட்டுறவைக் காங்கிரஸ் இழவாது. தமது அறிக்கை முடிவில் இதில் எவ்விதச் சமரசத்திற்கும் இடமில்லையென அடிகள் இப்பொழுதே கூறிவிட்டார். அந்தத் தீர்மானத்தையும் மனமில்லாமல் தமக்காக ஏற்றுக்கொள்வதால் பயனில்லையென அடிகள் மிகவும் வலியுறுத்

திக் கூறுகிறார்; அது உண்மை தான். அதனாலேயே தீர்மானங்கள் செயலுக்கு வாராதொழிகின்றன.

அடிகள் திருத்த விரும்பும் விஷயங்களை நோக்கலாம். காங்கிரஸ் லட்சியத்தில், 'சட்ட சம்மதமானதும் சமாதானமானதுமான' என்றிருப்பதை 'உண்மையும் அஹிம்சையுமான' என்று மாற்றவேண்டும் என்பது அடிகள் திருத்தங்களுள் ஒன்று. காங்கிரஸ் உண்மையையும் கருணையும்விட்டு இம்மியும் மாறுபட்டுச் செல்தல் ஆகாது என்பது அடிகள் கருத்து. அதனாலேயே இத்திருத்தத்தை அடிகள் வேண்டுகிறார்.

நான்கணாச் சந்தாவுக்குப் பதிலாக ஒவ்வொரு காங்கிரஸ் அங்கத்தவரும் தாமே நூல் நூற்றுப் பழய மாதிரி காங்கிரசுக்குக் காணிக்கை செலுத்தவேண்டும் என்றும் அப்பொழுதுதான் ஏழைகளை ஆதரிக்கும் கதர் இயக்கத்தைக் காங்கிரஸ்காரர் முற்றும் உடன்பட்டதாக ஆகும் எனவும் அடிகள் கருதுகிறார். இது இரண்டாவது திருத்தம்.

மூன்றாவது காங்கிரஸ் தேர்தல்களில் குறைந்தது அதற்குமுன் ஆறுமாதமாவது அங்கத்தவராக இல்லாதாரை எதற்கும் தெரிந்தெடுத்தலாகாதென்பதும் கதர் வழக்கமாக அணியாதவர் தேர்தலில் கலத்தலாகா தென்பது மாகும். காங்கிரசில் கஷ்ட காலங்களில் பங்கு கொள்ளாமல் ஸ்தானங்களை மட்டும் திடீரென அடைய முயலுவோரையும் கதரில் நம்பிக்கை யில்லாதாரையும் நிர்வாகத்தில் நுழையாமல் தடுக்க இவ்விதி வேண்டும் என அடிகள் நினைக்கிறார்.

காங்கிரஸ் பிரதிநிதிகளின் தொகையை இப்போதிருக்கும் ஆறாயிரத்தினின்றும் ஓராயிரத்துக்குக் குறைக்கவேண்டும் என்பது நான்காவது திருத்தம். இது காங்கிரஸ் கூட்டத்தை நடாத்துவோரின் சவுகரியங் கருதியும் அநாவசியமாக ஆட்களைப் பெருக்கா திருக்கவும் என மகாத்மா வழுத்துகிறார்.

இந்நான்கு தீர்மானங்களும் சரியானவையென மற்றவர்க்கு உள்ளூரத் தோன்றி முடிவு செய்யப்படுமானாலன்றித் தாம் காங்கிரசில் இருந்து செய்யக்கூடியது ஒன்றுமில்லையெனக் காந்தியடிகள் விளக்கமாகக் கூறுகிறார். பம்பாய்க் காங்கிரசுக்கு ஓர் பெரும் பொறுப்பை மகாத்மா கொண்டுவந்து விட்டிருக்கிறார். அவர் தம் குறித்த கொள்கை காரணமாக விலக நேருமானால் அதற்கு அடிகள் மிகவும் வருந்துகிறார் என்பதை அடிகள் அறிக்கையில் கூறும் உருக்கமான கீழ்வரும் சொற்கள் வலியுறுத்துகின்றன.

"காங்கிரஸ் தன்னலமின்றிச் சிறந்த தியாகம் செய்திருக்கிறது. துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதில் காங்கிரசுக்கு இணையான ஸ்தாபனம் எதுவும் இல்லை. காங்கிரஸ் தன் தியாகத்தை நினைத்துப் பெருமைப்பட இடமுண்டு. இந்நாள் காங்கிரசிலேயே ஒழுக்கம் நிறைந்த பெண்களும் ஆண்களும் பலராக இருக்கின்றனர். ஆதலால் காங்கிரசை விடுத்து நான் விலகுவதெனின் எல்லையற்ற வருத்தத்துடனே அக்காரியம் செய்தல் வேண்டும். தவிர, நான் காங்கிரசில் இருப்பதைக் காட்டினும் வெளியிலிருந்தால் நாட்டுக்கு அதிக நலன் உண்டு என நான் உறுதியாக உணர்ந்தால்தான் அவ்விதம் செய்வேன்."

அடிகளின் இப்பொன்னுரைகள் யாரைத்தான் உருகும்படி செய்யா? காங்கிரஸ் பழமை வாய்ந்த பெரிய ஸ்தாபனமானாலும் அதனை உலக முழுமையும் அறியுமாறு செய்த பெருமை காந்தியடிகட்கே உரியது. எனவே இன்று காந்தியடிகளை விலக விடுவது சரியாகாது. ஆனால் அவர் கூறும் திருத்தங்களை மனமார ஏற்று நடைமுறைக்குக் கொணரக் காங்கிரஸ்காரர் தயாராக இருந்தாலன்றித் திருத்

சர்வதேச சங்கத்திற்கு ருஷ்யா.



பல ஐரோப்பிய தேசங்கள் ருஷ்யாவை வரவேற்கக் காத்திருக்கின்றன. அவற்றில் முதன்மையானது பிரான்சே. ஆனால் டிவாலிரா முதலியோர் முட்டுக்கட்டை போடுகின்றனர்.

தங்களைத் தீர்மானித்து விடுவது மட்டும் பயனற்றது. அதனை அடிகள் வெறுக்கிறார். அடிகள் விலக விடாமற் செய்யவேண்டுவதும் திருத்தங்களை எவ்வளவு எல்லோர்க்கும் இயலுமோ அவ்வளவு வரையும் முழுமனதுடன் ஆற்றவேண்டுவதும் பம்பாய்க் காங்கிரசின் பெருங் கடமையாக இருக்கிறது.

இடி முழக்கம்

ஆரணி சாஸ்திரியார்

ஆரணி தேசபக்தர் திரு. ம. வி. சுப்பிரமணிய சாஸ்திரியார் இவ் உலகு நீத்தார் என்று அறிந்து மிகவும் வருந்துகிறோம். இவர் ஓர் பழய தேசியவாதி; ஒத்துழையாமையின் தொடக்கக் காலத்தில் தீவிரமாய் உழைத்துச் சிறை சென்றவர். அந்த நாளில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியில் பெரிய பதவிகளையெல்லாம் வகித்திருந்தார். சமீபகால இயக்கங்களில் இவர் கலந்து கொண்டாற்றவில்லையானாலும் இவர் தம் பழய சேவையைத் தமிழர் மறத்தல் ஆகாது. அன்னார் குடும்பத்தார்க்கு நமது அனுதாபம் உரியதாக!

சர்க்கார் என்ன செய்யும்?

திரு. சரத் சந்திரபோஸ் ஸ்ரீ சுபாஷ் பாபுவின் சகோதரர்; பெரிய தேசியவாதி; திறமையுள்ள வக்கீல். சென்ற சட்டமறுப் பியக்கத்தின்போது சர்க்கார் இவரைக் கைதுசெய்தார்கள். ஆதலால் சட்டமறுப்பியக்கம் நிறுத்தப்பட்டுத் தேசியக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டதும் இவரும் வெளிவந்திருக்க வேண்டுவதாகும். ஆனால் இதுகாறும் சர்க்கார் விடுதலை செய்யவில்லை. இது பற்றி இந்தியச் சட்டசபையில் கேள்வி கேட்டபோது கனம் ஹோம் மெம்பர், ஸ்ரீ போஸ் பயங்கர இயக்கத்தில் சேர்ந்திருந்ததாகச் சொல்வதற்கு ஆதாரமிருக்கிறது என்று பதில் கூறினாராம். அதுதெரிந்த ஸ்ரீ போஸ் சர்க்காருக்கு இரண்டு கடிதமெழுதித் தம்மைப் பயங்கர இயக்கத்தில் சம்பந்தமுடையவரென்று நினைத்தால் கோர்ட்டில் வாதாட உத்தரவு கொடுக்க வேண்டுமென்றும், கோர்ட்டு விசாரணையில் குற்றவாளி என்று காணப்பட்டால் கொடுக்கும் தண்டனையைப் பெற்றுக்கொள்ளத் தயாரென்றும் தெரிவித்திருக்கிறார். இனிச் சர்க்கார் என்ன செய்வார்கள்? அவர்கள் ஸ்ரீ போஸ் பயங்கர இயக்கத்தைச் சேர்ந்தவரென்று எண்ணியிருந்தால், இதுகாறும் விசாரணையின்றிச் சிறை வைத்திருந்தது பொருத்தமற்றதன்றோ?

வேலை கொடு அல்லது உணவு கொடு

புதுவையைச் சேர்ந்த நெசவுத் தொழிலாளர்கள் 50 வருஷகாலமாக அந்தத் தொழிலாலேயே ஜீவித்து வந்தவர் நாலைந்து வருஷங்களாக தம் தொழில் க்ஷீணித்து விட அதனால் மூன்று மாத காலமாக வேலையில்லாதாகி விட்டனர். இதனால் தாங்கள் இதற்கு முன் சேமித்து வைத்திருந்த சிறு செல்வத்தை விற்றுக் கஷ்ட ஜீவனம் செய்தார்கள். பிறகு பலர் கூடி பகிரங்கப்பிச்சை எடுத்து வருகிறார்கள். இரண்டொரு நாட்களாக இவர்களின் கூட்டம் அதிகமாகிக் கொண்டே வருகிறது. 15000 தொழிலாளிகள் இம்மாதிரித் தவிக்கிறார்களாம். இதுவரைச் சேமித்த மகமைக்காசு நியாயமாகத் தொழிலாளற் குரியதே. இதில் ஆறு லக்ஷம் இருப்பதாகத் தெரிகிறது. இந்த மாதிரியான நிலைமை புதுவைக்கு மட்டும் தனியானதல்ல. உலகம் பூராவாகவும் இம்மாதிரியான நிலைமைதான் இருந்து வருகிறது. தொழிலாளர்களின் கஷ்டங்களே தான் அடிப்படையான அரசியல் மாறுதல்களுக்குக் காரணமாக இருப்பது சரித்திர உண்மை. இதையறிந்து அரசியல் நிர்வாகிகள் நெசவுத் தொழிலாளர்க்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையை மாற்ற முன் வருவார்களா?

இனியென்ன தடை?

சென்ற வாரம் மலையாளத்தில், திருத்தலா வென்ற விடத்தில் நம்பூதிரிகளினிடையே ஓர் விதவா விவாகம் நடைபெற்றதாகச் செய்தி கிடைக்கின்றது. நம்பூதிரிகள் பெரிய வைதீகப் பித்துடையவர்களாவர். பிராமண வகுப்பைச் சார்ந்த இவர்கள் தற்போதிருக்கும் எந்த ஜாதியார்களிலும் உயர்ந்தவர்கள் என்பது மரபு. கல்வி கற்பதும் தருமம் செய்வதுமே குல லட்சணமாகக் கொண்டொழுகும் இவர்கள் வடமொழிச்சாஸ்திரப் பரிஞானம் சாலவும் பெற்றவராவர். பிரஸ்தாபத் திருமணம் தான் இவர்களிடையே நடைபெற்ற முதலாவது சீர்திருத்த விதவா மணம். மணமக்கள் இருவரும் சாதாரணமானவர்களல்ல. மணமகனாகிய திரு. எம். ராமன் பட்டதிரிப்பாடு பெரிய மலையாள-சமஸ்கிருத பண்டிதரும், சிறந்த நூலாசிரியருமாவர். மணமகள் காலஞ்சென்ற இ. வி. நம்பூதிரிப்பாடின் விதவையான ஸ்ரீ உமாதேவியார். இவர்களுடைய கல்யாணத்தின்போது அப்பகுதியிலுள்ள ஏராளமான பிரமுகர்கள் விஜயம் செய்திருந்ததோடு நிலம்பூர் பெரிய (சீனியர்) ராஜா அவர்களும் பிரசன்னமாகி இருந்திருக்கிறார்கள். இதனால் தலைவர்களும் பிரபலஸ்தர்களும் விதவாக் கல்யாணத்தை ஆதரிக்கின்றார்களென்று ஏற்படுகின்றது தன்றோ? ஜாதிகளுக்குள் மலைபோன்ற நம்பூதிரிகளே—அதிலும் போதிய சாஸ்திர அறிவுடைய பண்டிதர்களே—விதவாக் கல்யாணம் செய்து கொள்வதென்றால், இதரர்கள் அதனைக் கையாளுவதில் தப்பிதமில்லையன்றோ?

காரைக்குடி
திரு. வீ. மு. சோமசுந்தரம் செட்டியார் 15-வது வார்டு அபேட்சகர்

காரைக்குடி முனிசிபாலிடிக்கு நடைபெறப் போகும் தேர்தலில் திரு. வீ. மு. சோமசுந்தரம் செட்டியா ரவர்கள் 15-வது வார்டின் அபேக்ஷகராய் நிற்பதாய்த் தெரிகிறது.

பண்டித ஜவஹர்லால் விடுதலை

வார்தாவிலிருந்து சமீபத்தில் திரும்பியவர்களிடை, ஒரு வதந்தி உலாவுகிறது. அதாவது பண்டித ஜவஹர்லாலின் விடுதலையைப் பற்றியது. இதைப் பற்றி அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருப்பதாகவும், காங்கிரஸ் நடைபெற்ற பிறகு நவம்பரில் விடுதலையடைவார் என்றும் சொல்லப்படுகிறது.

பூகம்பக் கஷ்டநிவாரண நிதி

ராஜப்பிரதிநிதியின் பூகம்பக் கஷ்டநிவாரண நிதிக்கு இதுவரை ரூ 5929,388-2-6 சேர்த்திருக்கிறது. இதல்லாமல் 100 பவுன் 17 ஷில்லிங் 10 பென்ஸும் ஒரு டாலரும் இந்நிதிக்குச் சேர்ந்திருக்கிறது.

மதிப்புரை.

அம்பலவாணன்

[ஆசிரியர்: பி. எஸ். சுப்பிரமணியம் எம். ஏ. கிடைக்கும் இடம்: அலையன்ஸ் கம்பேனி, மைலாப்பூர், சென்னை. விலை ரூ. 3.]

இந்தப் புத்தகம் பிரஞ்சு ஆசிரியனை விக்டர் ஹ்யூகோவின் Les Miserables என்ற நாவலைத் தழுவி எழுதப் பட்டது. அன்னிய நாட்டு இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டியது அவசியம். அப்பொழுது தான் உள்ளமும் நோக்கமும் விரியும்; அந்நிய நாட்டு இலக்கியத்தை மூலத்தின் சுவை குன்றாமல் மொழி பெயர்ப்பது சாத்தியமான காரியமல்ல. இதில் ஆசிரியர் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார் என்றே கூற வேண்டும். நடையை மட்டும் சற்று மென்மையாகவும் லாகவமாகவும் உபயோகித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்க அறிக்கை.

பர்மா நாட்டுச் கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் 11வது வருஷ அறிக்கை நம் பார்வைக்கு வந்தது, அதில் நிர்வாகச் சபை அங்கத்தினர் சாதாரண உறுப்பினர், கணக்குப் பரிசோதகர், பொக்கிஷதார் முதலியவர்களுடைய பெயர் ஜாபிதாவும், பிரஸ்தாப வருடத்தில் சங்கம் ஆற்றிய தொண்டின் விவரமும், வரவு செலவு கணக்கும் அடங்கியிருக்கின்றன. வேலை விவரம் மிகுந்த திருப்தியா யிருப்பதோடு இத்தகைய சங்கம் எக்காட்டிலும் எந்த ஜாதியாருக்கும் தேவையென்ற கருத்தை எழுப்புவதாயிருக்கிறது. சங்கம் பரந்த நோக்கத்தோடு பல காரியங்களைச் செய்துள்ள தென்பதைக் கூறாமலிருக்க முடியாது. பிரஸ்தாப வருடத்தில் செலவு நீக்கிச் சங்கத்திற்குச் சொந்தமாக பெருந் தொகை இருப்பிருப்பதாகத் தெரிகிறது. இச் சங்கம் நாளும் வளர்ச்சியுற்று அதிகமான ஆக்க வேலை புரிந்து செழித்தோங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

சீர்திருத்தத் திருமணம்.



—பொன்னையா ஸ்டுடியோ.

செப். 16-ந் தேதி திருச்சி புரோகித மறுப்புச் சங்க ஆதரவில் தென்னூர் பெத்தாச்சிச் செட்டியார் பங்களாவில் நடைபெற்ற கலப்பு மணம். மணமகன் ஸ்ரீ எம். கே. அழகப்பா (நாட்டுக்கோட்டை செட்டியார் வகுப்பு.) மணமகள் ஸ்ரீமதி புவனம்யாள் (தொழுவ வேளாளர் சமூகம்.)

விகட சூரியன்

இப் பெயரோடு திருவல்லிக்கேணியிலிருந்து பிரசுரிக்கப்படும் ஒரு காலணாப் பத்திரிகை வரப்பெற்றோம். திங்கட்கிழமை தோறும் இது வெளியிடப்படுவதாகத் தெரிகிறது. டிம்மி 1/4 அளவு கொண்ட இப் பத்திரிகையில் எட்டுப் பக்கங்களுண்டு. நம்முன்னிருக்கும் இதழில் சில கதைகளும் ரேஸ் ரிஸல்டும் முக்கியமாக இடம் பெற்றிருக்கின்றன. இதன் ஆசிரியர் எஸ். நாகராஜன் அவர்கள்.

மூக்கிழந்த மங்கை

(ராய. சொ.)

போதையும் பொன்னையும் வாரிக் கொட்டித் துள்ளி வீழும் அருவிநீர் ஓடும் ஆற்றின் பக்கத்திலே, பனி மலர் நிறைந்த இனிய சோலை சூழ் பஞ்சவடி என்னும் இடமொன்றிருந்தது. தனக்கு உரிமையான அரசையும் திருவையும் ஒரு தம்பிக்குக் கொடுத்து விட்டு, தனக்கு வாய்த்த இன்னொரு தம்பியுடனும் தனது வாழ்க்கைக்கு அமைந்த இள மயிலொடும் காடு போந்த தசரதன் மைந்தன், அவ் அழகிய இடத்தில் தங்கலானான். காடுறை வாழ்க்கையில் அம்மூவரும் இனிதே காலங் கழிக்குங்கால் அவர்கள் குடிசையை நோக்கி ஓர் அழகிய பெண் வடிவம் "அஞ்சொல் இள மஞ்ஞையென—அன்னமென—மின்னும் வஞ்சியென" வந்தது.

இருக்கை நோக்கி வந்தவரை வரவேற்றல் உலகியல் பன்றோ? எனவே, அக் குடிசையிலிருந்த தலைவன், "தீதில் வரவாக! திருநின்வரவு; சேயோய்! போதவுளது எம்முழையோர் புண்ணியமதன்றோ? ஏது பதி? ஏது பெயர்? யாவர் உறவு?" என்று மொழிந்து வரவேற்று இனிய சொற்களால் வரலாறு வினவினான். அந்நங்கை, யான் "பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி" சிவனுக்கு நண்பனான குபேரன் தங்கை; திக்கு யானைகளையெல்லாம் தொலைத்து, இறையவன் வாழ் வெள்ளி மலையை எடுத்து, உலகம் முழுதையும் அரசு செலுத்துகின்ற இராவணனுக்குப் பின் பிறந்தவள்; என் பெயர் 'காமவல்லி' நான் கன்னி எனக் கொஞ்சி கொஞ்சி மொழிந்தாள்.

கேட்டான் இராமன்; இவளைப் பற்றி அவனுக்கு ஐயப்பாடு தோன்றிவிட்டது. "ஏ! பெண்ணே! நீ இராவணன் தங்கையென்பது உண்மையானால், இவ்வழகிய மானிடப் பெண் வடிவம் உனக்கு எவ்வாறு இயைந்தது" என்றான். அவன் கேட்டு வாய் மூடுமுன், "அண்ணலே! யான் பிறவியில் அரக்கரோடு தொடர்புடையேன் எனினும் அவர் வாழ்க்கை முறையை யான் வெறுப்பவள்; எனது ஆராய்ச்சியின் பயனாக நல் நெறியையே கடைப்பிடிக்கின்றேன்; தேவரிடத்திலே இவ்வடிவத்தை அடியாள் பெற்றேன்" எனத் தாழ்மையாக உரைத்தாள் அத்தையல்.

"ஓ! அப்படியா! இமையவர் தலை வணங்கிய இந்திரனையும் ஏவல் கொண்டு அவனி முழுதையும் ஆளுகின்ற இராவணனார் தங்கையாக நீயிருப்பாயானால், அதற்கேற்ற ஆடம்பர வைபவங்களோடு காணப்படாமல் ஒரு துணையுமின்றித் தன்னந் தனியளாய் இக்காட்டில் வருதற்கு என்ன காரணம்?" என்றான் இராமன்.

"பெரியோய்! நான் அந்த நெறி தவறுபவர்களோடு நெருங்குவது கிடையாது; எனக்குத் தேவர்களிடத்தும் முனிவர்களிடத்துமே விருப்பம்; ஒரு காரியமாக உன்னைக் காணும் பொருட்டு வந்தேன்" என்றாள் அவன் மீது காமங் கொண்ட காமவல்லி.

"அஃதென்ன காரியமோ? சொல்! செய்யக்கூடியதானால் செய்கிறேன்," என்றான்.

"காதலே! என் போன்ற குலமகளிர்க்குத் தாங்கள் கொண்ட காமத்தைத் தாங்களே நாணின்றி உரைப்பதென்பது இயலாதது; எனினும் என்னுடை ஆருயிர், காமக்கனலால் இப்போது வேகின்றது; எனக்கு இங்கு ஒரு துணையுமில்லை; ஆதலின் நானே துணிந்து உரைக்கின்றேன்; காமன் என்று சொல்லப்படுகின்ற ஒருவன் செய்கின்ற துயரத்தை நீ துடைக்க வேண்டும்" என்று கூறி நின்றாள் காமவல்லி.

திடீரென்று இவ்வுரையை அப்பெண் வாயினின்று கேட்டதும் தூக்கி வாரிப் போட்டது இராமனுக்கு. அவள் துணிவு கண்டு வியப்புற்றவனாகி ஒன்றும் தோன்றாது சிறிது மௌனமாக இருந்தான்.

அவளுக்குக் காலம் போவது பொறுக்க முடியவில்லை. அவனது மௌனம் ஒருகால் தனக்குச் சாதகமாக இருக்கலாம் என அவள் எண்ணுகின்றாள். அவனுக்கு ஆசையை ஊட்ட மேலும் பேசுகின்றாள்.

"எழுதரு மேனியாய்! நீ இங்கு இருப்பதை இவ்வளவு நாட்களாக நான் அறியாது போய் விட்டேன்; பெண்மையும் இளமையும் வீணாகப் பயனில்லாது போக நாள் பல கழிந்துவிட்டன" எனச் சாமர்த்தியமாகப் புகன்றாள் பூவை.

அவள் அரக்கியென்றும் பொய் வேடங் கட்டிக்கொண்டு வந்திருக்கிறாள் எனவும் உணர்கின்றான் இராமன். ஆகலான் அவளை உடனே மறுத்து அனுப்பாமல் கொஞ்சம் வேடிக்கைச் செய்ய விரும்புகின்றான்.

"சுந்தரி! நீ சொல்லுவது பழைய முறைக்கு விரோதமல்லவா? அந்தணர் பாவை நீ, யான் அரசரில் வந்தேன்" என்றான்.

அந்நங்கைக்கு அவன் மொழிந்த இக்காரணம் பொருத்தமாகப் படவில்லை. "காதலைத் தடுப்பதற்கு நீ கூறும் வகுப்பு வேற்றுமையே காரணமாகுமானால் நான் உயிர் வாழேன்; சாகின்றேன்" எனப் பகன்று நின்றாள்.

"பெண்ணே! அஃதிருக்கட்டும்; நீயோ அரக்கர் பெண்; நான் மானுடன்; அரக்கர்க்கும் மானுடர்க்கும் மணம் எப்படிப் பொருந்தும்?" என்றுரைத்தான்.

"அரசே! நீங்கள் இப்படியெல்லாம் இயம்புதல் தகாது; நான் அரக்கப் பிறவியை ஒழித்து மானுடப் பிறவி பெற்றுவிட்டேன்; என்னைப் பாருங்கள்! நான் அரக்கியாகவா தோற்றுகின்றேன்?" என வருத்தம் கலந்த காதல் மொழியிற்கூறி ஒரு வீச்சு வீசினாள் காமவல்லி.

"சரி! என்னதான் நீ கூறினாலும் உன்னுடைய சகோதரர்களோ போராற்றல் வாய்ந்தவர்கள்! ஒரு சகோதரன் உலக முழுமைக்கும் தனித் தலைவன்; இன்னொருவன் செல்வ மலையில் படுத்துப் புரளும் குபேரன்; அவர்கள் அனுமதியின்றி நான் உன்னைக் கொள்தல் ஆகாது; அவர்கள் விருப்பொடு கொடுப்பாராயின் ஏற்றுக்கொள்வேன்" என்று கூறினான்.

"வீரனே! என்னைத் தள்ளுதற்குக் காரணங்களையே கூறிக்கொண்டிருந்தால் என்னால் சகிக்க முடியாது; பழந்தமிழ் மக்களின் காதல் மணமுறை நீ அறியாததா? இப்போது நாம் காதல் மணத்தால் கலப்போம். எனது உடன் பிறந்

தோர்க்கு இதில் மாறுபாடு இராது. எதேனும் இயம்பி என்னைத் துன்புறுத்தாதே. அது தவிர, என்னை நீ பெற்றுவிட்டால், பிறகு இவ் உலகத்தை மட்டுமல்ல, தேவலோகத்தையும் நீயே ஆளலாம்; யாவரும் நின் அடிவருடி ஏவல் செய்து நிற்பர்; மறுத்துரையாதே" எனக் கெஞ்சி நின்றாள் மங்கை.

"நல்லது! அரக்கர் தம் கூட்டுறவும் உன் எழில் நலம் நுகரும் பேறும் பிறவும் பெற்றுவிட்டேன்! இனி எனக்கென்ன குறை! அயோத்தியை விடுத்துக் காடுபோந்த பின்னரே எனது தவப்பயன் பலித்தது!" என்று கூறிக் கலகல வென்று சிரித்தான் கம்பராமன்.

இந்நிலையில், குடிசையின் உள்ளேயிருந்து அரக்கரைத் தொலைக்க இவ் அவனியில் தோன்றிய—காதலனைத் தொடர்ந்து காடு போந்த—மெல்லியலாள் இராமனை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் மீது வீழ்ந்தது காமவல்லியின் கண்கள். அவள் எழிலைக் கண்டாள். அப்படியே மயங்கிவிட்டாள். "கண்பிற பொருளிற் செல்லா, கருத்தெனின் அஃதே, கண்ட பெண்பிறந்தேனுக் கென்றால் என் படும் பிறருக்கு" பெண்ணாகப் பிறந்த என்னையே அவள் எழில் இப்பாடு படுத்துமானால், பிறரை என்னதான் செய்யாது என நினைக்கின்றாள். ஆடவர், பெண்டிர் என்ற "இரு திறத்தாக்கும் செய்த வரம்பு இவர் இருவர்" என்றுரைக்கின்றாள். 'இவன் தனது மெய்க்காதலியை இவ்வனத்தே கொண்டுவந்திருக்க மாட்டான்; இவளும் என்னைப்போல இடையே வந்து சேர்ந்தவளாகவே இருத்தல் வேண்டும்; இருக்கட்டும்; ஒரு தந்திரம் செய்கிறேன்' என்று கூறிக்கொண்டாள்.

"ஏ! வீரா! நான் அஞ்சுகின்றேன்! அஞ்சுகின்றேன்!! இதோ வருகின்றாளே; இவள் பெண்ணென்று நினைத்து விடாதே! இவள் பெண்ணல்ல! இவள் அரக்கி! மாய அரக்கி! 'இவளைத் தூரத்து! என் பயத்தைப் போக்கு!" என அலறினாள் காமவல்லி.

"ஆ! கண்டு பிடித்துவிட்டாய் உண்மையை! உன்னுடைய தன்மை உன்னாலேயே வெளிப்பட்டு விட்டது" எனச் சொல்லிச் சிரித்தான் இராமன்.

எதிரே நிற்பவள் பிதற்றலைக்கண்டு நடுங்கிக்கொண்டே விரைந்து ஓடி முகிலுடன் மின் சேர்ந்ததுபோல இராமனைத் தழுவிக்கொண்டாள் மிதிலைப் பொன்.

"இனி இவ் அரக்கியோடு விளையாடுதல் தகாது; வேடிக்கை சில சமயம் தீமை பயந்துவிடும்" எனக் கருதுகின்றான் இராமன். "ஏ! பெண்ணே எங்கட்குத் துன்பம் தரத்தக்கவாறு நீ நடந்துக் கொள்கிறாய்! உன் செயல் தவறானது; இனி இங்கு நிற்காதே; விரைந்து போய்விடு; இளையவன்—என் தம்பி—அறிந்தால் கோபிப்பான்" என்று கூறினான்.

"மன்னா! நன்றாக இருக்கிறது உன் கூற்று! அமரரும் அரங்கனும் பிறரும் என்னைப் பெறத் தவஞ் செய்து நிற்கின்றார்; இக்கள்ளியை நச்சியன்றோ நீ என்னை இகழ்கின்றாய்" என்றாள் அரக்கி.

"உன் பேச்சை நிறுத்து; மரியாதையாகப் போய்விடு" என்று கூறிவிட்டு அவ்விடத்தை விட்டகன்று சீதையைக் கைகோத்து வேறிடம் சென்றுவிட்டான் வீரன்.

யோஜித்தாள் வந்தவள், இப்பெண்ணை விரும்பியே இவன் தன்னை வெறுக்கின்றான் எனத் தீர்மானித்தாள். "இவனை எப்படியும் அடைந்தே தீர்வேன்; அதற்கு வேண்டியதைச் செய்வேன்" என மனத்தே நினைத்து அவ்விடத்தை விட்டகன்றாள். கதிரவன் மறைந்தான்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. இராமன் அதிகாலையில் எழுந்து நதிக்குச் சென்று விட்டான். சீதை பொழிலில் ஓரிடத்து வீற்றிருந்தாள். சற்று தூரத்தே இலக்குமணன் இருந்தான். இராமனை நீர் நிலையில் கண்டாள் நேற்று வந்த பெண்; சீதை ஓரிடத்துத் தனித்திருப்பதையும் வந்து பார்த்தாள்; தம்பி தூரத்தேயிருந்ததை அவள் கவனிக்கவில்லை. "இந்தப் பெண்ணைத் தொலைத்தாலொழிய இராமனை அடைய முடியாது; அதற்குச் சமயம் இதுதான்" என நினைந்தாள். தனது இயற்கைத் தோற்றத்தோடு—ஓர் பேராக்கியாக—பயங்கர ரூபங் காட்டி விரைந்து சீதையை நோக்கி ஓடினாள். இந்நிகழ்ச்சியைக் "கனியிரும் பொழில் காத்து அயல் இருந்தவன் கண்டான்."

"நில்லடீஇ எனக் கடுகினன்." "பெண்ணென நினைந்தான்." இவள் பெண்ணல்லவா; இவளைக் கொல்தல் தகாது எனக் கருதினான். ஆனாலும் இவளைச் சும்மாவிட்டால் இன்னல் விளைவித்துக் கொண்டேயிருப்பாள் என எண்ணினான். கூந்தலைக் கையிலே பிடித்தான். வாளை உருவினான். நீண்ட மூக்கையும் பிற சிலவற்றையும் வெட்டி வீழ்த்தினான்.



வெட்டப்பட்ட இடங்களினின்றும் பெருகிய ரத்த வெள்ளம் ஆறுக ஓடியது. வானகமும் மண்ணகமும் நடுங்க முழைபோன்ற வாயைத் திறந்து 'ஓ' வென்று அலறினள் அரக்கி.

"மலையெடுத்த தனியலையே இவை காண வாராயோ?"

"இந்திரனும் மலர் அயனும் இமைய வரும் பணிகேட்பச், சுந்தரி பல்லாண்டு இசைப்ப உலகேழுந் தொழுது எத்தச், சந்திரன்போல் தனிக்குடைக்கீழ் நீ யிருக்கும் சபை நடுவே, வந்து அடியேன் நாணுது முகங்காட்ட வல்லேனே?"

"அரன் இருந்த மலையெடுத்த அண்ணுவோ! அண்ணுவோ!!"

"தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளையிலிட்டு, வானவரைப் பணிகொண்ட மருகாவோ! மருகாவோ!!"

"கொல்லீரும் படைக்கும்ப கருணனைப்போல் குவலயத்தில், எல்லீரும் உறங்குதிரோ! யானழைத்தல் கேளீரோ!"

என்று இவ்வாறு இடி இடிப்பது போல் கதறுகிருள் மூக்கிழந்த நங்கை. அதுகாலை, "நின்றந்த நதியகத்து நிறை தவத்தின் குறை முடித்து, வன்திண் கைச் சிலை நெடுந்தோள் மாகத்தின் மலை வந்தான்." வந்தானை நோக்கி, வயிற்றிலே அடித்துக்கொண்டு,

"அந்தோ! உன் திருமேனிக்கு அன்பிழைத்த வன்பிழையால், எந்தாய்! யான்பட்டபடி இதுகாண்" என்று அவன் எதிரே வீழ்ந்தாள் சூர்ப்பணகை.

"இவள் ஏதும் கேடு செய்திருப்பாள்; அது காரணமாக இளையவன் இப்படிச் செய்திருத்தல் வேண்டும்" என எண்ணுகின்ருன் இராமன்.

"நீயார்?" என்று கேட்டான்.

"என்ன! என்னைத் தெரியாதா! இராவணன் என்று சொல்லப்பட்ட "விண்ணுலக முதலாக எவ்வுலகு முடையானுக்கு உடன் பிறந்தேன் யான் என்ருள்."

"சரிதான்! எங்களுடைய இருக்கைக்கு வந்ததற்குக் காரணம் என்ன" என்ருன்.

"காரணமா? என்ன இப்படித் தெரியாது போல் கேட்கலாமா?"

"வேம் இருந்தை எனக் கனலும் வெங்காம வெம்பிணிக்கு, மாமருந்தே! நெருநலினும் வந்திலனே யான்" என்ருள்.

"அப்படியா?"

"செங்கயல்போல் கருநெடுங்கண் தேமரு தாமரை யுறையும், நங்கையிவர் என நெருநல் நடந்தவரோ நீர்" என்ருன்.

"ஆம்!"


"கொங்கைகளும் குழைக் காதும் கொடி மூக்கும் குறைத்து அழித்தால், அங்கண் அரசே! ஒருவர்க்கு அழியாதோ அழகு!" என்ருள்.

"தம்பி! என் இவளை இப்படிச் செய்தாய்? என்று கேட்டான். நடந்ததை நவின்ருன் இளையவன். நேற்றுக் காமவல்லியாக வந்த அரக்கி இடைமறித்து,

"மாற்றவளைக் கண்டாக்கால் அழலாதோ மனம் என்ருள்." 'சக்களத்தியைத் தண்டிக்க முயன்றதில் பிழை என்ன' என்று கேட்டுவிட்டாள்.

"பெண்ணே நீ ஓடிவிடு; இனி இங்கு நின்று வீணுக ஏதும் பேசிக் கொண்டிருத்தல் நன்றல" என்று நவின்ருன் இராமன். மூக்கு முதலியவற்றை இழந்தும் அவன்மீது கொண்ட காமத்தை அவளால் இழக்க முடியவில்லை.

"வீணுக நீங்கள் சிரமத்திற்கு ஆளாகப் போகின்றீர்கள்! என் துன்பத்தை வலிந்து விலைக்கு வாங்குகிறீர்கள்? 'ஆக்கரிய மூக்கு உங்கை அரியுண்டாள் என்ருரை' நாக்கரிந்து விடுவான் என் அண்ணன்; தங்கை மூக்கிழந்தாள் என்ற செய்தியை உரைப்பவரையே அவன் நாக்கை அறுத்துவிடுவான் என்ருல், உங்கள் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா? இன்னும் ஒன்றும் தவறிப் போகவில்லை; இப்போதும்



கொச்சி மகாராஜா செப்டம்பர்மீ 17-ந் தேதி திருச்சிராப்பள்ளி ஜங்ஷனில் வந்திறங்கியபோது, பல பிரமுகர்கள் வரவேற்ருர்கள். மகாராஜா நடுவில் காணப்படுகிருர். —Pon

என்னைச் சேர்த்துக் கொண்டால் உங்கட்கு ஒரு சிரமமும் நேராது."

"போக்கினீர் என் நாசி.........." அதனால் "பெண்மைக்கோர் பழுதுண்டோ?" மூக்குப் போனதற்காகப் பெண்மையா குறைந்து விட்டது? தவிர,

"மேக்குயரும் நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றோ." மேலே உயர்ந்திருக்கும் நீண்ட மூக்குப் பெண்களுக்கு அநாவசியமல்லவா? அது தெரிந்துதான் அப்படிச் செய்தீர்கள்! அதுவுமல்லாமல் நீங்கள் என்னை மூக்கு அறுத்ததன் காரணத்தை நான் அறிவேன்! அதுகூட என்னால் அறிய முடியாதென்று நினைத்தீர்களா என்ன? 'இப்படிச் செய்தால் இவளை வேறு யாரும் விரும்பமாட்டார்கள்; என்றும் நாமே உரிமையோடு ஆளலாம்' என்பதுதான் உங்கள் கருத்து. அதை கொண்டுதான் இப்போது முன்னைவிட இரட்டிப்புப் பங்கு அன்பு கொண்டிருக்கிறேன். இன்னும் விளையாடாதீர்கள்! என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றாள் மூக்குப் போனதையும் பொருட்படுத்தாமல்.

"ஏது நீ உயிரைக் கொண்டுபோக மாட்டாய் போல் தோன்றுகிறது. உன் பாட்டி தாடகையை உயிர் வாங்கிய அம்பு இருக்கிறது! தெரிந்து கொள்! உங்களைத் தொலைப்பதற்காகவே நாங்கள் வந்திருக்கிறோம் என்பதை உணர்வாயாக! அரக்கரை யெல்லாம் கொன்று குவித்தபிறகே அயோத்தியை நண்ணப் போகிறோம்; நீ போற்றல் வாய்ந்தோர் என்று இப்போது புலம்பிய அத்தனை பேரையும் கொண்டுவா இங்கே! பார்க்கலாம் அவர் வலிமையை" என்று முழக்கினான் இராமன்.

இன்னும் அவளுக்குப் போக மனமில்லை. விவாதத்தை வேறு ரசமாகத் திருப்பினாள்.

"இராமா! நீ அவளை விட வேண்டாம்; அவளோடு கூட நானும் இருக்கிறேன். நான் என்ன பெரும்பாரமா! "காம்பறியுந் தோளானைக் கைவிடா எனினும் யான் மிகையோ!" தவிர நீ கூறியவாறு அரக்கர் அனைவரையும் கொல்வதற்கு நான் மிகவும் உபயோகமாக இருப்பேன்; அரக்கர் மாயம் உங்கட்குத் தெரியாது; நான் எல்லாம் உங்கட்குச் சொல்லுவேன்; "பாம்

காந்தி சொற் பெருமை

ராய. சொ.

வஞ்சி விருத்தம்.

26-8-32-ல் வேலூர்ச் சிறையில் பாடியது.

(உரிமை ஆக்கியோனுடையது.)

(௧)

இழுக்கல் நிலத்தில் இடருறு,
வழுக்கும் ஞான்று, மகாத்துமன்
வழுத்தும் அரிய வாய்ச்சொலே;
ஒழுக்கம் தாங்கும் ஊன்றுகோல்!

(௨)

வெந்த புண்ணில் வேல்கொடு,
உந்தும் உணர்வில் உலகைவீழ்
விந்தை மக்கள் வீழ்ந்திட,
முந்தும் எந்தை மொழிகளே!

(௩)

வற்றல் மரமும் வளர்ந்திடப்
பற்றும்; அரிய புண்புடை
ஒற்றைக் கத்தர் உடுத்தவன்
பெற்றம் மிக்க பேச்சரோ!

(௪)

எள்ள லில்லா இருங்குண
வள்ளல் காந்தி வாயுரை;
கொள்ளை யின்பம் கூடிப்பூ
அள்ளி யுண்ணும் அமுதமால்!

(௫)

வாடு பயிரை வளர்த்தெழில்
நாடு செழிக்க நல்கிடும்,
பீடு கொண்ட பெருமழை;
கேடில் காந்தி கிளர்மொழி!

(௬)

அமுதம் அன்ன தண்ணளி,
நமையுன் பிக்கும் நன்மதி;
அமைதி கொண்ட அந்தணன்
குமுத வாயின் கூறுரை!

(௭)

தமிழு டன்னற் சந்தனங்
கமழு தென்றற் காற்றதாம்;
அமிழ்தம் ஈயும் அறிவினன்
மகிழ நல்கு வாசகம்!

(௮)

உற்ற நோயை ஓட்டிடும்
பெற்ற மிக்க பெருமருந்
திற்றை உலகுக் கீடிலா
வெற்றிக் காந்தி மெய்ம்மொழி!

(௯)

இந்தி யத்தாய் இருந்தளே,
முந்த அறுக்கும் மூரிவாள்;
சிந்தை யிருந்த சீரியான்
பந்தம் விட்ட பண்புரை!

(௧௦)

சாந்தம்! வீரம்! தண்ணளி!
ஏந்து பெருமை இலங்கிடும்
காந்தி கூறும் கருத்துரை;
மாந்தர் வாழ வைக்குமால்!

பறியும் பாம்பின்கால் என மொழியும் பழமொழியும் பார்த்திலீரோ?" என்றாள்.

"அண்ணா! இவள் போகமாட்டாள்; இனி இவளைத் தொலைப்பதைத் தவிர வேறு வழியில்லை; என்ன ஆணை!" என்றான் இளையவன். "ஆம்! இவள் போகாவிட்டால் வேறுவகையில்லை" என்றான் இராமன். இனி நின்றால் உயிர் போய்விடும் என உணர்ந்தாள் அரக்கி. போட்டாள் ஒரு போடு.

இவ்வளவு அவமானத்தை அடைந்தும்—மூக்கு அறுபட்டும் இனியும் உங்களோடு வாழ நான் விரும்புவேனா? உங்களை ஆழம் பார்த்தேன். கொண்டு வருகின்றேன் உங்கள் உயிர் வாங்கும் கூற்றுவனை!"

"காற்றினிலும் கனலினிலும் கடியானைக்—கொடியானைக்—கானை--உங்கள் கூற்றுவனை—இப்பொழுதே கொணர்கின்றேன் என்று சலம் கொண்டு போனாள்" மூக்கிழந்த மங்கை.

கனகப்ரியா

அல்லது

காட்டு ரோஜா மலர்

(திரு. கே. வீ. எஸ். வாஸ்)

"நீங்கள் என்னதான் நினைக்கிறீர்கள்? அதை வாயால் நன்கு தெரிந்துக் கொள்ளும்படித்தான் சொல்லுங்களேன்!" என்றார் துப்பறியும் துளஸிதாஸ்.

"நானிருக்கும் நிலைமையில் நீங்களிருந்தால் என்ன நினைக்கக்கூடுமென்று சற்று யோசித்துப் பாருங்கள். நடுக்காட்டில், அதிலும் மரங்களடர்ந்த இடத்தில் குடிசை காணப்படவேண்டிய காரணமென்ன? அது ஒருக்கால் வேடுவர்களின் வாசஸ்தலமோ வென்றும் கருதவிடமில்லை. வெளிப் பார்வைக்கு அது குடிசையைப் போன்றிருப்பினும் அதன் உள்ளே மேஜை நாற்காலிகளிப்பது மேலும் வியப்பை யுண்டாக்குகின்றதன்றோ? இவைகளெல்லாவற்றையும்விட அங்கு டெலிபோன் கருவிகளிருப்பதுதான் என்னைத் திடுக்கிடச் செய்கிறது! அங்கிருந்து யார் யாருடன் டெலிபோனில் பேசுகிறார்களெனக் கண்டு பிடிக்கவேண்டும். குடிசை மரங்களினிடையே மறைவாக விருப்பதையும், அங்கு டெலிபோன் இருப்பதையும் கவனித்தால் ஒன்று அது பெரிய கள்ளக் கூட்டமொன்றின் தலைவனது இருப்பிடமாக விருக்கவேண்டும். அல்லது புரட்சிக்காரர்களின் இரகசிய இராக்காலச் சந்திப்பு இடமாக விருக்கவேண்டும்! இரண்டைத் தவிர வேறு என்னதான் முடிவுக்கு நான் வரக்கூடுமென்று நீங்கள் சொல்லுங்கள்!" என்றார் பாஸ்கன்.

"சரி! உங்களுக்கு இந்த விஷயமெல்லாம் எப்படித் தெரிய வந்தது?" என்றார் துளஸிதாஸ்.

"எப்படித் தெரிய வந்ததென்று கேட்கிறீர்கள்? சொல்கிறேன். நேற்றுக்காலை நான் உதயனபுரியிலிருந்து ரமணீ புரத்திற்கு வருகையில் நடுவிலுள்ள காட்டின் வழியே பிரயாணம் செய்யும்படியாயிற்று. நடுக்காட்டை யடைந்ததும் என் குதிரை தடுக்கிக் கீழே விழுந்து மறுபடி எழுந்திருக்க முடியாமல் அதன் காலில் காயம்பட்டு விட்டது. ஆதலின் மிகுதி தூரத்தை நான் காலினாலேயே நடந்துவர வேண்டிய அவசிய மேற்பட்டு விட்டது. நான் சிறிது தூரம் வரவும், ஓரிடத்தில் அதிகமாக மரங்களில்லாமல் வானம் தெரிந்தது. சற்று வெயிலுமடித்தது. உடனே இவ்வளவு நேரம் வெயிலையும் வானத்தையும் பாராது பிரயாணம் செய்த நான் சற்று அண்ணாந்து நோக்கினேன். என்ன விந்தை! மரங்களின் உயரே ஓர் கம்பி போவதைக் கண்டேன். கவனித்துப் பார்த்ததில் அது டெலிபோன் கம்பியாக விருந்தது. இது எங்கிருந்து ஆரம்பித்து எங்கு போகிறது என்று அறிய ஆவலுற்றேன். ஓர் மரத்தின்மீது ஏறிக் கவனிக்கவே அக்கம்பி வெகு தூரத்திலுள் ஓர் மரத்தின் நுனியில் முடிந்தது. அந்த மரத்தை யடைந்தேன். அங்கு ஓர் சிறு குடிசை காணப்பட்டது. அதற்குள் டெலிபோன் கருவிகளும், மேஜை நாற்காலிகளு மிருந்தன. ஆகவே உயரே காணப்பட்ட டெலிபோன் கருவி இக்குடிசையிலுள்ள ஒருவனுடன் சம்பாஷிப்பதற்கெனவே முடிவுசெய்து இவனுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் யார் என அறிய ஆவலுடன் கம்பியைத் தொடர்ந்துகொண்டே வந்தேன். ஆனால் சிறிது தூரம் வரையில்தான் கம்பி மரங்களினுயரே சென்றதேயன்றி அதன் பின் பூமியில் புதைக்கப்பட்டிருந்தது! இவ்விஷயம் மிகவும் இரகசியமானதாதலின் இதை வேறொருவரிடமும் கூறவில்லை! ஆனால் ஒன்றுமட்டும் நான் நிச்சயமாகக் கூறுவேன். அடிக்கடி இதே காட்டில் கொலை களவுகள் நிகழ்வதாகத் தெரிவதால் இக்குடிசையில் சில கள்வர்கள் தானிருக்கவேண்டுமெனத் தீர்மானிக்கிறேன்! இல்லாவிட்டால் சில புரட்சிக்காரர்களிருக்கலாம். அவர்களே காட்டில் கொலையும் களவும் துணிந்து செய்துக்கொண்டிருக்கலாம்!" என்றான் பாஸ்கான்.

"சரி, அந்த டெலிபோன் கனக்ஷன் டவுனில் யாருடனிருக்கக்கூடும்? கள்வன் எதற்காக டவுனிலுள்ளவர்களுடன் பேசவேண்டும்?"

"ஏன், டவுனிலுள்ள சில பிரமுகர்கள் இந்தக் கொள்ளைக் கூட்டத்துடனோ அல்லது புரட்சி இயக்கத்திலோ சம்பந்தப்பட்டு அவர்களுடன் புரட்சித் தலைவன் இந்தக் குடிசையினின்று இரகசியமாகப் பேசக்கூடாதா? அமெரிக்காவிலுள்ள 'க்லு க்ளக்ஸ் க்ளான்' (Klu Klux Klan) என்ற புரட்சி இயக்கத்தில் எவ்வளவு பெரிய கோடீஸ்வரப் பிரபுக்களின் ஒத்துழைப்பு மர்மமாகவேயிருக்கிறது? அதைப்போல் ஏன் இருக்கக்கூடாது? இதில் ஏதோ பெரிய மர்மமிருக்கிறது என்பதுமட்டும் நிச்சயம். வேண்டுமானால் இதில் உழைத்துப் புகழைப் பெறுங்கள். இல்லாவிடில் இஷ்டம்போல் செய்யுங்கள். நான் போய் வருகிறேன்!" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றான் பாஸ்கான்.

பாஸ்கான் சென்றதும் துளஸிதாஸுக்கு பற்பல யோசனைகள் தோன்றின. ஒரு சமயம் ஷை குடிசையில் கள்வர்களோ அல்லது புரட்சியாளர்களோ இருப்பதைக் கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்தால் நாம் எவ்வளவு புகழ்ச்சிக்கு உரியவராவோம் என்று யோசித்தான். அங்கு ஏதாயினும் இரகசியச் சங்கமில்லாவிடில் டெலிபோன் கருவிகள் காணப்பட வேண்டியதன் அவசியமென்ன வென்று ஆலோசித்தான். எப்படி யிருந்த போதிலும் இதில் தன்னாலியன்ற மட்டில் உழைப்பதெனத் தீர்மானித்து ஷை காட்டில் அருகிலுள்ள இந்திரபவனம் ஓட்டலையடைந்து அதன் மானேஜருக்கு ஒருசமயம் ஏதாவது தெரிந்திருந்தாலும் தெரிந்திருக்கக் கூடுமென்று சந்தேகித்து அவரைத் தனிமையிலழைத்து இரகசியமாக விசாரித்தான். ஆனால் அவரோ "அக்காட்டில் கள்ளச் சங்கமோ அல்லது புரட்சிக்காரர்கள் கூட்டமோ இருக்குமென்பதைச் சிறிதும் நம்பக்கூடவில்லை" என்றார். அவருடைய களங்கமற்ற முகத்தினின்று உண்மையில் மனதிலொன்றை வைத்துக்கொண்டு வெளியிலொன்

றைக் கூறுபவராகத் துளஸிதாஸுக்குத் தோன்றவில்லை.

"அப்படியானால் காட்டின் தென்புறமாக ஓர் பெரிய மாளிகை காணப்படுகிறதே! அது யாருடையது! அந்த பந்தோபஸ்தைப் பார்த்தால் எனக்குச் சிறிது சந்தேகத்தைக் கொடுக்கிறதே!" என்றார் துளஸிதாஸ்.

"ஓ! அதுவா? அங்கு ஓர் ரிடயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் வசிக்கிறார். அங்கு எவரும் வரக் கூடாதென்பது கட்டளை. எவரையும் அவர் வீட்டினுள் சந்திப்பதில்லை. ஏன், அவர் ஒருவருடனும் பேசுவதில்லை யென்றே கூறலாம். அவரை மிகவும் அவசியமாகப் பார்க்க வேண்டியவர்கள் தபாலின் மூலம் தெரிவித்தால் இந்த ஒட்டலில் வந்து சந்தித்துவிட்டு உடனே போய்விடுவார்!" என்றார் ஒட்டல் மானேஜர்.

"அவர் சமூகத்தை அப்படி வெறுப்பதின் காரணமென்ன? நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அவர் ஓர் நூதன மனிதராக விருக்கவேண்டு மென்றே தோன்றுகின்றது!" என்றார் துளஸிதாஸ்.

"ஆம்! அவர் ஓர் நூதன மனிதரே! ஆனால் சிறிதும் கள்ளம் கபடமறியாதவர்! அவருக்கு கனகப்ரியா வென்று ஓர் அழகிய பெண்ணிருக்கிறாள். அவளை ரம்பை ஊர்வசி முதலிய தேவ மாதர்களுக்கு ஒப்பிடலாமே யன்றி வேறெந்த புவன மாதர்களுக்கும் ஒப்பிட வியலாது. அவளை நாங்கள் காட்டு ரோஜா மலர் என்றழைப்பது வழக்கம். அவளுக்கு வயது - இருபதாகியும் இன்னும் மணம் செய்விக்காமலே வைத்திருக்கிறார். ஆடவர்களைக் கண்ணினால் காணவும் அவள் அனுமதிக்கப்படுவதில்லை. எங்கு எந்த வாலிபனையேனும் சந்தித்துக் காதல்கொண்டு விடுவாளோ வென்று அஞ்சியே அவள் தந்தை ஆடவர்கள் எவரையும் வீட்டினுள் வரவழைப்பதில்லை. கனகப்ரியாவை வீட்டை விட்டும் வெளியிலனுப்புவதில்லை!" என்றார் மானேஜர்.

"கொடுமை! கொடுமை! பருவ மங்கையை இங்ஙனம் உலக சுகங்களினின்று சிறை வைத்திருப்பது கொடிது!" என்றார் துளஸிதாஸ்.

"இல்லை! காதல் என்பதில் அவருக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை. எங்கு காதல் விஷயத்தில் கனகப்ரியா ஏமாந்து விடுவாளோவென அஞ்சியேயவளை இங்ஙனம் அவர் சிறை வைத்திருக்கிறார். அவளுக்குத் தக்கபடி நல்ல தனவந்தன் ஒருவனைப் பார்த்து மணம் செய்வித்து அவளைச் சுகவாழ்க்கையிலீடுபட வைக்க வேண்டுமென்பதே அவர் விருப்பம்!" என்றார் ஒட்டல் மானேஜர்.

"ஆனால் கானகத்திலுள்ள டெலிபோன் ஓசைக்கும் இவருக்கும் எவ்வித சம்பந்தமுமிருக்கா தென்று கூறுகிறீர்கள்?" என வினவினர் துளஸிதாஸ்.

"ஆம்! இவரைச் சிறிதும் சந்தேகிக்க இடமில்லை?" எனப் பதில் பகர்ந்தார் ஒட்டல் மானேஜர்.

* * *

அன்றிரவு எட்டுமணி சுமாருக்கு துளஸிதாஸ் ஷை கானகக் குடிசையினருகில் நிற்கிறார். ஓசை வெளிப்புறம் பூட்டப்பட் டிருக்கிறது. துளஸிதாஸ் பூட்டை யுடைத்துக் குடிசையினுள் நுழைந்தார். குடிசையில் எங்கும் ஒரே இருட்டாகவிருந்தது. தனது காந்த விளக்கி னுதவியால் அறையைப் பரிசோதித்தார். ஆம்! அங்கு எலெக்ட்ரிக் விசைகளும், காந்த விளக்குகளுமிருந்தன. விசையைத் திருப்பிவிட்டு விளக்கையேற்றி அறையைப் பரிசோதிக்கலானர். அங்கு ஓர் வட்ட மேஜையும் அதன்மீது டெலிபோன் கருவிகளுமிருந்தன. மேஜையினருகில் ஓர் நாற்காலி யிருந்தது. இவைகளைத் தவிர அக்குடிசையில் வேறொன்றுமில்லை. துளஸிதாஸுக்கு ஓர் யோசனை தோன்றியது. இக்குடிசைக்கு அடியில் ஏதாவது மர்ம அறைகளிருக்குமோவென எண்ணினன். அப்படி நிலவறைகளிருக்கக் கூடுமானல் அதைத் திறக்கும் வழி யென்னவென்று குடிசையின் தரையை வெகு ஜாக்கிரதையாகப் பரிசீலனை யிட்டான். ஹா! திடீரென்று வெளியில் ஆள்வரும் அரவம் அவன் செவிகளில் பட்டன. தனது பையில் கையைப் போட்டு கைத் துப்பாக்கியை யெடுப்பதற்கு முன்னர் "டேய்! இரு கைகளையும் உயரே தூக்கு! இல்லாவிட்டால் சிறிதும் தாட்சண்யமின்றி, நாய்போல் சுட்டு வீழ்த்துவேன்!" என்று கர்ஜித்தவண்ணம் ஓர் பெண்மணி கையில் துப்பாக்கியுடன் அவன் முன் முளைத்தாள். துளஸிதாஸின் மூளை உடனே புரண்டுவிட்டது. ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பம்போல் திகைத்து நின்றான் துப்பறிவோன்.

"இங்கே நீ என்ன செய்துக் கொண்டிருக்கிறாய்? உண்மையைச் சொல்!" என்று அதிகாரத்வனியில் வினவினாள் அம்மாது.

"நான் சாதாரணமான ஓர் வழிப்போக்கன்! இங்கு வந்து கொண்டிருக்கையில் ஓசையைக் கண்டதும் பசியின் கொடுமையால் உள் நுழையும்படி நேர்ந்தது!" என்று பதிலளித்தான் துளஸிதாஸ்.

"உஸ்! என்னிடம் பொய் பேசாதே! நான் அரைமணி நேரமாக உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறேன். நீ இங்கு எதையோ நாடிக்கொண்டு வந்திருக்கிறாய் என்பதை நான் நன்கறிவேன். மேலும் நீ துப்பறியும் துளஸிதாஸ் என்பதும் எனக்குத் தெரியும்! ஹூம்! முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாயே? எவ்வளவு முறை உன் புகைப் படத்தைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். இன்னுமா நீயார் எனத் தெரிந்து கொண்டிருக்க மாட்டேனென நினைத்துப் பொய் கூறுகின்றாய்?" என்று புன்முறுவலுடன் புகன்றாள் பூவை.

துளஸிதாஸ் சற்று மௌனமாகவிருந்தார். "மாதே! நான் துப்பறிவன்தான். எப்படியிருந்தாலும் நான் இங்கு வந்திருக்கும் காரியத்தை உனக்குக் கூறத் தயாராகவில்லை! என்னைக் கூறும்படிக் கட்டாயப் படுத்தவும் உனக்கு உரிமையில்லை! இப்படிப்பட்ட காட்டின் நடுவில் டெலிபோன் கருவிகளிருந்தால் அவைகள் எதற்காக உபயோகிக்கப்படு மென்பதை அறிந்து கொள்ளாத மூடனல்ல நான்! இவ்விஷயம் போலீஸுக்குத் தெரிந்தால் அவர்கள் உன்னை இலேசில் விடமாட்டார்க ளென்பது தெரியுமல்லவா?" என்று சற்று தைரியத்துடன் கூறினான் துப்பறிவோன்.

"ஹா! ஹா! ஹா! ஆனால் உடனே இதைப் போலீஸாருக்கு அறிவிப்பதாக உத்தேசமோ?" என்று கல கலவென்று நகைத்த வண்ணம் வினவினாள் பெண்ணரசி.

"ஆம்! இவ்விடத்திலிருந்து சென்ற மறுகிமிடம் இந்தக் கொள்ளைக் கூட்டம் உடனே போலீஸாரின் கையில் சிக்கும்,

நீயும் உன்னுடைய சகாக்களும் சிறையில் தூங்குவீர்கள்!" என்று தைரியமாகப் பதிலளித்தான் துளஸிதாஸ்.

"ஆனல் உன்னை நான் விடுவித்தவுடன் நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்லப்போகிருய் போலிருக்கிறது?" என்று பரிகாசமாக மறுபடி வினவினுள் அம்மாது.

"ஆம்! அது என் இஷ்டம்! உனக்குக் கூறவேண்டியது அவசியமில்லை!" என்ருன் துப்பறிவோன்.

"ஓ! ஹூம்! உன் இஷ்டமா? சரி! ஆனல் நீ இப்பொழுது இதைவிட்டுப் போக முடியாது என்பது ஞாபகமிருக்கட்டும். நீ என் கைதி! உன்னை என் இஷ்டம்போல் எவ்வளவு நேரம் வரையில் வேண்டுமானலும் சிறை வைத்திருப்பேன்! சரி, எங்கே, துப்பாக்கியையெடுத்து இந்த மேஜை மீது வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்! நான் சற்று என் நண்பருடன் டெலிபோனில் பேசவேண்டும்!" என்ருள். மறு நிமிடம் துளஸிதாஸ் தன் துப்பாக்கியை அம் மாதிடம் அளித்துவிட்டு பதில் பேசாமல் நாற்காலியி லமர்ந்தார்.

"ஹலோ! கங்காதர்! உடனே புறப்பட்டு வரவேண்டும்; கால தாமதம் வேண்டாம்!" என்று டெலிபோனில் கூறிவிட்டு துளஸிதாஸை நோக்கினுள்.

"இவ்வளவு பால்யமும் அழகும் பொருந்திய உன்னைப் போன்ற மாது இவ்வளவு பெரிய தீய தொழிலில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்க நான் பெரிதும் துக்கிக்கின்றேன்!" என்ருன் துளஸிதாஸ்.

"என்ன பெரிய தீய தொழில்?" என்று என்றும் அறியாதவள் போல் வினவினுள் அம்மாது.

"என்ன தொழிலா? கொள்ளை! கொலை! இக்காட்டில் அடிக்கடி நடக்கும் கொலை கொள்ளைகளுக்கெல்லாம் நீயும் உன் சகாக்களுமே காரணம் என்று இன்னுமா எனக்குத் தெரியாமற் போய்விடுமென்று நினைக்கிருய்?"

"ஹூம்! அது கிடக்கட்டும்! இதோ கங்காதரன் வந்துவிடுவான்! நான் வெளியிற் போகவேண்டும்! என் காரியம் சித்திபெறும் வரையில் நீ இங்கேயே சிறை வைக்கப்பட்டிருப்பாய்! கங்காதரன் காவலாக விருப்பான்! அதன் பின் நீ விடுவிக்கப்பட்டதும் உன் இஷ்டம்போல் செய்துக் கொள்ளலாம் ஆனல் ஒன்று மட்டும் கூறிவிடுகிறேன். கங்காதரன் ஓர் முரடன். அவனிடமிருந்து நீ முன்னதாகவே தப்பிக்கொண்டு செல்ல முயன்ருல் வீணுக உயிரை இழப்பாய்! ஆமாம்! கூறிவிட்டேன்!"

"உன் காரியம் சித்திபெறும் வரையிலா? என்ன காரியம்? யாராவது பெரிய தனவந்தனைக் கொள்ளையடிப்பதாக உத்தேசமோ!"

"ஆம்! எப்படியானல் என்ன? ஹா! இதோ கங்காதார் வந்துவிட்டார்!" என்று சொல்லிக்கோண்டேயிருக்கையில் கங்காதரன் உள் நுழைந்து வியப்புடன் துளஸிதாஸை உற்று நோக்கினுன். அதற்குள் அம்மாது துளஸிதாஸைப் பற்றிய விபரங்களை யெல்லாம் கங்காதானுக்கு எடுத்துக் கூறினுள். சொல்லிக்கொண்டே யிருக்கையில் வெளியில் யாரோ சீட்டியடிக்கும் சப்தம் வானத்தை இருபிளவாகப் பிளந்துக் கொண்டு சப்தித்தது.

"ஹா! அதோ வந்து விட்டார்! கங்காதார்! உஷார்! இவனை இந்த விடத்திலிருந்து வெளியே விடாதே! இவன் தப்பிக்கொண்டு போய்விட்டால் என் காரியமெல்லாம் அடியோடு போய்விடும்! ஆமாம்! நான்—நான்—மாளிகையிலிருந்து சமிக்ஞை செய்த பின் இவனை விடுவித்து விடு. மிஸ்டர் துளஸிதாஸ்! போய் வருகிறேன். வந்தனம்! கங்காதார்! போய்வாட்டுமா! நீ எனக்குச் செய்த உதவிக்கு நாங்களிருவரும் என்றும் நன்றியறிதலைச் செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்ருேம். வந்தனம்!" என்று கூறிவிட்டு வெளியேகினுள்.

"நாங்கள் இருவரும்?" என்ருல் அம்மாது தன்னுடன்கூட இன்னும் யாரைச் சேர்த்துக்கொண்டு கூறுகிருள் என்று துளஸிதாஸுக்குப் புரியவில்லை. கங்காதரன் துளஸிதாஸை நோக்கி "நண்பரே" நீங்கள் பலாத்காரம் ஒன்றும் செய்யாமலிருந்தால் நான் தங்களை மிகவும் கௌரவமாகவே நடத்துவேன்! நாளைக்காலை நீங்கள் இவ்விடத்திலிருந்து விடுவிக்கப்படுவீர்கள். அதன் பின் நீங்கள் உங்கள் இஷ்டம்போல் எங்கு வேண்டுமானலும் செல்லலாம்! அதுவரையில் நான் உங்களை இங்கேயே வைத்துப் பாதுகாக்கவேண்டும். இங்கு கவலையில்லாமல் படுத்துத் தூங்குங்கள். உங்களுக்கு ஏதேனும் அபாயம் நேருமோ வென்று சிறிதும் பயப்படவேண்டிய தில்லை. இதோ இந்தக் கூடையில் ரொட்டியும் பழமுமிருக்கிறது. இந்தக் கூஜாவில் பால் இருக்கிறது! சாப்பிட்டுவிட்டு இளைப்பாறிக் கொள்ளுங்கள். நான் வெளியில் படுத்திருக்கிறேன்!" என்று கூறிவிட்டுக் குடிசையை வெளிப்புறம் தாளிட்டுப் பூட்டிவிட்டு கங்காதரன் படுத்துக்கொண்டான். துளஸிதாஸுக்கு உண்மையில் பசி அதிகமாக விருந்ததால் பழத்தையும் பாலையும் சாப்பிட்டுவிட்டு வெகு நேரம் வரையில் யோசனையி லாழ்ந்த வண்ணமாக விருந்தார். ஆனல் ஒன்றும் விளங்காது தூக்கம் தான் கண்ணைச் சுற்றியது. தன்னையே மறந்து, ஆயாசத்தால் நாற்காலியிலமர்ந்த வண்ணமாகவே உறங்கிவிட்டார்.

துளஸிதாஸ் மறுபடி கண்ணை விழித்துப் பார்க்கையில் காலை மணி ஏழடித்துவிட்டது. கங்காதரன் டெலிபோனில் யாருடனே பேசிக்கொண் டிருந்தான். சில நிமிடங்கள் வரையில் துளஸிதாஸ் சப்தம் செய்யாமல் கங்காதரனைக் கவனித்த வண்ணமாகவே யிருந்தான். கங்காதரன் டெலிபோனைக் கீழேவைத்துவிட்டு "நண்பரே? இனி நீங்கள் உங்கள் இஷ்டம்போல் எங்கு வேண்டுமானலும் செல்லலாம். கனகப்ரியா கப்பலில் ஏறிவிட்டாள். இனி அவளை ஒருவராலும் ஒன்றும் செய்ய முடியாது!" என்ருன்.

"யார்? கனகப்ரியாவா? ரிடையர்ட் ஆபீஸரின் மகளா?" என்று வியப்புடன் வினவினர் துளஸிதாஸ்.

"ஆம்! அவர்கள் தங்களை இதுவரையில் சிறைவைத்திருந்த தற்காக மன்னிப்பைக் கேட்பதுடன் தங்களிடம் எல்லா இரகசியங்களையும் கூறிவிடும்படியும் கேட்டுக்கொண்டார். அதன் மீது நான் இப்பொழுது கூறுகிறேன்: கனகப்ரியாவின் தந்தை ஓர் நூதன மனிதர். அவர் கனகப்ரியா பருவகாலமடைந்து உலக சுகங்களை அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருக்கையில் சிறிதும் காருண்யமின்றி அடவர் கண்களிலே படா வண்ணம் இது வரையில் சிறை வைத்திருந்தார். நான் அவர்கள் வீட்டு [illegible] தாவே யன்றி வேறொருவனு மில்லை.

ஒரு சமயம் அவள் தந்தை ஊரிலில்லாத சமயம் வெகு நாட்களாகச் சிறைவாசம் செய்பவள் போல் வீட்டிலேயே அடைபட்டிருந்த கனகப்ரியா மாடியின் மீது உலாவிக் கொண்டிருக்கையில் வீதியில் சென்று கொண்டிருந்த சுந்திரவர்மன் என்னும் ஓர் இளம் வாலிபனைக் கண்டு மையலுற்று அவனைப் பற்றிய விருத்தாந்தங்களை அறிந்து வரும்படி பரிதாபகாமான குரலில் என்னை வேண்டினள். நான் அவளுடைய நிலைமையைக் கண்டு பரிதபித்து சுந்திரவர்மனைப் பற்றி விசாரித்து வந்தது மன்றி அவனிடம் இவளுடைய காதலையும் தெரிவித்தேன். சுந்திரவர்மன் ஓர் பெரிய பிரபுவின் குமாரன். இங்கிருந்து ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள தேளூர் என்னுமிடத்தில் வசிப்பவன். இருவரும் ஒருவர் புகைப்படத்தைக் கண்டு ஒருவர் ஆனந்தித்து வந்தனரேயன்றி நேரில் காணவோ அல்லது பேசவோ முடியாமல் தவித்தனர். கனகப்ரியாவின் தந்தைஅவள் விஷயத்தில் கொடூரமாகவே நடந்து வந்தார். இருவரும் பேசுவதற்கென நான் ஓர் உபாயம் செய்தேன். அதாவது கனகப்ரியாவின் அறையிலிருந்து இதோ இந்தக் குடிசைக்கு டெலிபோன் சம்பந்தம் இரகசிமாக உண்டாக்கினேன். ஒவ்வோர் இரவும் பன்னிரண்டு மணிக்கு மேல் சுந்திரவர்மன் இக் குடிசைக்கு வருவான். கனகப்பிரியாவின் தந்தை நன்கு உறங்கிக் கொண்டிருப்பாராதலின் அவள் தன் அறையிலிருந்தே டெலிபோனின் வழியாகச் சுந்திர வர்மனுடன் சம்பாஷித்து மகிழ்வாள். இப்படியே காலம் கழிந்தது. ஆனால் எவ்வளவு நாட்கள் தான் தங்கள் ஆர்வத்தை அடக்கிக் கொண்டு இளங் காதலர்கள் இவ்வண்ணம் தங்கள் காலத்தைத் தனித்தனியாகத் தள்ளிவாக் கூடும்?

"நேற்றுக் காலை கனகப்ரியாவின் தந்தை அயலூருக்கு ஓர் காரியமாகச்சென்றிருக்கிறார். திரும்புவதற்கு இரண்டு நாட்களாகும். அதற்குள் கனகப்ரியா சுந்திரவர்மனை மணம்செய்துக் கொண்டு அயல் தேசத்திற்குக் கப்பலேறிச் சென்று விட்டால் அவனை அதன் பின் அவள் தந்தை என்ன செய்யக் கூடும்? அதன் பொருட்டே நேற்று கனகப்ரியா நேரில் இங்கு வந்திருந்தாள். உங்களைக் கண்டதும் எங்கு தன் இரகசியங்கள் முழுதும் வெளியாகித் தன் மனோரதத்திற்கு முட்டுக் கட்டை போடப்பட்டு விடுமோவென அஞ்சியே தன் காதலனுடன் கப்பலேறும் வரையில் உங்களை இங்கு சிறை வைத்திருக்கும்படி என்னைக் கட்டளை யிட்டாள். இன்று காலை ஆறு மணிக்கு இருவருக்கும் மணம் நடந்து விட்டது. இதோ கப்பலிலும் ஏறிவிட்டனர். இவ்வளவு நேரத்திற்குள் கப்பலும் கடலில் ஒன்றிரண்டு மைல் தூரம் சென்றிருக்கும். இனி அவர்களுக்கு அபாயமில்லை. அவ்விருவரும் நீடூழிகாலம் இன்பமாய் வாழ இறைவனை நாம் பிரார்த்திப்போம்!" என்றான் கங்காதரன்.

கொள்ளைக் கூட்டத்தையோ, அல்லது பயங்கரப் புரட்சி இயக்கத்தையோ கண்டு பிடித்துப் புகழடையப் போகிறோம் என்று கனவு கண்டுக் கொண்டிருந்த துளசிதாஸ் கங்காதரன் கூறியவைகளை யெல்லாம் கேட்கவும் பேராச்சர்ய மடைந்து- பிரமித்து நின்றார். உண்மையில் கனகப்ரியாவின் மீது ஓர்வித பச்சாத்தாபமும் அவளுடைய தந்தையின் கொடிய சுபாவத்தின் மீது ஓர்வித வெறுப்புமே துளசிதாசின் உள்ளத்தில் தோன்றின. இந்த இரகசியத்தை கனகப்ரியா தனக்கு முன்னதாகவே தெரிவித்திருந்தால் அவர்களுடைய திருமணத்திற்குத் தானும் விஜயம் செய்திருப்பதுடன் சுந்திர வர்மனையும் நேரில் கண்டிருக்க வியலுமேயென்றெண்ணினர்.

"நண்பா! கனகப்ரியா தன் காதலனுடன் நீடூழி வாழ நாம் ஆசைப்படுவோம்" என்றார்.

திருப்புத்தூர்

ஆஸ்பத்திரி வெள்ளி விழா.

ராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூரிலிருக்கும் பிரபல ஸ்வீடிஷ் மிஷன் ஆஸ்பத்திரியின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் செப்டம்பர் 19-ந் தேதி நடைபெற்றதென்றும் அதுபோது ராமநாதபுரம் ஜில்லாக் கலக்டர் ராவ்பகதூர் எ. எ. வெங்கடராமய்யர் தண்ணீர் நிலயத்தையும் தாங்கம்பாடி மெற்றுணியார் எக்ஸ்ரே நிலயத்தையும் திறந்து வைத்தார்கள் என்று தெரிகிறது.

புதிய முறைகள்?

(தென்னலிராமன்.)

"இந்தியா நாளுக்கு நாள் புதுப்புது முறைகளைப் பின்பற்றுகின்றதென்று எப்படிக் கூறமுடியும்?" என்ற கேள்விக்கு ஓர் மாணவன் அடியில் வருமாறு விடையெழுதி இருந்தான்:—

முற்காலத்தில் கொலை செய்வதற்குக் கத்தி, வாள், ஆள் முதலிய வற்றைத் தான் துஷ்டர்கள் உபயோகப்படுத்துவது வழக்கம்; அரசாங்கம் தலையிட்டால் குற்றத்திலிருந்து தப்பிவிட முடியாது. இப்போதோ மோட்டார் வண்டி என்பதைக்கொண்டு சுலபமாகக் கொன்று விடுகிறார்கள்; குற்றமில்லாது தப்புவது மெளிதாக விருக்கிறது.

முற்காலத்தில் பணக்காரர்கள் ஏழைகளை அடித்தும் தூத்தியும் கொள்ளையிட்டும், வழக்கில் புகுத்தியுமே பயப்படுத்தி வந்தார்கள். இப்போது முனிசிபல் எலக்ஷன், யூனியன் எலக்ஷன், ஜில்லா போர்டு எலக்ஷன் என்பவற்றில் வெற்றி பெற்று ஏழைகளைத் தொல்லை செய்து வருகிறார்கள்.

முற்காலத்தில் கள்வர்கள் 'சொக்குப் பொடி' என்ற ஒன்றை உபயோகப்படுத்தி ஜனங்களை மயக்கி வந்தார்கள். இப்போது 'குளோரோ பாரம்' முதலிய பலவற்றைக் கையாளுகிறார்கள்.

புராதன காலங்களில் இந்தியக் கொள்ளைக்காரர்கள் தடி, கத்தி, வாள் ஆகியவற்றுடன் தான் வெளிக் கிளம்புவார்கள். இப்போது வெடிக் குண்டும் உபயோகிக்கின்றார்கள் என்று தெரிகிறது.

முற்காலத்தில் அதிதிகள் (அகதிகள்) வந்தால் தூங்கவும் இல்லறத்தார் கொடுக்கும் ஆகாரத்தைச் சாப்பிடவும் உதவுவதற்காக எல்லா வீடுகளின் முற்புறத்திலும் வெளித் திண்ணைவைத்து வீடுகட்டி வந்தார்கள். இப்போது நன்றாக மதிலெழுப்பி வீட்டின் முற்புறத்தை அடைத்து விட்டதோடு, வந்தவர்களைத் துரத்துமாறு நாய்களும் வளர்த்து வருகிறார்கள்.

முற்காலத்தில் பழஞ்சாதம், அல்லது கஞ்சி சிலகால் (அபூர்வமாகத் தேவைப்படுமிடத்து) பலஹாரம் சாப்பிட்டு வந்

தார்கள். (அக்காலத்தில் மக்கள் நூறும் நூற்றிருபதும் வருடங்கள் வாழ்ந்ததோடு, ஏதோ ஒருவிதத் தாழியில் வைக்கப்பட்டும் வந்தார்களாம். இப்போது காலே காபி, டீ, கொக்கோ முதலியவற்றைப் பருகி மெலிந்து உலகம் சதமற்றதென்னும் உண்மையை இருபத்தைந்து, இருபத்தாறு வயதிலேயே காண்பித்து விடுகிறார்கள்.

முற்காலத்தில் (நன்மையோ தீமையோ) சில முறைகட்குக் கீழ்ப்படிந்து நடந்ததால், ஒவ்வொரு மனிதனும் சூடுள்ளவனாக இருந்தான். இப்போது சுருட்டு, சிகரெட்டு, பீடி முதலியவற்றால் சூடேற்றிக் கொள்கிறார்கள்.

முற்காலத்தில் பிராமணர்கள் வேதம் ஓதியும், எவ்வுயிரிடத்தும் தண்மை பூண்டும், தவஞ் செய்தும், காட்டில் வாழ்ந்தும், கடவுள் தியானத்தில் ஆழ்ந்தும் பிராமணர்களானார்கள். இப்போது அவர்களில் பலர் மோட்டார் ரோட்டியும், புலாலருந்தியும், மீன் வியாபாரம் செய்தும், பொய் வழக்கு வாங்கிப் பேசியும், மிலேச்ச பாஷையாகிய ஆங்கிலம் கற்றும், ஆடை அணிகளை மிலேச்சர் மாதிரி மாற்றியும், கப்பலேறியும், சேனையில் சேர்ந்தும், அரிசி விற்றும், புரோக்கர்களாக வேலை பார்த்தும் பலசெய்து வருகிறார்கள்.

முற்காலத்தில் விக்ரகங்களைக் கடவுளாக வணங்கி வந்தார்கள். இப்போது கல்லென்று அவற்றைக் காலாலுதைத்துத் தள்ளுவதோடு, கடவுளே இல்லையென்றும் கூறுகிறார்கள்.

முற்காலத்தில் ஆலயங்கள் கடவுளிருக்கை யென்று கொள்ளப்பட்டன. இப்போது வேசைகள் வீடு என்று விளக்கப்படுகின்ற மாதிரி தாசிகளும் தாசி லோலர்களும் அவர்தம் செயல்களும் மல்கியிருக்கின்றன.

முற்காலத்தில் இந்தியா இந்தியர்களுடையது. இப்போது பிறருடையது. எஞ்சியது சில பணக்காரர்களுடையது. பல இந்தியர் 'என் நாட்டை என்னிடம் கொடு' என்பதில் அர்த்தமேயில்லை. ஏனெனில் காணி நிலம்கூட சொந்தமாயில்லாத இந்தியர் லட்சம் லட்சம்!

முற்காலத்தில் இளைஞர்கள் குருவிருக்கும் இடத்தை நாடிக் கல்வி கற்று வந்தார்கள். இப்போது கல்வி கற்ற இளைஞர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். முற்காலத்தில் கற்றோருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு. இப்போது சென்ற விடமெல்லாம் செருப்பு (என்று கூறத் தகுந்த முறையில் கல்வி கற்றோர் செருப்புத் தைத்து வருகிறார்கள்.)

ஒரு வார்த்தைக்கு 72 ரூபாய்

(தாத்தா)

'கம்பன்' (?) என்ற தரித்திரப் பேர்வழி, ஒருகால் ஆரியனாகிய இராமனது பாணத்தை ஏற்ற தமிழ் மன்னன் இலங்கை வேந்தன் எவ்வாறு கலங்கினான் என்று கூறும்போது, கடன்கொண்டவர்களின் நெஞ்சம் போல என்று தம் சொந்த அனுபவத்தைக் கூறினார். சொந்த அனுபவத்தை ஒருவர் எடுத்துக் கூறும்போது நம்மால் அபிப்பிராயத்தில் மாறுபட முடியாது என்பதோடு எனக்கும் அந்த சர்வஜன அனுபவ பாத்தியத்தில் கம்பரைவிடக் கொஞ்சம் மதிகமான பழக்கமுண்டு என்று கூறிக் கொள்கிறேன். கடன்பட்ட ஒருவனின் இருதயம் தரும் நோவை எந்த கஜக்கோலினாலும், தெர்மாமீட்டரினாலும் (சூடளக்கும் கருவி) எந்தத் தராசினாலும், எந்த ராத்தல், ஔன்ஸ் களாலும் அளந்துவிட முடியாது. ஒழுங்காகக் கடன்பட்டு ஒருவன் வருந்தத் தொடங்கிவிட்டானானால் பதினைந்து நாளையில் சரியாக இரண்டுவருடம் நோயாய்க் கிடந்தெழுந்தவன் போலாகிவிடுவான். அதோடு அவனது நாடி தளர்ந்து விடும்; நாக்குத் தளர்ந்துவிடும்; உளம் குன்றிவிடும், ஊன் தேம்பிவிடும், பார்வை மாறிவிடும், பார்த்திடும் பூமியை; சலிப்புத் தலையெடுத்துவிடும், ஜனசமூகம் நஞ்சாகி விடும், அன்றி அவன் எப்போதும் சாவையே எதிர்பார்த்திருப்பான். சகலரிடத்திலும் பொறுமை கொள்ள நிற்பான். இந்த உண்மைக்கான ஓர் பெரும் உதாரணம் கந்தசாமி என்ற திருமங்கலம் காபி ஹோட்டல்காரனிடம் கண்டேன்.

கந்தசாமி ஓர் உண்மை இந்தியன், அதாவது ஏழை. வேறு பிழைப்பில்லாததால் ஒரு காப்பிக்கடை வைத்தான். அதற்குப் போடுவதற்கான மூலதனம் ரூபாய் 70 கூட அவனிடமில்லை. அவ்வளவு தரித்திரனாகிய அவனுக்குச் சுப்பையா என்ற ஒரு பொடிப் பணக்காரன் பணம் கொடுத்துதவினான். அப்பணம் நெடுநாளாகியும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. காரணம் கடையின் வருமானத்தின் சிறப்புத்தான். ஆதலால் ஒருநாள் சுப்பையா கந்தசாமியின் குடுமியைப் பிடிக்க, கந்தசாமி சுப்பையாவின் இடுப்பு வேட்டியைப் பிடிக்க, ஒரு சிறு பாரதப் போருக்குத் தயாரானார்கள். கையில் பணமில்லாத ஒருவனைப் போருக்கழைத்து என்ன பிரயோஜனம்? ஆதலால் நானும் ஆறுமுகம் என்ற நண்பரும் இன்னும் கடனனுபவமுள்ள சில நண்பர் திலகங்களும் இடைப்பட்டுப் போரை நிறுத்தி ஒரு வெர்சேல்ஸ் உடன்படிக்கையைச் செய்து வைத்தோம். அவ்வுடன்படிக்கைப்படி இருகக்ஷியாரும் நேசப்பான்மை காண்பிக்கவேண்டும்; சுப்பையா தன் ஆயுதங்களைப் பரிஹாரணம் செய்துவிடவேண்டும்; கந்தசாமி நஷ்ட ஈடாக ரூபாய் 2, கடன் ரூபாய் 70, ஆக 72ம் பல தவணைகளாகக் கொடுக்கவேண்டும்.

இந்த உடன்படிக்கை கையெழுத்தாகிப் பல நாளாகியும் கந்தசாமி பணம் கொடுத்தபாடில்லை. காரணம் மேற்சொன்னபடி வியாபார மும்முரம் தான். ஆகவே இராவணனைப்போல வெந்தழல் மெழுகாகி உருகியதோடு சுப்பையாவைக் கண்டபோதெல்லாம் டி. எஸ். பி. யைக்காணும் ஓவர்லோடு மோட்டார் ரோட்டிபோல் நெகிழ்ந்து வாலானான். அதோடு தம் காப்பிக் கடையாகிய மோட்டாரிலேற, தாம் அக் காரைஓட்டி, அவர் திருப்தியைப்பெறு மோர் புண்ணிய தினம் வாராதா என்றும் எண்ணிக் கொண்டிருந்தான். இதனைக் குறிப்பாலறிந்துகொண்ட சுப்பையா உண்மையாகவே ஒரு டி. எஸ். பி. யின் போலீஸ் பார்வையில் தம் கடன்காரனைப் பார்த்துப் போய்க் கொண்டிருந்தான்.

அப்படியிருக்க, ஒரு நாள் சுப்பையாவின் மாமன் வீரமாகாளித் தேவர் கப்பலூரிலிருந்து ரயிலில் ஏறி வந்தார். மாமனார் வந்தால் மருமகன் தம் பிரதாபங்களை வெளிப்படுத்த வேண்டுமல்லவா? ஆதலால் தம் அடிமை போலிருக்கும் கந்தசாமியின் கடைக்கு மாலைப் பலகாரம் சாப்பிட அழைத்துப் போனான். கந்தசாமி அவனைக் கண்டதும் வெகுவாக உபசாரம் செய்து, நல்ல ஆசனம் கொடுத்து 'விருப்பம் யாது' என்று கேட்டான். மாமன்முன் தன் ஆங்கில பாஷா அறிவையும் காண்பிக்க விரும்பிய (காட்டுமிராண்டி) சுப்பையா 'வடைதானே சுடுகிறாய்" என்றான். தலையை அசைத்தான் கந்தசாமி வணக்கமாக. உடன் சுப்பையா மாமனைப்பார்த்துக் கொண்டே 'நீட்டாக 4 வடை போட்டுக் கொண்டுவா' வென்றான். கந்தசாமி உடன் அக் கட்டளையைக் காதினால் வாங்கித் தலைக்கு மேல் வைத்துக் கொண்டு, அடுப்படிக்குப் போனான். ஏற்கெனவே அவனுக்குத் தன் 72 ரூபாய் முதலாளியைத் திருப்தி செய்ய வேண்டுமென்பதல்லவா எண்ணம்? அதோடு சுப்பையா தான் 'நீட்டாக' வடை கேட்டானே. ஆதலால் காலணாவுக்கு அரை அணா விலை பெறுகிற வடையாக (மசால் வடை) நான்கு வடையை மிக நீட்டாகப் போட்டான். மசால் வடையை உருட்டி நீளமாக்கிப் போட்டால் பார்க்க நன்றாக இருக்குமா? அன்றிச் சுடத்தான் கூடுமா? என்றாலும் எப்படியோ கந்தசாமி பயந்து பயந்து சுட்டு எடுத்துச் சுப்பையா முன் கொண்டுவந்து வைத்தான்.

பார்த்தான் அவற்றைச் சுப்பையா; வந்துவிட்டது கோபம். "படவா! கடையில் இத்தனை பேரிருக்க, என் மாமனும் வந்திருக்க, அவர்கள் முன்னால் என்னை அவமானம் செய்கிறாயா? எல்லோருக்கும் வட்ட வடிவமான நல்ல வடை; எனக்கு மட்டிலும் முக்கால் அடி நீளத்தில் குச்சுவடையா? பார் உன்னை. உன் குறும்புத்தனத்தைக் காண்பிக்கப் பார்க்கிறாயா" என்று கூறிக்கொண்டு வெர்சேல்ஸ் ஒப்பந்தத்தை மறந்துவிட்டு எழுந்துவிட்டான் போருக்கு. அதைக் கண்டதும் வீர—மா—காளி—தேவர் விடுவாரா?—அவரும் வீராதீர பராக்கிரமங்களை மருமகன் பார்க்கட்டுமென்று மீசையை முறுக்கி விட்டுவிட்டு எழும்பிவிட்டார். கொஞ்ச நேரத்துக்குள் கந்தசாமி, நேசக்கட்சியார்கட்கு (மாமன்—மருமகன்) அடியில் கிடந்து மூச்சுத் திணறினான். உடன், நானும் வேறு சிலச் சுற்றுப் பக்க அரசுகளும், ஆறுமுகத்துடன் இடைப் புகுந்து, சண்டைக்காரர்களை விடுத்து, நடந்தது என்னவென்று கேட்டோம். வீரத் தேவர் "என் மருமகன் சண்டைக்குப் போனான்; ஆதலால் நானும் போனேன்' என்றார். என்ன புத்திசாலித்தனம்! வெளியூர் நாயைக் கண்டு உள்ளூர் நாயொன்று குலைக்க, அந்தச் சத்தத்தைக் கேட்டுக் குலைக்கும் பிறநாய்களை விட இவருக்கு வேறு உதாரணம் கூற முடியுமா?

போகட்டும். பிறகு சுப்பையாவிடம் கேட்டோம். அவன் "நான் நீட்டாக வடையைக் கேட்டேன்; அதற்கவன் பன்னிரண்டு அங்குலத்தில் கம்புபோல மசால்வடை செய்து தருகிறான்" என்றான். நாங்கள் பின் கந்தசாமியிடம் விசாரித்தோம். அவன் அழுதுகொண்டு "அவர் நீட்டாகக் கேட்டார்; நான் அப்படிச் செய்து கொடுத்தேன். சுப்பையாவைத் தவிர வேறு யாராவது கேட்டிருந்தால் கொடுப்பேனா? எனக்கு எவ்வளவு மாச் செலவு?" என்றான். பிறகு யோசித்ததில் இந்தக் கலகமெல்லாம் "நீட்" என்ற ஆங்கிலப் பதம் செய்ததென்று விளங்கிற்று. உடன் அதனை விளக்குவதற்காகக் கப்பலூர்த் தேவரிடம் "நீட்டான வடை என்றால் அர்த்தமென்ன ஐயா?" என்றோம்.

அவர்:—நீட்டு என்றால் நீளம் என்பதுதான் கருத்து.

நான்:—அப்படியானால் ஏன் சண்டைக்குப் போனீர்கள்?

அவர்:—மருமகன் நீளம் காணாது என்று நினைத்தார் போலிருக்கிறது. சண்டைக்குப் போனார்; நான் ஒத்தாசை செய்தேன்.

நான்:—சுப்பையா என்ன சொல்கிறாய்?

அவன்:—நான் இங்கிலீஷிலல்லவா நீட் என்று சொன்னேன்.

நான்:—இங்கிலீஷ் தெரியாதவனிடம் உன் ஞானத்தைக் காண்பித்து எதற்கு? உன் மாமன் என்ன நினைக்கிறாரோ அதனையே கந்தசாமியும் நினைத்தான். அதில் பழுதென்ன!" அப்போதுதான் சுப்பையாவின் மடத்தனம் விளங்க, கர்வம் அடங்கிற்று.

இந்தச் சமயம் ஒரு குறும்பன் போலீஸ்இன்ஸ்பெக்டர் ஒருவரைக்கலகஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து விட்டான். அவர் (போலீஸ் இன்ஸ்பெக்டர்) சுப்பையாவை விசாரித்தார். நடந்தவற்றைக்கூறி அவன் இன்ஸ்பெக்டரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அதன்மேல் அவர் ஆங்கிலத்தில் என்னென்னமோ கூறினார். சுப்பையாவுக்கு ஒரு 'இழவும்' தெரியவில்லை; விழித்தான். அதன் மேல் அவர் "என்னடா! ஒன்றும் தெரியாத நீ ஆங்கிலம் பேசிச் சண்டை போடுகிறாயே, முட்டாள். இந்தச் சண்டைக்காக நீ 72 ரூபாயையும் இழக்கவேண்டும்; அதுதான் முறை. இல்லையானால் உன்னைப் பிராசிக்கூட் செய்வேன்" என்றார். அவன் "ஆகட்டும்" என்று முணுமுணுத்தான். பணம் பெற்றுக் கொண்டதாக ஓர் "ரசீது" எழுதச் சொன்னார் இன்ஸ்பெக்டர். சுப்பையா எழுதிக்கொடுத்தான். நான் சாட்சியாகக் கையெழுத்தும் போட்டேன். கந்தசாமிக்கு உள்ளூர சந்தோஷம்!! பட்ட அடியெல்லாம் மறந்துபோயிற்று.

சிறிதுநேரம் பொறுத்து நாங்கள் சிலர் 'இவ்வளவு நல்ல இன்ஸ்பெக்டர் ஒருவர் இருப்பாரா? கோர்ட்டுக்குச் செல்லாமல் இருந்த விடத்திலேயே வழக்கை முடித்துவிட்டாரே' என்று யோசித்துக்கொண்டு அவரைப் பலப்பல வினவ, அவர் மெதுவாக சட்டையைக் கழற்றினார். ஆ! அவர்யார்! அவர்தான் ஆறுமுகம்!..........என்ன தந்திரமாக நடந்துகொண்டான் அவன்!

* * *

இப்போது போலீஸ் இரகசியம் சுப்பையாவுக்குத் தெரியும். என்றாலும் ஒன்றும் செய்யமுடியாது. 72 ரூபாய் நஷ்டத்தோடு அமைதியாக இருக்கிறான். ஒருவரிடமும் அவன் ஆங்கிலம் பேசுவதே இல்லை.

திருவாங்கூர் அரசர்

திருவாங்கூர் அரசர் தன் அன்னையார், சகோதரர், சகோதரி முதலியவர்களுடன் கல்கத்தா சென்றார். வழியில் சென்னை சர் சி. பி. ராமசாமி ஐயர் டாக்டர் பண்டாலே திரு. எ. சர்போஜி ராவ் முதலியோர் மலர் மாலை சூட்டி உபசரித்தனர் என்று தெரிகிறது.

ஹரிஜன் கடன்களைத் தீர்க்கும் வழி

(மகாதேவ தேசாய், ஹரிஜன் பத்திரிகையில் எழுதுவது)

தனவந்தர்களாகிய சௌகார்களிடமும் பட்டாணியர்களிடமும் ஹரிஜனங்கள் கடன்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் கடன்களை நீக்குவதற்குப் பற்பல இடங்களில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதில் முக்கியமாக பம்பாய் மாகாணத்திலிருக்கும் குர்லா முனிசிபல் கூட்டுறவுச் சங்கத்தின் சுகாதார இலாகாவைச் சேர்ந்த ஸ்ரீயுத மகன்லால் நாயக் என்பவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை இந்த விஷயத்திற்கு உழைப்பவர்களுக்கு மிகுந்த பயன் அளிக்கும். அதிலிருக்கும் சிலசில விபரங்கள் பின் வருமாறு:—

"இந்தச் சங்கம் பத்து வருஷகாலமாக உழைத்து வருகிறது. இதுவரை 16000 ரூ, கடனைத் தீர்த்து வைப்பதற்கு முன்பணமாகக்கொடுக்கச் செலவு செய்திருக்கிறது. இதன் அங்கத்தினர் சாதாரணமாகத் தவணைகளைச் சரிவரக் கொடுத்து விடுகிறார்கள். ஆனாலும் அநியாய வட்டிக்காரர்களான சௌகார்களிடமிருந்தும் பட்டாணியரிடமிருந்தும் இன்னும் பலர் விடுபடவில்லை. இதுவரை ஒருவரும் பணத்தை மீத்துச் சங்கத்தில் சேமித்து வைக்கவில்லை. சில சமயங்களில் சங்கத்தில் தங்கள் தவணை தவறி விடாமல் இருப்பதற்காக வேறு கடன் கொடுப்பவர்களின் கைகளில் சிக்கி விடுகிறார்கள். அதிலிருந்தும் அவர்களை மீட்க வேண்டியிருக்கிறது.

இந்தச் சங்கத்தின் முயற்சிகள் முற்றிலும் வீணாகி விட்டன என்று சொல்ல முடியாது. இந்தச் சங்கம் ஆரம்பிப்பதற்கு முன் முனிசிபல் தோட்டிகள் கடன்காரரின் கொடுமையிலிருந்து தப்பிக்க குர்லாவை விட்டே ஓடி விட வேண்டியிருந்தது. இப்பொழுது அம்மாதிரி ஒன்றும் நடப்பதில்லை. தொந்தரவுகள் ஏற்கனவே நீங்கி விட்டன. முன்பு பெண்களைப் பிணையமாகக் கடன் தீரும் வரை வைப்பது, கடன்காரர்கள் இவர்களை அடித்துத் துன்புறுத்துவது என்ற விஷயங்கள் இப்பொழுது கிடையவே கிடையாது.

கடன் கொடுக்கு முன் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் நேர்மையான காரணங்களுக்காகத் தான் பணவுதவி நாடுகிறான் என்பதைத் தீர விசாரித்தே கொடுக்கப்படுகிறது.

இந்தச் சங்கம் முனிசிபல் தோட்டிகளின் கடன்களை ஒழித்து விடுவதற்குப் பாடுபடுகிறது. அதற்கு அவர்களது வரவு செலவுக் கணக்குகளை பரிசோதிக்க அனுமதிக்க வேண்டும். மேலும் பின் வரும் கட்டுப் பாடுகளுக்கு உட்பட வேண்டும்.

(1) வரவுக்குள் செலவு செய்ய வேண்டும்.

(2) போதை வஸ்துக்கள் உபயோகிக்கக் கூடாது.

(3) வேறு இடத்தில் கடன் வாங்கக்கூடாது.

(4) சங்கக்கடன்களும் அன்னியக் கடன்களும் தீர்ந்த பிறகு சங்கத்தின் பாங்கியில் தங்கள் சேமித்த தொகையை டிபாசிட் செய்ய வேண்டும்.

இந்தத் திட்டம் ஆரம்பித்து நான்கு மாதங்களாகிறது. நான்கு குடும்பங்கள் இதன் பூரண ஆதரவைப் பயன் படுத்திக் கொண்டார்கள். அவர்களுடைய மொத்தக் கடன் 1979 ரூ. சங்கம் 1250 ரூ.-கொடுத்திருக்கிறது. மீதி வஜாச் செய்யப்பட்டது. எல்லாக் கடன்காரர்களும் இந்த 700 ரூ வஜாச் செய்வதற்கு ஒப்புக்கொண்டார்கள்.

இந்தத் திட்டம் பூரணமாக வெற்றியடைந்தால் அவர்களுடைய ஒழுக்கமும் பொருளாதார நிலைமையும் முன்னேற்றமடையும் என்பதில் தடையில்லை."

அம்ரெலி என்ற விடத்திலும் ஹரிஜன உத்தாரணம் இம்மாதிரி நடந்து வருகிறது. அங்கு ஹரிஜனப் போர்ட் காரியதரிசியான ஸ்ரீயுத ஜகஜீவன்தாஸ் மேத்தா பின் வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

"இங்கு கூட்டுறவுச் சங்கம் கிடையாது. உதவி அவசியமான ஹரிஜனர்களின் சார்பாக கடன்காரர்களிடம் நேரில் சென்று அவர்கள் நிலைமையை எடுத்துக்கூறி சிறுசிறு மாதத் தவணைகளாகத் திருப்பிக் கொடுத்துவிட அவர்களை அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறதற்கு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் மூன்று சௌகார்களும், மூன்று ஹரிஜனங்களும் ஹரிஜனச் சங்கக்காரியதரிசி ஒருவரும் அங்கத்தினர்கள். காரியதரிசி தவணைத் தினங்களில் இருந்து தவறாமல் கவனித்துக் கொள்ளவேண்டியது. திருமண மரணச் சடங்குகளுக்குச் செலவுகள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் செல்லாது கவனித்துக் கொள்ள வேண்டியது. ஹரிஜன உத்தாரணத்தில் ஈடுபட்ட சௌகார் ஒருவர் ஹரிஜன போர்டினால் சிபாரிசு செய்யப்பட்டுச் சொற்ப வட்டிக்கு ஹரிஜனங்களுடைய தேவைகுத் தகுந்தபடி கடன் கொடுத்து வருகிறார்."

காரைக்குடி

பாரதி பள்ளிக்கூடம்.

இப்பள்ளிக்கூடத்தின் ஐந்தாவதாண்டின் நான்காவது மாணவர் கழகக் கூட்டம் ஆவணி மீ 30உ மாலை திரு. வி. மு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணிவாசகன் என்னும் மாணவன் "ஒற்றுமை" என்னும் பொருள் பற்றிப் பேசினான். பின் திருவாளர்களான ராம. அண்ணாமலை செட்டியார் கு. ப. சு. அ. மெ. சொக்கலிங்கம் செட்டியார் முதலியோர் அப்பொருள் பற்றித் தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

தேவகோட்டை

காதிபந்தர் திறப்பு விழா.

திருச்செங்கோடு காந்தி ஆச்ரமம் காதி பந்தரின் கிளையை 12—9—34 புதன்கிழமை மாலை ஐந்து மணிக்கு இந்நகரில் வெள்ளையனூருணி கீழ்புறமுள்ள உதையாச்சி காசிச் செட்டியார் வீட்டில், வக்கீல் M. G. முருகராஜப்பங்காரவர்கள் திறந்து வைத்தார்கள். அதுகாலை அரு. சோமசுந்தரன் அவர்கள் "கதர்" என்பது பற்றிப் பேசினார்கள். திறப்புவிழாவுக்குப் பல பெரியோர்கள் வந்திருந்தார்கள் என்று காரியதரிசி திரு. சோம செல்லையா எழுதுகிறார்.

பரசுராமன்--ஓர் பணக்காரன்

மலையை அசையாது பிரதிஷ்டை செய்தாராம்

பணத்தின் பெருமைபெரிது. இதற்கு எடுத்துக்காட்டுக்கு எட்டுமைல் போக வேண்டுவதில்லை. உங்களின் பக்கத்து வீட்டுத்தனவந்தருடைய வயிற்றின்பருமனைப் பார்த்தாலேபோதும் "அம்மம்மா பணத்தின் பெருமையா இது" என்று கூறிவிடுவீர்கள். முற்காலத்தில் பணத்தைப்பற்றிக் கூறியவர்கள் 'பிணங்கூடப் பணத்தைக் கண்டால் வாய்பிளக்கு' மென்று கூறினார்கள். 'சுயராஜ்யா' நிருபர் ஒருவர் மலைகூட பணமென்றால் ஸ்தம்பிக்குமென்று குறிப்பிடுகிறார். அதற்கு (மறைமுகமாக) அவர்கூறும் கதை என்ன தெரியுமா?

ஜமதக்னி என்ற முனிவனுக்குப் பரசுராமன் என்று ஒரு புதல்வனிருந்தானல்லவா? அந்த 'ஆசாமி' இருபத்தொருமுறை இந்தியாவைச் சுற்றிச் சுற்றி வந்து க்ஷத்திரிய அரசர்களையெல்லாம் துவம்சம் செய்தானாம். இந்தியாவைத் தவிர வேறு நாடுகளில் க்ஷத்திரியர்கள் இல்லையோவென்று கேள்வி கேட்டு விடாதீர்கள்.

பரசுராமன் அவ்வாறு க்ஷத்திரிய அரசர்களைக் கொன்றழித்த பாவத்தை —ஆம் இந்த விடத்தில் ஒரு வார்த்தை. பரசுராமனுக்குத் தாம் பாவம் செய்வதாகத் தெரிந்திருந்தும்கூட க்ஷத்திரியர்களை வதைத்திருக்கின்றான்; அல்லவா?

அவன் அந்த அரசர்களைக் கொலை செய்த பாவத்தைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்று யோசித்தானாம். நெடுநாள் புத்தியைக் கடுமையாக முடுக்கிவிட்டபோது, பிராமணர்கட்குப் பூதானம் செய்வதுதான் ஏற்றவழி என்று கண்டுக்கொண்டானாம். உடனே பூமியைத் தேடினான். வெறுமையான பூமி அவனுக்குக் கிடைக்கவில்லை. எனவே புதிதாக ஓர் பூமியை சிருஷ்டித்து விடுவதாக நினைத்து, கோகர்ண மென்னும் கோவாவில் சென்று நின்றுகொண்டு தெற்கு நோக்கினான். எங்கும் கடலாகவிருந்தது. அந்தக் கடலைப் பார்த்துக்கொண்டு, தனது மழுவை ஒரு வீச்சு வீசினான். பெரிய பலசாலியாயிற்றே அவன்? அம் மழு சுமார் 500 மைல் பாய்ந்துசென்று ஓரிடத்தில் விழுந்தது. விழுந்ததும், அந்த திசையில், கடல் கொஞ்சம் தென் திசையைநாடி நீங்கி விட்டது. நீங்கிய விடத்திலிருந்து எழும்பியது ஒரு பூமி! அதுதான் மலையாளக்கரை அல்லது கேரளம்! மழு விழுந்த இடம்தான் கன்னியாகுமரி. இப்போது கன்னியாகுமரியில் மழுவோ, அது விழுந்தவிடமோ காணப்படவில்லை.

அது எப்படியாவது போகட்டும். எழுந்த பூமியைச் சில பார்ப்பனர்கட்குத் தானம் செய்தான் பரசுராமன். பின் அவர்கட்குச் சில சட்டதிட்டங்களும் போட்டான். அப்பால் அவர்களை ஆள்வதற்குப் பெருமாள் பானுவிக்ரமனென்ற க்ஷத்திரிய அரசனைத் தமிழ்நாட்டிலிருந்து அழைத்துச் சென்று கேரள சக்ரவர்த்தியாக முடிசூட்டினான். எல்லா க்ஷத்திரியர்களையும் கொன்றுவிட்ட பரசுராமனுக்கு பானுவிக்ரம க்ஷத்திரியர் எங்கிருந்து கிடைத்தாரோ?

முடிசூட்டு வைபவம் நடந்தபிறகு பரசுராமன் 'ராசி' என்ற தங்க நாணங்களை ஏராளமாக அச்சிட்டுக் கேரள சாம்ராஜ்ய உபயோகத்திற்காகப் பரப்பினான். அந்நாணயத்தின் கனம் 5 8/10 அரிசி எடையாம். அதன் பக்கங்களில் சங்கின் சித்திர மிருந்ததாம். வெறும் தாடிவாலாவாகிய பரசுராமனுக்குத் தங்கம் எங்கிருந்து கிடைத்த தென்பது தெரியவில்லை. ஒருகால் பூமியைப் படைத்தமாதிரி தங்கத்தையும் படைத்தானோ என்னவோ?

இந்த நாணயம் பரந்து, பானு விக்ரமனும் ஆட்சிபுரிந்து, சிலகாலமானதும், பரசுராமன் மேலைமலைத் தொடர் (அதாவது கேரளத்தின் கிழ் ஓரத்தில் தோன்றிய மலைகள்) அசைந்து கொண்டிருந்ததாகக் கண்டான். மலை அசைந்து கொண்டே இருந்தால் விழுந்துவிடவும் கூடுமல்லவா? ஆதலால் அவைகளை உறுதியாகப் பிரதிஷ்டை செய்யக் கருதி லஞ்சம் கொடுக்கத் தொடங்கினான். மலை—உயிரற்ற கல்லாகிய மலைகூட பணம் கேட்கிற தென்றால் பணத்தின் பெருமைக்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?

லஞ்சத்தை எப்படிக் கொடுத்தான் தெரியுமா பரசுராமன்? அவன்—மலைகட்கு நீட்டி வாங்கக் கையும், வாங்கியவற்றைப் போட்டு வைக்கப் 'பாக்கட்டும்' கிடையாதல்லவா?—ஆகவே, மலைகளில் மூன்றிடத்தில் 'ராசி' என்ற தங்க நாணயங்களைக் குழிதோண்டிப் புதைத்து வைத்தார். அப்படிச் செய்ததும் நின்றது ஆட்டம்! மூன்றிடங்களில் புதைத்து வைப்பதென்றால் எவ்வளவு நிதிவேண்டியிருக்கும்!!

இந்தக் கதை பொய்யென்று சிலர் கருதலாம். ஆனால் மெய்யென்பதில் சந்தேகமில்லையாம். ஏனெனில் மலையில் வாழும் வன ஜாதியார் இப்போதும் அம் மூன்றிடங்களையும் காண்பிக்கின்றார்களாம்; அதோடு விளக்கேற்றி வைத்து அம்மூன்றிடங்களையும் பாதுகாத்தும் வருகிறார்களாம்.

இந்தக் குறிப்பிட்ட இடங்களிலிருந்து, இப்போதும் மழை பெய்யும்போது, தண்ணீர் ஓடுகையில் தங்க நாணயங்கள் மண்ணோடு மண்ணாய் ஒழுகி வருகின்றனவாம். மேற்சொன்ன வன ஜாதியார் மழைக் காலங்களில் கூடைகளுடன் தண்ணீரில் முழுகி மண்ணைக் சல்லி அரித்துப் பொற்காசு எடுக்கின்றார்களாம். இதனைக் காணும் நாகரிகமடைந்த ஜாதியார் பரசுராமன் புதைத்த பணத்தையே எடுக்கிறார்கள் என்று கூறுகிறார்களாம்.

இந்த உண்மையால் பரசுராமனின் கதையை ஒரு பகுதி நம்புவதாகக் கூறுகிறார் சுயராஜ்யா நிருபர். அது எப்படிப் போனாலும் பரசுராமன் பெரிய பணக்காரனென்பதை இப்போதுதான் அறிந்தோம்.

லட்சுமிபுரத்தில் பாரதி விழா.

கானாடுகாத்தானை யண்மிய லக்ஷ்மிபுரத்தில் திரு. நா. சொ. அரு. அருணாசலம் செட்டியாரால் நிர்வகித்துவரப்படும் சொ. வித்யாசாலையில் ஆவணி 27-ம் நாள் பாரதி விழாக் கொண்டாடப்பட்டது. பல மாணவர்களும் ஆசிரியரும் பாரதியாரின் தகைமையைப் புகழ்ந்து பேசினர்.

தோழியொடு சொல்லல்.

ராய. சோ.

(உரிமை ஆக்கியோனுடையது.)

கனிவாய் திறந்தெங்கள் காந்தியைப்
பாடும் கருத்துயர்ந்த
பனிவாய் மொழியாள்! பவள
நிறத்தாள்! பருவிழியாள்!
இனியாள் எனக்கே! இதுவென்
உலகத் தியற்கை!யந்தோ!
தனியே யிருந்து நலங்கொலல்
தோழீ! சரியலவே!

"காந்தி கலித்துறை யந்தாதி"

மரத்தின் சமீபத்தே நிற்கின்றவர் காதலி. அம் மனிதனின் பக்கத்தே நிற்கின்றவள் தோழி. தோழியிடம் அவள் தலைவியைக் காதலித்த தலைவன், "எ தோழி! என் இவ் எழில் மிக்க—எனக்கினிய இம் மாதரார் தனி வாழ்வு வாழ்ந்து இளமை நலத்தை வீணாக்குகின்றார்? இது சரியாகாது." எனச் சாற்றுகின்றான்.



காந்திஜி—டாட் சம்பாஷணை

காந்திஜி கொள்கைகள் விளக்கப்படுகின்றன.

சென்றவாரம் காந்திஜிக்கும் டாக்டர் டாட் என்பவருக்கும் ஒரு ரசமான சம்பாஷணை நடைபெற்றது. அதனை இங்கு குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும். டாக்டர் டாட் அமெரிக்கப் பெண்கள் கல்லூரியின் மேற்பார்வையாளர். அவரது சம்பாஷணையின் விவரம்:—

டாக்டர் டாட்:—நீங்கள் அமெரிக்காவுக்கு வரவேண்டிய சந்தர்ப்பமேதாவதுண்டா; நாங்கள் உங்களை அமெரிக்காவுக்கு நாசோரம் செய்துகொண்டு போகவேண்டுமா? தற்போது அமெரிக்காவில் நாசோரம் அதிகமாக நடைபெறுகிறதென்பதை அறிவீர்களல்லவா?

காந்திஜி:—நான் அங்கு வரவேண்டிய தருணம் இல்லை. முதற்காரணம் நான் அங்கு வந்தால் பிரயோஜனப்படமாட்டேன் என்பதுதான். நான் அங்கு வந்தால் சாத்வீகத்தின் சக்தியையும் சிறப்பையும் அழகையுமே விளக்க வேண்டியிருக்கும். அவ்வேலையை இன்று செய்ய நான் இயலாதவனாக இருக்கிறேன். நான் எனது தாய்நாட்டிலேயே இன்னும் அதுபற்றிய முழு நம்பிக்கையையும் உண்டுபண்ணியாகவில்லை.

டாட்:—உங்கள் பூரண உத்தேசமென்ன?


காந்திஜி:—என் முக்கிய ஆசை இந்தியாவில் சுதந்திரத்தை நிறுவுவதாகும். அச்சுதந்திரம் படித்தவர்கட்கோ, பணக்காரர்கட்கோ மட்டிலுமல்ல. வாய்பேசாதிருக்கும் லட்சக் கணக்கான ஏழையர்கட்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுப்பதே என் ஆசை.

டாக்டர்:—ஆம்; நான் பன் முறை உங்கள் கட்டுரைகளில் அவ்விஷயத்தைப் பார்த்திருக்கிறேன். நல்லது. அதற்காக நீங்கள் கையாளும் முறை என்ன?

காந்திஜி:—நான் பலமுறைகளைக் கையாளவில்லை. நான் வேண்டுவது பரிபூரணமான உண்மை, சாத்வீகம் ஆகியவையே. நீங்கள் 'எப்படிச் சாத்வீகமும் சத்தியமும் விவரிக்கப்படுகிறது அனுஷ்டிக்கப்படுகிறது' என்று கேட்கலாம். அதற்கு நான் எனது நடு நிலைமையான விஷயம் சர்க்கா சுற்றுவது என்று கூறுகிறேன். இப்படிக் கூறினால் அமெரிக்கர்கள் திடுக்கிட்டு விடுவார்களென்பதை நான் அறியாமலில்லை.

டாக்டர் டாட்:— எல்லா அமெரிக்கர்களும் அப்படியல்ல. ஒரு தடவை எங்கள் தினசரிப் பத்திரிகைகளிலொன்று ராட்டுச் சுற்றுவதை ஆக்ஷேபித்து ஒரு தலையங்கம் எழுதியது. ஆனால் அத்தலையங்கத்தின் அடுத்த கலத்தில் 40 மனிதர்கள் சேர்ந்து அமெரிக்க ரஸ்தா ஒன்றில் மண் வெட்டுவதாக ஒருசெய்தியைப் பிரசுரித்திருந்தது. உடன் நான் அதன் ஆசிரியருக்குத் தலையங்கத்திற்கும் அடுத்தகலச் செய்திக்குமுள்ள முரண்பாட்டைக் காண்பித்து ஒரு கடிதம் எழுதினேன். அக்கடிதத்தில் நாம் எவ்வாறு தொழிலில்லாமையோடு போராடுகிறோமோ அவ்வாறே இந்தியர்களும் அதனோடு போராடுகிறார்கள் என்று குறிப்பிட்டேன். ஆனால் நீங்கள் ராட்டுச் சுற்றுவதை ஒரு சன்மார்க்கமாகவும் ஆன்மீக விஷயமாகவும்கூடக் கருதுகிறீர்கள்.


காந்திஜி:—ஆம்; நான் அதனை உண்மைக்கும் சாத்வீகத்திற்கும் அடையாளமாகக் கருதுகிறேன். இந்தியர்களாகிய நாங்கள் எல்லோரும் ராட்டுச்சுற்றுவதை ஒரு தொழிலாக ஏற்றுக்கொள்ளும்போது, நாங்கள் வேலையில்லா திண்டாட்டத்தை வென்று விடுவதோடு எங்கட்குப் பிறரைச் சுரண்டித் தின்ன வேண்டிய அவசியமில்லை யென்றும் பணக்காரர்கள் ஏழைகளைச் சுரண்டித் தின்னவேண்டியதில்லை யென்றும் காண்பித்துவிட்டவாராகின்றோம். அது



பிரஞ்சு இந்தியக் கவர்னராகிய கனம் மான்ஸ் சால்மியாக். இவர் தம் மனைவியுடன் காரைக்காலுக்கு விஜயம் செய்தார். அதுபோது அவ்வூர் மேயர் மான்ஸ் அருள் தாமஸும், மாஜி பிரஞ்சிந்தியச் சட்டசபை உறுப்பினரும், காரைக்கால் நிர்வாகஸ்தர் மான்ஸ் ஜெ. சாம்பன் முதலியவர்களும் வரவேற்றுபசரித்தார்கள். படத்தின் நடுவில் கவர்னர் காணப்படுகிறார். —P. P. B.

ஒரு ஆன்மீக சக்தியாதலால் தொடக்கத்தில் மெதுவாகவே வேலை செய்யும் ஒருமுறை வேலை செய்யத் தொடங்கிவிட்டால் பின் வெகு வேகமாகப் போகத்தொடங்கும் என்பது உறுதி. நான் கோடிக்கணக்கான ஏழைகட்குச் சுதந்திரம் வேண்டுமென்று கூறும்போது, அவர்கட்கு உண்ணவும் உடுத்தவும் வகைவேண்டுமென்று சொல்வதோடு இங்கும் வெளியிலுமுள்ள பலரால் சுரண்டப் படலாகா தென்றும் பொருள் கொள்கிறேன். எங்கள் தொகையை 35 கோடியிலிருந்து 35 லட்சமாகக் குறைக்காதிருக்கும் காலம் வரையிலும், எங்கள் சந்தைகளைவிடப் பெரிதாயிருப்பவற்றை அழிக்காதிருக்கும் காலம்வரையிலும் எங்கள் நாட்டைக் கைத்தொழில் நாடாக்கிக் கொள்ளமுடியாது. அளவிடமுடியாத மனித சக்தியிருக்குமிடத்தில் இயந்திர சக்திக்கு இடமில்லையென்று நாங்கள் உணரும் காலம் வந்துவிட்டது. ஒரு இந்தியப் பொருளாதார நிபுணர் ஒரு தடவை என்னிடத்தில் “ஒவ்வொரு அமெரிக்கனுக்கும் 36 அடிமைகளிருக்கின்றனர். ஏனெனில் ஒரு இயந்திரம் 36 அடிமைகளின் வேலையைச் செய்து முடிக்கிறது” என்றார். ஒருகால் அமெரிக்கருக்கு அது தேவையாயிருக்கலாம்; எங்கட்கு வேண்டுவதில்லை. நாங்கள் மனிதனை அடிமைப்படுத்த விரும்பவில்லை; ஆகையால் எங்களால் நாட்டை இயந்திர உலகமாக்க முடியாது.

அடுத்தபடியாக எங்கட்குத் தீண்டாமையோடு போராடவேண்டியிருக்கிறது. தீண்டாமை பலவகையில் எங்குமிருந்து வருகிறது. ஒரு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளி, சுரங்கத்திலிருந்து வரும்போது உங்களோடு கைகுலுக்க முன் வரமாட்டான். அவன் தன்னை முதலில் சுத்தம்செய்துக் கொள்ளட்டுமென்று கூறுவான். இதனால் ஒரு மனிதன் தன்னைச் சுத்தம்செய்துக் கொண்டதும் பிறரைத்தொட அருகனாகி விடுகின்றானென்றேற்படுகிறது. நாங்கள் அந்தத் தீண்டாமையை யொழிக்க முயல்கிறோம். தீண்டாமையோடு சேர்ந்து வேலையின்மையென்ற கொடுமையுமிருந்து வருகிறது. அவர்கள் பிறரோடு சேர்ந்து அனுபவிக்கிறார்கள். உங்கட்கும்கூடத் தீண்டாமை உண்டு. அதனை நீங்களே படைத்துக் கொள்கிறீர்கள். எங்கள் நாட்டுத் தீண்டாமை நாங்களே நிர்மித்துக்கொண்டதல்ல. அதனை ஒட்டும் முறையை நான் கூறுகிறவாறு இந்தியாவில் பரப்பினால், வேலையில்லாத் திண்டாட்டமும் கூட ஒழிந்துபோம். என்பதோடு இனி வருகிறவர்கட்கும் தொழிலும் கிடைக்கும். நாங்கள் (வேறு பாஷையில் கூறுவதானால்) தினசரி ஒரு பென்னியாயிருக்கும் எங்கள் வருமானத்தை இரண்டு பென்சாக்க முயல்கின்றோம். அம்முயற்சி கைகூடிவிட்டால் அதைவிடப் பெரிய காரியங்களைச் செய்யத் தயாராகி விடுவோம். இந்தியர்கள் வீண்பொழுது போக்கும் நேரங்களில் வழியில் செலவிடுவது என்பதறியாமல் தத்தளிக்கிறோம். ஐயா, நான் தங்களிடத்தில் இன்னும் ஒரு கேள்வி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு எத்தனையோ யுவர்களோடும் யுவதிகளோடும் பேசும் தருணம் கிடைக்கும். நீங்கள் இதுவரையிலும் சாதித்த திருப்திகரமான விஷயமென்ன? உங்களது மேலான காரிய சாத்தியத்தைக் கேட்கவில்லை. என்னிடத்தில் வாலிபர்கள் கேட்டால் நான் எதனைக் கூறலாம்? அம்முறையை அவர்களும் தம் வாழ்க்கையில் காண்பித்துக்கொள்ள விரும்புவார்களல்லவா?



பம்பாயில் நடைபெறப்போகும் காங்கிரசிற்கான தொண்டர்கட்கு, ஞாயிற்றுக்கிழமை தோறும் பயிற்சி அளிக்கப்படுகிறது. படத்தில் முதல் நாள் பயிற்சியன்று தொண்டர் தலைவர் தேசியக் கொடியை ஏற்றிவைக்கும் காட்சி விளங்குகின்றது. —S. P. B.

ராட்டுச் சுற்றுவார்களானால் தினசரி வருமானத்தின்மேல் அதிகமாக ஒரு சிறுதொகை கிடைக்கக்கூடும். ராட்டுச் சுற்றுதலென்பதால் இப்போதிருக்கும் தொழிலை விட்டுவிட வேண்டுமென்பதில்லை. எனக்கு நீங்கள் லட்சக்கணக்கான எங்கள் மக்களுக்கு ராட்டுச் சுற்றுவதைவிட அதிக லாபம்தரும் தொழிலொன்றைக் கூறுவீர்களானால் நான் ராட்டைக் கைவிட்டு விடுமாறு கூறிவிடுவேன்.

டாக்டர் டாட் :—நல்லது. நாங்கள் வேலை செய்யும் நேரத்தைக் குறைப்பதற்காகப் பாடுபடுகிறோம். அவ்வாறு நேரத்தைக் குறைத்தால் அதனை என்ன

காந்திஜி :—அது ஓர் கஷ்டமான கேள்வி. என்ன பதில் சொல்வதென்று எனக்கு விளங்கவில்லை. சுருக்கமாக இதையே கூறுவேன்: நீங்கள் அதனையொரு காரிய சாத்தியமென்று ஏற்றுக் கொள்வீர்களோ, என்னவோ! எப்படியாயினும் சரி. எனது எளிமையிலும், தோல்வியென்றும் புயல்போன்றதென்றும் சொல்லப்படுகின்ற வாழ்க்கையிலும் நான் எனது மனசாந்தியைக் காத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றிருக்கிறேன். அதன் காரணம் நான் உண்மையென்று கூறிக்கொள்கிற கடவுளிடத்தில் மாறாத அன்பு காட்டுவதாகும். கடவுளைப் பல பதங்களால் அழைக்கலாம்; ஆனால் நான் ‘உண்மை

யையே கடவுள்' என்ற மொழியால் குறிப்பிடுகிறேன்.

டாட் :—எனக்குத் தெரியும் நீங்கள் குழப்பமும் கலவரமும் நிறைந்த ஒரு உலகில் சாந்தியைக் காண்கின்றீர்கள் என்று.

காந்திஜி :—எத்தனையோ அமெரிக்க நண்பர்கள் 'நீங்கள் ஏசு கிருஸ்துவை நம்பவில்லையானல் சாந்தியைக் காணமாட்டீர்கள்' என்று என்னிடம் கூறுகிறார்கள். ஆனால் நான் ஏசுவே கடவுளின் ஏக புத்திரன் என்று நம்பாமல் போனாலும் சாந்தியை அனுபவிக்கிறேன்.

டாட் :—நீங்கள் இதனைக் கூறியது நன்மையாயிற்று. ஏசுவைப்பற்றிய உங்கள் கருத்தென்னவென்று நான் கேட்கலாமா ?

காந்திஜி :—நான் அவரை ஒரு சரித்திர புருஷனாகக் கருதுகிறேன். அவர் மனிதர்கட்கு உபதேசித்தவர்களில் மிகப் பெரியவர். நான் அவரது போதனைகளைக் கிருஸ்தவர்கள் காண்பிக்கும் பக்தியைவிட அதிகமான பக்தியுடன் உண்மையைக் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடு படித்திருக்கிறேன். அதேமாதிரி வேறுபல மத போதகர்களின் உபதேசங்களையும் கற்றிருக்கிறேன்.

டாட்:-இந்த வேளையில் வேறொன்று கேட்கிறேன். பாதிரிகள் இந்தியாவில் என்ன வேலை செய்திருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது பிசகு செய்திருக்கிறார்களா ?

காந்திஜி:—நான் வேண்டுமென்று கூறமாட்டேன். பாதிரிகள் இங்கு குறை கூறுபவாகவே வருகிறார்கள். அவர்கள் எங்கள் சமூகக் குறைகளை அதிகப்படுத்திக் கூறுகிறார்கள் ; எங்கள் மதத்தைக் குறை கூறுகிறார்கள். அதனால் ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. அவர்கள் கூறும் குறையெல்லாம் எங்கள் தப்பிதங்களை எங்கட்கு எடுத்துக் காண்பித்து எங்கள் கடமை என்ன வென்பதை உணர்த்திவிட்டன.

டாட்:—இது நீங்கள் தனிப்பட்ட பாதிரிகளைப் பற்றிக் கூறுவது. நான் மிஷனரிகள் முழுமையையும் சேர்த்து என்ன சொல்கின்றீர்க ளென்று கேட்கிறேன்.

காந்திஜி:—நான் அந்த வித்யாசத்தை கருதவில்லை. பாதிரிச்சபைக்கு எங்கள் மதத்தைப்பற்றி முற்கூட்டியே வைத்துக் கொள்ளப்பட்ட சில அபிப்பிராயமுண்டு. அதனை ஒவ்வொரு பாதிரியும் பிரசாரம் செய்கின்றான். உதாரணமாக நான் 35 வருடங்கட்கு முன்பு ஜான்ஸி பாரிஸிருக்கையில் ஒரு தடவை ஒரு விவிலியப் புத்தகம் வாங்குவதற்காக விவிலிய சங்கத்திற்குப் போனேன். அங்கு புத்தகத்தோடு அவர்கள் ஒரு வருடத்தில் செய்திருக்கும் வேலையின் அறிக்கை யொன்றையும் கொடுத்தார்கள். அதனைப் படித்ததும் நான் திடுக்கிட்டுவிட்டேன். ஏனெனில் அதில் ஒவ்வொரு பாதிரியும் தன் ஊழியத்தை பவுன், ஷில்லிங், பென்சாகக் கணக்கிட்டிருந்தான். ஒரு கான்வெர்ட் (மதம் மாறியவன்) என்றால் இத்தனை ஷில்லிங் என்று எழுதியிருந்தார்கள். ஒரு மதத்தை அதனை ஆதரிக்கின்ற மக்களின் தொகையால் மதித்துவிட முடியாது.

டாட்:—உங்களது பெரிய ஏமாற்றம் என்ன?

காந்திஜி:—வெளிப்படையாகக் கூறுவதானல் எனக்கு ஏமாற்ற உணர்ச்சி என்பது கிடையாது. ஆனல் சிலகால் எனக்குள்ளேயே நான் ஏமாந்து போவேன். அவ்வளவுதான்.

டாட்:—இன்னும் முடிவாக ஒரு விஷயம். நான் ஜெர்மனியில் பாப்டிஸ்டு கிருஸ்தவர்களின் மகாநாட்டிலிருந்து வருகிறேன். அவர்கள் வருக்க (Racialism) வாதத்தில் உறுதிகொண்டிருக்கிறார்கள். நான் அக்கூட்டத்தில் இன்றையப் பிரச்னை யென்னவென்பது பற்றியும், நம் வாழ்வில் உண்மையும் உறுதியும் கொண்டிருக்க வேண்டுமென்பது பற்றியும், யுத்தம்செய்வது கிருஸ்து தர்மத்திற்கடுத்ததல்ல வென்பது பற்றியும் பேசினேன். முடிவாக அங்கிருந்தவர்களிடம், ஏதாவதொரு தேசம் யுத்த முழக்கம் செய்யுமாயின் உண்மை கிருஸ்தவ நண்பர்களனைவரும் 'எங்களுடைய கிருஸ்தவச் சகோதரர்களைச் சுடமாட்டோம் என்று சொல்லிவிட வேண்டு மென்று வேண்டிக் கொண்டேன். இவ்வேண்டுகோள் உங்கள் கொள்கையை நெருங்கி யிருக்கிறதா ?

காந்தி:—நீங்கள் 'கிருஸ்தவர்' என்ற பதத்தை விட்டுவிட்டு, சகோதரர்கள் என்ற மொழியை உபயோகிப்பீர்களானல் என் கொள்கையை மிகவும் நெருங்கிவிடுவீர்கள். நான் எந்த மனிதனையாகிலும்—அவன் கருப்பாகவோ வெள்ளையாகவோ, கிருஸ்தவனாகவோ, வேறு மதத்தானாகவோ, எதுவா யிருந்தாலும்—சுடச் சம்மதிக்கமாட்டேன். உங்கள் வேண்டுகோளில் எல்லா மனிதர்களுமென்றிருக்க வேண்டும்.

டாட்:—என் கருத்து அதுவே. நான் ஒரு கிருஸ்தவக் கூட்டத்தில் பேசியதாலேயே கிருஸ்தவர் என்று குறிப்பிட்டேன்.

காந்திஜி:—அப்படியானல் சரி. எனக்கும் இந்த எச்சரிக்கையைச் சொல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் சிலசமயம் காட்டுமிராண்டிக ளென்பவர்களைச் சுடுவதில் பாதகமில்லை என்று கொள்ளப்படுகிறது.


டாட்:—இல்லை, இல்லை.

—" ஹரிஜன் "

திருநெல்லையார் தேர்தல் அபேட்சகர்

காரைக்குடி அன்பர்கள் கவனிக்க வேண்டுவதென்ன ?


காரைக்குடி நகர பரிபாலன சபைக்கு அவ்வூர் முத்துப்பட்டணம் திருமதி சுப. திருநெல்லையார் அவர்கள் அபேட்சகராய் நிற்கப் போவதாய் அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறோம். தனவணிகப் பெண்மணி யொருவர் பொதுநல ஊழியத்திற்கு ஊக்கங்கொண்டு நகரசபை ஸ்தானத்தில் அங்கம் வகிக்க முன்னிற்பது அச்செல்வியின் அதிவேக முன்னேற்ற உணர்ச்சியைக் காண்பிக்கின்றது. இதுவரையில் எந்தத் தனவணிகச் சகோதரியும் நகரசபை ஸ்தானத்திற்கு அபேக்ஷகராய் நின்றதில்லை. சகோதரி திருநெல்லையார் சீர்திருத்த வேட்கை மிக்கவர் ; பொது விஷயங்களில் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆசைமிகுந்தவர். அண்மையில் தம் வாழ்க்கைத் துணைவருடன் கடல்கடந்து மலாயாச் சென்று வந்துள்ளார். அவரைப் போன்ற ஊக்கமுடையாரை ஆதரிப்பது நம் பெண்மணிகட்கு நல்லூக்கத்தை நல்கா நிற்கும். எனவே காரைக்குடி நகரவாசிகள் கண்ணியமான முறையில் தங்கள் கௌரவத்திற்குரிய மதிப்பான ஓட்டை நிதான உணர்ச்சியுடன் ஊன்றிக் கவனித்து திரு மிகு திருநெல்லையாருக்கு வழங்குவார்க ளென்று நம்புகின்றோம் என்று கொழும்பு திரு RM. SM. கதிரேசன் அவர்கள் எழுதுகிறார்கள்.



பர்லின் நகரத்திலுள்ள ஓர் அழகிய செயற்கை நீரூற்று.



ஆஸ்திரேலியாவிலுள்ள கரடிகள். பர்லின் நகரக் காட்சிச் சாலைக்காகக் கொண்டுபோகப்பட்டிருக்கின்றன. —N.I.A.




ஜர்மனிக்குச் சொந்தமான ந்யூவெர்க் தீவில் காணப்படும் கலங்கரை விளக்கம். ஹம்பர்க் துறைமுகத்திலிருந்து இங்கிலாந்து செல்லும் கப்பல்கட்குப் பெரிதும் உதவுகின்றது. இதன் உயரம் 190 அடி. 1299-ம் வருடத்தில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. 19-ம் நூற்றாண்டில் நெப்போலியன் இதனை அழித்துவிடப் பார்த்தார். முடியவில்லை. கடலாலும் அசைப்பட்டு விடாதபடி இருக்கிறது. அதன் சுவர்கள் அடியில் 9 அடியும், உச்சியில் $4\frac{1}{2}$ அடியும் கனமிருக்கின்றன. இந்தத் தீபஸ்தம்ப ஒளியில் 21 கதிர்கள் உண்டு. —N. I. A.




சமீபத்தில் காலஞ்சென்ற ஜெர்மன் தலைவர் வான் ஹிண்டென்பர்க்கின் பிணம் இரவில் தீப்பந்த வெளிச்சத்தில் கொண்டு போகப்படுகிறது. பிணப்பெட்டி ஜெர்மன் கொடியால் மூடப்பட்டிருப்பது காண்க. —S. P. B.



டோக்கியோ நகரிலிருக்கும் "சாமான்" பதிவு நிலையம். —S. P. B.



ஜெர்மனி வெஸ்டு பாலன் என்ற இடத்திலிருக்கும் பஜாரில் ஓர் தெருவின் தோற்றம். —N. I. A.



ஜெர்மனியில் நடைபெறும் மத்திய வேனிற் காலக் கொண்டாட்டம். இக்காலத்தில் மிகவும் அதிகமான வெளிச்சம், "அரோரா போரியாலிஸ்" வெளிச்சத்தையே ஒத்திருக்கும். ஒவ்வொரு ஊரும் அக்காலத்தில், "மேபோல்" என்ற கம்பத்தைப் பூக்களால் அலங்காரம் செய்து நிறுவும். அக்கம்பம் பாக்கியத்தை அளிக்குமென்பது துணிபு. —N. I. A.

தொடர் கதை

கூடுவழியில் காதலி

(Eesy)

[சென்ற வாரம், கனகலட்சுமிப் பாட்டி அனுப்பிய கடிதத்தோடு, என் காதலி மங்கையர்க்கரசி பதுங்கி வைத்திருந்த கடிதத்தின் ஒரு பகுதியைத் தந்தேன். அதிலிருந்து எனக்கு விஷத்தைப் போட்டவள் என் காதலிதானென்றும், அவள் எவ்வூரினள், எக்குலத்தினள், எத்தகையாள் என்றும் தெரிந்துகொண்டதோடு, அவள் கல்யாணமான பருவம் வரையிலுமுள்ள நிகழ்ச்சிகளையும் அறிந்துகொண்டேன். எஞ்சிய பகுதியை இவ்வாரம் தருகிறேன்.

முந்திய வாரக் கதை தெரியாத அன்பர்களும் இதனை வாசித்தால் விஷயம் தெரிந்து கொள்வார்கள்.]

கொக்கிர குளத்தில் எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய வீட்டில் ஒரு பாட்டி வசித்து வந்தாள். அவள் பரமசாது. வெண்மையானதெல்லாம் பால் என்று நம்புகிறவள். இட்லி வியாபாரம் செய்வது அவளது தொழில். இட்லியை உருசியாகவும் அழகாகவும் வார்ப்பதில் அவளுக்கு இணையாக எவரையும் கூற முடியாது. ஆதலால் அந்தத் தெருவிலுள்ளவர்களெல்லாம் அவளிடம் காலைப் பலகாரம் வாங்குவது வழக்கம். நானும் பெரும்பான்மையும் காலை வேளையில் இட்லி வாங்க அங்கு செல்வேன். அங்கு ஆண்கள் அதிகமாக இல்லை; ஆகையால் இருபது நிமிஷம் முப்பது நிமிஷம் காத்திருந்து தமாஷ் பேசி இட்லி வாங்கி வந்தாலும் வருவேன். அந்தப் பாட்டிக்கு நன்றாக பழம் பாட்டுகள் தெரியும். சிலகால் பாட்டுகளைப் பல மணி நேரம் சொல்லி என்னைக் காக்கவைத்து விடுவாள். என் சுற்றத்தார் நான் அங்கு தங்கிவிட்டதற்காகச் சண்டைபோட்டுவிட மாட்டார்கள்.

இங்ஙனம் நான் அப்பாட்டி வீட்டிற்குப் போய்வரவும், சில நாட்களாக ஒரு இளைஞன் அங்கிருக்கக் கண்டேன். அவன் தோற்றத்தால் உருசியாகத் தோற்றியதோடு, கல்வி கற்றவனாகவும் உயர்ந்த அந்தஸ்துடையவனாகவும் காணப்பட்டான். அவனுக்கும் அப்பாட்டிக்கும் மிகுந்த பழக்கமிருந்தது போலும்; அன்பாகப் பேசிக்கொண்டார்கள். ஒரு நாள் நான் இட்லி வாங்கிவிட்டு வெளியேற விருந்ததும், அவன் "பாட்டி! இந்தப் பெண் யார்? எவ்வளவு அழகாக விருக்கிறாள்! திருநெல்வேலியே சலாம் செய்யலாம் போலிருக்கிறதே! கல்யாணமாயிற்றா இவளுக்கு?" என்பன போன்ற கேள்விகள் பலவற்றைக் கேட்டான். என் செவியில் விழவேண்டுமென்றே அக்கேள்விகளைப் போட்டான் போலிருக்கிறது. ஆதலால் வெளியே சென்ற நான் சற்று மறைவாக நின்று கூர்ந்து உற்றுக்கேட்டேன். அவன் வானளாவ என்னைப் புகழ்ந்து என் வனப்புக் கடிமைப்பட்டு விட்டதாகக் கூறித் தவித்தான். அவ்வுரைகள் எனக்கு உருசியாகவே தோற்றின. ஆதலால் மறுநாள் இட்டிலிக்குச் சென்றபோது, அவன் அங்கிருக்க வேண்டுமென்று மனதுக்குள் பிரார்த்தித்துக் கொண்டேன். உண்மையில் அவன் இருக்கவும் செய்தான். அவனைக் கண்டதும் என் பார்வை அவன் மீது வழுக்கி வீழ்ந்தது. அவனும் கண்ணோட்டங்களில் சிலவற்றை என்மீது பாய்ச்சினான். எனவே—திறந்து கூறிவிடுகிறேன்—என் மனம் சிதறி ஆட ஆரம்பித்தது. ஆதல்பற்றி அன்று இட்டிலி வாங்கிக்கொண்டு சென்றது வரையிலும் என் மனம் என்னிடமிருக்கவில்லை.

இவ்வாறு சுமார் நான்கு நாள் கழிந்ததும்—அதாவது என் கண்களும் அவ்வாலிபனின் கண்களும் முட்டிமோதிக் கட்டிப்பிடித்து நான்கு நாள் உருண்டு புரண்டதும்—ஐந்தாவது நாள் காலையில் சற்றுப் பிந்தி இட்லி வாங்கப் போனேன். அவ்வாறு பிந்திப்போனதின் அந்தரங்கக் கருத்து மற்றவர்களெல்லாம் பாட்டி வீட்டுக்கு வந்து போகட்டுமென்பதுதான். அக்கருத்தோடு சென்ற நான் உண்மையில் வெற்



சென்னை சர்க்கார் ஹோம் மெம்பர் ராவ்பகதூர் எம். டி. பன்னீர்செல்வம் அவர்கள் சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலையில், சென்னை வேப்பேரி செண்டு ஜோஸப்ஸ் ஆலயத்தில், 'பான்ஸி பீட்' விழாவை ஆரம்பித்து வைத்தார். படத்தில் ஹோம் மெம்பர், டிப்டி போஸ்டு மாஸ்டர் ஜெனரல் மிஸ்டர் எப். டி. பீட்டர்ஸ் முதலியோர் காணப்படுகிறார்கள்.
—P. P. B.


றியடைந்துவிட்டேன். அங்கு வாலிபர் உட்கார்ந்திருந்தார்; பாட்டியும் காணப் பட்டாள். நான் "சரேலென்று" வீட்டுக்குட் புகுந்து வாலிபர் கண்ணுக்குத் தென்படாது ஒருபால் (கதவோரம்) ஒதுங்கி நின்று பாட்டியிடம் பலஹாரம் கேட்கவும், பாட்டி "ஐயா, இந்தப் பெண் யார் தெரியுமா? மங்களமிருக்கிறாளே அடுத்த வீட்டில்; அவளுடைய புதல்வி. திலகருக்குக் கைவளையளித்தவள் இவள்தான். இப்போது கல்யாணமாகாது ருதுவாகி இருக்கிறாள். மாப்பிள்ளைகள் பெருவெள்ளமாக ஒழுகுகிறார்கள்......."என்று வாலாற்றைக் கூறலானாள். நான்வெட்கங்கொண்டு "சும்மாவிரு பாட்டி" என்றேன். அவள் ஒன்றையும் கேட்கவில்லை. "படபட" வென்று பேசத்தொடங்கி "இப்போது கார்குறிச்சி மாப்பிள்ளைக்கு வாழ்க்கைப் படப்போகிறாள்" என்று ஜோசியம் கூறினாள்.

இப்படிக் கூறியதோடு விட்டாளா? மெதுவாக வெளியே இறங்கியும் போய் விட்டாள். ஆகவே தனிமையில் விடப் பட்ட என்னிடம் மேற்படி வாலிபன் எப்படி நடந்திருப்பான்? அவன் வாய் ஏதேதோ சொல்லலாயிற்று. நான் ஒன்றுக்காவது பதில்கூறவில்லை. அப்பால் அவன் எழுந்துவந்து, பக்கத்து அறையில் என் முன்னால் நின்றுகொண்டு, புன்சிரிப்புடன் தன் கைக்குட்டையை என்னை நோக்கி எறிந்தான். அதற்கு நான் சற்று நீங்கிக்கொண்டதன்றி யாதும் வருத்தம் தெரிவிக்கவில்லை. அப்பால் "மங்கையர்க்கரசி! கைக்குட்டையைக் கொடு; இல்லையானால் நான் வந்து எடுப்பேன்!" என்றான். அதற்கும் நான் பதில் கூறவில்லை. உடன் அவன் வந்து கைக்குட்டையை எடுத்துக்கொண்டு "பொருக்கென" என் கன்னத்தில் ஒரு அடி அடித்து, "நான்தான் கார்குறிச்சி காசிநாதன்" என்றான். உடன் என்னைத் தூக்கி வாரிப்போட்டு விட்டது அப்பேச்சு. நான் திகைத்துக் கல்லாகி நின்றேன். அத்திகைப்பினிடையில் அவன் பலமுறை எனக்கு முத்தம் கொடுத்து விட்டதாக அரை மணி நேரத்திற்குப் பின் உணர்ந்தேன்.

அதிகமேன்? சற்று நேரத்திற்குள் வீட்டுக்குப் போய்விட்டேன். வீடு சென்றதும் கழிந்த கதைகள் மிகவும் ருசியாகவும் இன்பமாகவும் தோற்றின. என்னால் அவ்விளைஞனைக் காணாமலிருக்க முடியாதென்று தோற்றிற்று. எனவே மெல்ல நான் மாலையில், பலகாரப் பாட்டியை நாடி, பலப்பல பேசி, கடைசியில் மறைமுகமாக இளைஞனைச் சந்திக்கு மாறுவழிவிட வேண்டினேன். அதற்கு அப்பாட்டி "அடீ பேதை! உன் தாயார் தானே இத்தனையும் செய்தார்கள். அவளுக்குக் காசிநாதனுக்கே உன்னை மணம் செய்து கொடுக்கவேண்டுமென்பது ஆசையென்று தெரியாதா? அவள் அபிப்பிராயப்படித்தானே நான் உனக்கு அவன்மீது காதல் தோன்றுமாறு நடந்து கொண்டேன். உன் தாய் உன்னை எப்படியும் அவனுக்குக் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று கருதுகிறாள். உன் நடுநிலைமை கலைந்துவிட்டதல்லவா இப்போது!" என்று சொல்லிக் கொண்டு பலவாறு பரிகாசம் பண்ணினாள். சிறிது நேரத்தில் அவள் முன் என் நாணமெல்லாம் பறந்துவிட்டது. அப்பால் அந்தப் பாட்டி (நான் அவளிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட மாதிரி) காசிநாதனைச் சந்தித்தலாகிய என் இச்சையைப் பூர்த்தி செய்தாள்.

மன்னிப்பு அருளும் என் மாண்பே! மேற்படிக் கதையை நான் அதிகம் வளர்க்க விரும்பவில்லை. சுருங்கக் கூறினால் நான் அன்று தொட்டுக் காசிநாதனின் ஆசைக் கிழத்தியாயினேன். பல நாள் இருவரும் சந்தித்தோம். அப்பால் கிருஸ்மஸ் விடுமுறை வந்ததும் அவன் ஊருக்குப் போனவன் கொக்கிர குளத்திற்கு வரவில்லை. நான் இரகசியமாக எங்கெங்கோ விசாரித்தேன். அவன் ஹிந்துக் காலேஜில் (திருநெல்வேலி) படிக்கின்றானென்பதைத் தவிர வேறு தகவலொன்றும் கிடைக்கவில்லை.

அப்போது என் வயிற்றில் மூன்று மாதம் என்பதனை என் ஆருயிர்த்துணைவா! கூறாதிருக்க முடியவில்லை. ஆ! என்னிருதயம் எப்படித் துடித்தது தெரியுமா! பாட்டியும் தாயும் பட்ட பாட்டைப் பகர முடியாது. தாயார் பல வழியாலும் கார்குறிச்சியானைக் கொண்டு திருமணத்தை நடத்திவிட வேண்டுமென்று முயற்சி செய்தார்; முடியவில்லை. அப்பாவி! எங்கள் கண்ணுக்கே தட்டுப்படவில்லை. தாயார் வெளிப்படையாக நான் தவறிப்போய் விட்டேனென்று என்னைத் திட்டினாலும் உள்ளூர அழுத அழுகையின் நீளத்தை அளந்து கூற முடியாது. தாம் புருஷனை இழந்து விதவையாகித் தவித்ததுபோல்



காசிநாதன் மங்கையர்க்கரசிமீது கைக்குட்டையை எறிந்தான்.

தம் புதல்வியையும் அழித்து விட்டோமே என்று மெழுகா யுருகினர். அன்றுதொட்டு அவரது உடலம் சிறுகச் சிறுகக் கெட ஆரம்பித்துச் சருகாய் மாறத் தொடங்கியது.

இந்த நிலையில், என் கருப்பத்தின் கதியென்ன வாகும்? சுமார் 5 மாதமானதும் கொக்கிர குளத்திலும் சுற்றுப் பக்கங்களிலும்—என் திருநெல்வேலி ஜில்லா முழுதுமே—விஷயம் தெரிந்து போயிற்று. அன்பரும் அயலாரும் அநுதாபிகளும் அல்லாதவரும் அதே பேச்சிலேயே ஆழ்ந்தனர். சின்னாளில் போலீசார் வந்து கைப்பற்றிக் கொள்வார்களே என்றும் தோற்றிற்று. ஆதலால் தாயார் கெஞ்சிக்கெஞ்சி மாமனருக் கெழுத, அவர் பறையன் வீட்டுக்குள் புகுந்துவிட்டதைக் கண்ட கும்பகோணம் பார்ப்பானைப் போல் அருவருப்புடன் வெகுண்டு, மெதுவாக ஒரு நாள் இரவு வந்து என்னை 12 மணி ரயிலில் மதுரைக் கழைத்துச் சென்று மாட்டு வண்டியில் எங்கோ ஒரு கிராமத்திற்குக் கொண்டுபோனார். அங்கு சில நாட்களாகச் சிற்சில மருந்துகளை உட்கொண்டேன். பக்கத்தில் தாயாரும் இருந்து சிகிச்சை செய்தார். 10 மாதமானதும் குழந்தை யொன்று பிறந்தது. நல்ல வேளையாக அதற்கு உயிரில்லை. அதனை அங்கு மண்ணில் அர்ப்பணம் செய்தோம். அப்பால், சில மாதங்கள் மதுரையில் தங்கிவிட்டுப் பிறகு மெதுவாக இரவோடு இரவாய் ஸ்ரீவைகுண்டம் சென்றோம். அங்கு சென்றதும் "ருதுவானவள் குழந்தை பெற்றாள்!!" என்ற செய்தி மெதுவாக வெளியே பரந்து பலர் என்னைப் பார்க்க வந்தார்கள். எனக்கு வந்த மானம்—ஐயோ! என்ன பதங்களில் கூறுவது என்று புரியவில்லை. முனிசிபல் சபைகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொணர்ந்து சலாம் போடப்படும் தலைவரைத்தான் எனக்குச் சமமாய்க் கூறலாம். இலேசு லேசாக அவர்களிடம் தலைகாட்டி அப்பால் இரண்டு வருடங்களின் பின்பு சற்றுத் தலை நிமிர்லானேன்.

என் அன்புத் தளையே! மேற்சொன்ன ஒழுக்க வழுவினால் என் மணம் தடைப்பட்டுப் போயிற்று என்று சொல்ல வேண்டுமா? என் சுற்றத்தார்—ஜாதியாரெல்லாம்—என்னை நீத்தார்கள். நாங்களும் கல்யாண மென்பதுபற்றி வெளியே பேசாமலாயினோம்.

சீர்திருத்தப் பிரியரே! இப்படி யோர் மங்கையின் வாழ்க்கை சீர்குலைவதானால் எவ்வாறு கடைத்தேறுவாள்? அக்கவலையால் என் தாயார் உடல்நைந்து ஊன்நைந்து உயிர்நைந்து உலகை ஒழித்தார். மாமனாரும் மானத்தால் மடிந்து போனார். இப்போது அவருடைய குழந்தைகளும் பாட்டியுமே இருக்கிறார்கள். பாட்டிதான் தங்கட்குக் கடித மெழுதிய கனகலட்சுமி அவர்கள். அவர் உயிர் வாழ்வது என் உயிரைக் காப்பாற்றுவதற்காகத்தான். நான் எப்படியாவது தற்கொலை புரிந்து கொள்வேனென்று அவர் கருதுகிறார் போலும். ஆதலால் என்னைக் களிப்பிக்க நினைக்கும் அவருடன் நான் கூனியூரில் எங்கட்குச் சொந்தமான வீட்டி லிருக்கிறேன். 'கதலி நிலயம்' எங்கள் சொந்த வீடு என்று நீங்கள் அறிவது தகுதி. கூனியூரில் நாங்கள் என் அவமானத்தைத் துடைத்து என் வாழ்க்கை இரகசியத்தை மறைத்துக் கொள்வதற்காக என்னை ஓர் விதவையென்று கூறிக் கொள்கிறோம்.

இங்கு எங்கட்குப் பெருந் துணையாக விருப்பவர் அத்தான் திருமலையப்பர் தாம். அவரது மனைவியாராகிய கல்யாணி அவர்கள் என் குடும்பத்தைச் சேர்ந்தவராவர்; அவர் எனக்கு மிக நெருங்கிய பந்து; அக்காள் முறை வரவேண்டியவர். அவருக்கு என்மீது மிகுந்த அநுதாபம். என் கோலத்திற்காக நிமிஷம் பிரதி கண்ணீர் விடுகிறார். நான் உயிர் வாழ்தற்கு அவர் ஓர் காரணமென்று கூறலாம்.

கூனியூரார் பலர் நான் விதவையென்றும், கல்யாணமாகிப் புருஷனை இழந்துவிட்டவ ளென்றும் நினைத்திருக்கிறார்கள் என்று என் இருதயமே! நீங்கள் அறியவேண்டும். சிற்சிலர் இங்கு என்னைக் 'கமலம்' என்றும் அழைக்கின்றனர். அன்று நீங்கள் பிரசங்கம் செய்தபோது விதவைகளைப் பற்றிப் பேசியகால் 'ஒரு கமலமிருக்கிறாள்; ஒரு மங்கையர்க்கரசி யிருக்கின்றாள்' என்று கூறினீர்களென்பது ஞாபக மிருக்குமே. அப்போது ஒரு தோழி என்னை இடித்துச் சில கூறியதையும் கவனித்தீர்க ளன்றோ? நான் அப்போது என்னைத் தெரிந்துதான் பெயர் சொல்கின்றீர்க ளென்று நினைத்துக் கொண்டேன். பாட்டியின் கவனம் அதிகமாகப் பிரசங்கத்தில் பதிந்ததும் அதனாலே தான். ஆனால் பின்னடி நடந்தவற்றால் நீங்கள் "பேச்சுக்கு"த்தான் அப்பெயர்களைக் கூறினீர்களென்று தெரிந்து கொண்டேன்.

இப்போது என் இன்பாசமே! என் வரலாற்றைப் பெரும்பான்மையும் கூறிவிட்டேன். என்பரிதாப வாழ்க்கை கழிந்து இப்போது நான்கு வருடங்களாகிவிட்டன. இதுகாலை என் தப்பிதமும் நிலைமையும் கடமையும் இமாலயம்போல் எனக்கு தெரிகின்றன. கடந்த விஷயங்கட்காகக் கழிவிரக்கமும் கொள்கின்றேன். இனி என்வாணாளில் எத்தகைய தப்பிதமும் தலை காட்டா தென்பது தேற்றம்.

இக்கதை தெரிந்த பின்னர் என் குளிர் தருவே! தருநிழலே! நீங்கள் என்னை ஏற்றுக் கொள்வீர்களோ; தள்ளிவிடுவீர்களோ! நான், பின்னடி நீங்கள் தெரிய வரும் விஷயத்தை முன்னடியே தெரிவித்துவிட்டேன். எனக்கு நீங்கள் ஏமாறிப்போக மனமில்லை. என் இரக்கப் பொக்கிஷமே! காருண்ய நிதியே! தங்கட்கு மன்னிக்கும் மனப்பான்மை யுண்டெனில்—தஞ்சமென்றோரைத் தவிக்கவிடாத தனிப் பெருந்தன்மை யுண்டெனில்—பச்சாதாபம் தெரிவிப்போரை பரிந்தேற்றுக் கொள்ளும் பாசம் உண்டெனில்—அவற்றை என்பால் விளக்கிக் காண்பிக்க! என் அருங்கனியே! என்னை—நீ—ங்—கள் ஏற்றுக்கொள்ளாது—இருப்பின் எனக்கு ஆதரவளிக்கும் ஒருவர்—ஓர் சீர்திருத்த இளைஞர்—ஓர் அறிவியல் வாதி—ஓர் அரிவையர் நண்பர்—ஓர் உண்மை உணரும் உத்தமர் கூட இல்லை என்று கருதுவேன். நீங்கள் என்னை நீத்துவிடின்—என் நேசவுருவே! நான்—என்—உளத்தை எனவே—ஊனை—எனவே உயிரைத் தொட்ட உங்களைப் பிரியின்—ஏன் வாழவேண்டும்? காசிநாதன் என்ற மாணவரால் அழிக்கப்பட்ட நான் கோவிந்தராஜு என்ற மாணவரால் கொல்லப்பட்டேனென்று காட்டிக்கொள்வேன். அதோடு, பாரதி கூறிய போலிச் சீர்திருத்தவாதிகட்கு நீங்களோர் திருஷ்டாந்தமென்றும் நிரூபித்து வைப்பேன்.

என் பாச ஒளியே! கூனியூரை அடைந்த பின்னர் நான் கவலை யென்

னும் கடலில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்திருப்பே னென்று தெரிந்திருப்பீர்களன்றோ? அவ்வாறு தவித்து உயிர் மாயப் போகும் ஓர் தருணத்தில் சீர்திருத்தப் பிரசங்கமென்ற பாய் கட்டியோடும் நீங்களாகிய படகைக் கண்டேன். ஆதலால் எப்படியோ உயிர் பிழைத்தால் போது மென்று (ஜாதி மதம் வகுப்பு முதலிய) எதையும் கவனியாது, (தெரிந்தவர்களா அல்லவா வென்கின்ற எண்ணத்தைக் கூடத் துறந்து) நான் படகை அண்மிப் பிடித்தேன். எனக்கு அப் படகு முற்றிலும், முழுமையும், சம்பூர்ணமாகவும் ஆதாவளிக்கு மென்று தோன்றிற்று. ஆசைக் கொழுந்தே! ஓர் கடலில் தவிக்கும் அகதிக்கு எந்தப் படகுதான் துணை நல்காது? அப்படியிருக்க (என்) தோழிகள் நான் பிடித்த படகின் சீரிய ஆக்கத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். ஆதலால் என் நம்பிக்கை இன்னும் சிறிது விளக்கம் பெறலாயிற்று. அப்பால் நேரில், பாயின் (sails) பலத்தையும் அழகையும் கண்டதும் என் நம்பிக்கை ஆநந்தமாகப் பரிணமித்தது. ஆதலாலேயே என் உள்ளத்துள் உறைபே! நான் சிறிது நேரத்தில் மிகத் தாராளமாய் நடக்கலாயினேன். ஆதலால் என் நடவடிக்கைகளைச் சந்தேகிக்கலாகாதென்று மறு முறையும் கேட்டுக் கொள்கிறேன். இரக்கம் வேண்டும். வணக்கம்.

தங்கள் கடிதமொன்றைப் பெற ஆசைப்படுகிறேன்.

இங்கு அனைவரும் சுகம். பாட்டியும் கல்யாணி அக்காள், அவரது கணவர், சுற்றத்தார் முதலியோரும், மணமக்களும் க்ஷேமம். ஊருக்குள் கல்யாணத் தடபுடல் (எதிர்ப்பு) அதிகமாக இல்லை. பாட்டி விரும்பியவாறு நான் தங்கள் தாயாரை—என்........ரைக் காண விரும்புகிறேன். அவசியம் நீங்கள் என்னை ஆட்கொண்டாலும் வெறுத்துத் தள்ளினாலும் இன்னும் சில நாட்களில் இங்கு வரவேண்டும். தங்களைக் காணாத நாளெல்லாம் வீணாளேயாம்!

என் இன்னுயிரே, இன்சுவையே, இன்னமுதே! தங்கள் கையால் வரையப்பட்ட கடிதம் ஒன்று வேண்டும்; திருமுகத் தோற்றம் வேண்டும்; திருவை வேண்டும். விதவை யென்ற பெயரால் அடிமாண்டு போக வேண்டிய என்னைக் கரையேற்ற வேண்டும். வேண்டும் நலம். நலம் நலம்.

தங்கள் அழியாக் காதலி,
மங்கையர்க்கரசி.

6. நானும் தாயும்

படித்தேன் கடிதத்தை. நெஞ்சு ஐந்து முழம் உயர்ந்து அடங்கியது. மூக்கு வழியாக இருபதடி பாயும் ஒரு பெருமூச்சுப் பாய்ந்தது. ஆ! என்ன மாயம்? என் உயிரினுக்குயிராய் அதனினுமுயிராய் நான் நினைத்துக் கொண்



குடகு மெர்காராவில் வசிக்கும் ஸ்ரீமதி பத்மாவதி சின்னப்பா. இவர் கிராம அபிவிருத்தி வேலை, சுகாதாரம், சமூக சாஸ்திர மாகியவற்றில் பயிற்சி பெறுவதற்காக இங்கிலாந்து சென்றிருக்கிறார். லேடி டாடா ஞாபக உபகாரச் சம்பளத்தை இவர் பெற்று வருவது குறிப்பிடத் தகுந்தது. S. P. B.

டிருக்கும் ஓர் பெண்—பெண்ணரசி—மங்கையர்க்கரசி—இப்படிக் கூறுவாளா? நான் இருபத்தொரு நாளாய் இவ்வரிவையர் நாயகத்திற்காக என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கிறேன்; எவ்வளவு பிரேதாகாரமாய் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறேன்; எவ்வாறு தவித்துத் தவித்து சருகாகிக் கொண்டிருக்கிறேன்! அந்த நிலைமையில் என் இரக்கத்தை அப்புனிதவதி—காமக் குவியல்—காதல் களஞ்சியம்—எழில் பிழம்பு—இன்பத்தின் மனித உருவம்! எதிர்பார்ப்பதென்றால், காந்திஜி ஓர் தேசபக்தர் தானாவென்று ஆராய்வதைவிட—பணக்கார ஆதிக்கம் உலகிலிருந்து ஒழிய வேண்டுவதுதானா என்று சிந்திப்பதைவிட—வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை அடைய வேண்டுவதுதானா வென்று ஆலோசிப்பதைவிட எந்த வழியில் பின்போனது? என் மனம் ஓயாது,

காதலை நாடிக் கரைகின்றேன்.—

இல்லையெனில் காதலை நாடித் தவிக்கின்றேன் என்றன்றோ கீதம் பாடுகின்றது?

காதல் காதல் காதல்
காதல் போயில் காதல் போயில்
சாதல் சாதல் சாதல்

என்பதன்றோ என் நிலைமை? எனவே மங்கையர்க்கரசியின் மேற்படிக் கடிதம் எவ்வளவு புதுமையாகத் தோன்றியிருக்கும் எனக்கு?

நான்—ஆம்—அக்கடிதத்தின் பொற்பை, புனிதத்தை, புதுமையைக் கண்டு வியந்தேன். மங்கையர்க்கரசி இவ்வளவு எழுதும் ஆற்றல் பெற்றிருக்கின்றாளா வென்று திறமாந்தேன்! அவளது சாகித்ய சாதுர்யத்தைக் கண்டு சலன மெய்தினேன். என் அன்பான வாசகர்களே! பொறுமையுள்ள நேயர்களே!—இந்தவிடத்தில் ஒன்று கேட்கின்றேன் உங்களை. உங்களில் யாரேனும் இவ்வளவு சுவையுள்ளவோர் காதற் கடிதத்தைப் பெற்றிருக்கின்றீர்களா? பெற்றிருப்பின் தங்கள் ஆருயிர் நண்பனான எனக்கு ஊழியன் விலாசத்திற் கெழுதிக் கடிதத்தின் சுவையைக் காண்பியுங்கள். நாமனைவரும் காதலென்னும் ‘தேவாம்ருதக் கூட்டுணவை’ நுகர்ந்து இன்புறுவோம். என் அபிப்பிராயத்தில் — எவராயினும் சரி—ஓர் உயர்வான காதலியைத் தன் மனைவியாக அடையாது போனால்—ஒன்றெனினும் பாதகமில்லை — காதல் கடிதத்தை அப்பெண்மணியிட மிருந்து பெறுமற்போனால்—வாழ்க்கை யின்பத்தின் பெரும் பகுதியை இழந்தே விடுகின்றார்கள். ஆ! தம் உயிர்கொள்ளும் காதலி, பல மைல் தூரத்திலிருந்து என் ஆருயிரே! அல்லது காதலா! என்ற ஆசை மொழி சூட்டி ஓர் கடிதத்தை அனுப்பின் எவ்வளவு பெரும் இன்பமாகத் தோற்றுமது? ஒரு நாளேனும் அதனை அனுபவியாத ஆடவரை என் நிர்ப்பாக்கியர்களென்று நான் கூறலாகாது? போகட்டும். வணக்கம்.

(தொடரும்)



‘நானே கொன்றேன்!’

(மாத்ரு)

—+—

லக்ஷ்மீகாந்தன் ஒரு நூதனமான மனிதர். அவர் மனதில் என்னதான் எண்ணிக்கொண்டு இருக்கிறார் என்று ஒருவராலும் லேசில் அறிந்துவிட முடியாது. அவர் தொழில்—அதுவும் பொழுது போக்காகத் தான்—கதை, நாவல்கள் எழுதுவது. எந்தப் பழைய நைந்த விஷயத்தையும் ரஸமாகவும் மனதைக் கவரும்படியாகவும் ஒரு புதிய தோரணையில்தான் எழுதுவார். அதிலே இவருக்கு நல்ல பெயர், ஏன்? புகழும் உண்டு. ஆள் பார்வைக்குக் கம்பீரமான, மனதை அப்படியே தன்னுள் வசீகரிக்கும் தன்மை வாய்ந்த தோற்றம். நாற்பது வயதிருக்கும். கபோலத்தில் சிறுநரை இருந்தாலும் ஆள் பார்வையில் ஒரு கம்பீரம், சிறிது மமதை, இவை எல்லாம் தோன்றும். உலகத்தின் கோழைத்தனம், சிறுமைக் குணம் எல்லாம் இவர் முன் நிற்கக் கூசும். எப்பொழுதும் ஒரு சிரிப்பு-விதியின் அற்ப விளையாட்டுக்களையும் உலகத்தின் அசட்டுத் தனத்தையும் துச்சமாக நினைப்பது போல் ஒரு புன்சிரிப்பு.

இவருக்கு ஒரு இளைய சகோதரன் உண்டு—பெயர் மகாபூஷணம். இருவரைப்போலும் இரண்டுவிதமான தனிக் குணம் படைத்த ரத்தக் கலப்புள்ள, ஒரே மரத்தின் இரட்டைக் கிளைகள் போன்ற, இருவரைக் காணமுடியாது. அண்ணன் உலகத்தில் வெறுப்பைக் கேவலத்தைப் பார்த்து நகையாடும் தனிச் சிரிப்புடையவர். தம்பி உலகத்திலே காதலும், கனவுகளும் கண்டு களிக்கும் இலக்ஷியவாதி. படங்கள் வரைவதில், இவரது கனவுகளைத் திரைச் சீலையில் உருவாக்குவதில் எப்பொழுதும் இவருக்கு பெரிய மோகம். இப்பொழுது இருக்கும், படம் எழுதும் வாத்தியார்ப் பாடத்தை, ஓவியம் என்று சொல்லிக்கொண்டு வரும் சித்திரக்காரர்களைப் போலல்ல இவருடைய படம். இம்மாதிரியாக தனிப்பட்ட எதிர் எதிரான குணங்கள் படைத்த இரு சகோதரரிடையே இருந்த பாசம், மனித உலகத்தில் காணப்படாதது. அது வெறும் சமாச்சாரமாகமட்டு மல்லாமல் ஒரு பெரும் கதையாக ஒரு இலக்ஷியமாக ஜனங்கள் பேசிக்கொண்டு வந்தார்கள்.

மகாபூஷணம் இறந்த பிறகு லக்ஷ்மிகாந்தம் சமூகத்திலிருந்தே மறைந்து விட்டார் என்று சொல்லிவிடலாம். பிறகு எங்கு சென்றார் என்னசெய்து வருகிறார் என்று யாருக்கும் தெரியாது.

இப்படியிருக்கையில் இவருடைய நண்பர்களுக்கு ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. ஒரு புதிய வீடு, பெரிய மாளிகை என்றே சொல்லலாம், மாம்பலத்தில் வாங்கியிருப்பதாகவும் அதற்குப் புண்யாவசனம் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு ஒரு பெரிய விருந்து நடத்தப் போவதாகவும் அவசியம் வரவேண்டும் என்றும் எழுதியிருந்தது. அவருடைய நண்பர்கள் அவரைப் பார்க்கவேண்டிய ஆவலில் அன்று அவரைக் காண்பதற்குத் தீர்மானித்ததில் ஆச்சரிய மில்லை.

“லக்ஷ்மி விலாசம்”—அது தான் அவர் மாம்பலத்தில் வாங்கிய பங்களா—ஒரு பழைய கட்டிடம். ஊருக்குச் சற்று வெளியே மரமடர்ந்த சாலையில் ரஸ்தாவிற்குச் சற்று உள்ளடங்கி இருந்தது. பெரிய ‘காம்பௌண்டு’, கட்டிடத்தை மறைக்கும்படி மரங்கள் ஆகியவை ஒரு விதப் பயத்தைக் கிளப்புவதா யிருந்தன. லக்ஷ்மிகாந்தத்தின் மனப் போக்கையறிந்தவர்களுக்கு அவர் இந்த வீட்டை வாங்கியதில் ஆச்சரிய மிருக்காது. வந்த விருந்தினர்கள் எல்லாரும் அதைப் பற்றி ஏகமாகப் புகழ்ந்தார்கள்.

“உங்களுக்குப் பிடித்திருக்கிறதென்றால் எனக்கும் திருப்திதான்” என்றார் லக்ஷ்மிகாந்தம். அந்தக் குரலிலே அவருக்கு இயற்கையான கேலி, கோபம் எல்லாம் கலந்திருந்தது.

இந்த விருந்தில் இன்னும் ஒரு விசேஷம். இந்தச் சமயத்தில்தான் இவருக்கும் இவரது சகோதரன் மகாபூஷணத்

தின் மனைவிக்கும் இடையே இருந்த மனத்தாங்கல் தீர்ந்து ஒரு சமாதானம் ஏற்பட்டது.

மகாபூஷணத்துடன் இவள் தனது வாழ்க்கையைப் பிணித்துக் கொண்ட பிறகு முதல் முதலாக இப்பொழுது தான் லக்ஷ்மிகாந்தத்தின் வீட்டிற்கு விருந்தினளாக வருகிறாள். மகாபூஷணம் இறக்கு முன்பு இவருக்கும் சண்டைதான். லக்ஷ்மிகாந்தம் அந்தக் கலியாணத்தைத் தடுக்கத் தன்னாலான வரை முயன்று பார்த்தார். முடியவில்லை. லக்ஷ்மிகாந்தம் தனது சகோதரனைவிட பதினான்கு வருஷம் மூத்தவர்.

அது ஒரு கடற்கரைக் காதல். சுலோசனா—அவள் தான் மகரத்தின் மனைவி—ஒரு மலையாளப் பெண். அழகு ஆளை மயக்கும், போதை வஸ்துபோன்றது. அதில் அழகையே எப்பொழுதும் தியானித்துக் கொண்டிருக்கும் மகரம் விழுந்ததில் அதிசய மில்லை. இருவரும் ரிஜிஸ்தர்க் கலியாணம் கொண்டார்கள்.

லக்ஷ்மிகாந்தம் எவ்வளவோ சொன்னார். "அந்தப் பெண்ணின் குணம் உனக்குத் தெரியாது. அவள் மனம் ஒரு பாத்தையின் மனம். தன்னைத் தவிர வேறுயாரையும் அவளால் நினைக்க முடியாது. அவள் உன்னைவிட ஐந்து வயது மூப்பு. கலியாணம் செய்துக் கொள்ள வேண்டுமானால், ஷாப்பில் வேலை செய்யும் ஆங்கிலோ இந்தியப் பெண்ணை வேண்டுமானாலும் கலியாணம் செய்துக் கொள். நான் எனது உள்ளன்புடன் ஆசீர்வதிப்பேன். உனக்கு வேண்டியது தாயின் பரிவும் மனைவியின் காதலும் கொடுக்கக் கூடிய பெண். இவளா? தன்சுகத்திற்கு என்ன வேண்டுமானாலும் செய்வாள்."

பிரயோஜன மில்லை. மகரமே அண்ணனுடன் கோபித்துக் கொண்டு ரிஜிஸ்தர் கலியாணத்தை நடத்தி விட்டான்.

பிறகு நடந்தது, அந்தக் கோரமான சம்பவம். அவனது மரணம். போன வருஷம் உதக மண்டலத்திற்குக் கணவனும் மனைவியும் சென்றார்கள். அங்கு தான்.

அதன் சிகரமான தொட்டப் பெட்டாவைப் பார்க்கச்சென்றார்கள். அந்தப் பாழடைந்த நட்சத்திரச் சாலையின் பக்கத்தில் செங்குத்தான வீழ்ச்சி ஒன்று. அதில் எட்டிப் பார்த்த பொழுது மகரம் சருக்கி விழுந்து உயிர் துறந்தார். பிறகு ஏதோ ஒரு மாதிரி சுலோசனாவிற்கும் லக்ஷ்மிகாந்தத்திற்கும் சமாதானம் ஏற்பட்டது. இருவரும் மகரத்தின் திதியில் சந்தித்தார்கள்; பிறகு ஜி. டியில் ஒரு ஒரு தடவை எங்கோ சந்தித்தார்கள்.

இப்பொழுது தான் முதல் முதலாக லக்ஷ்மிகாந்தத்தின் விருந்தினளாக வருகிறாள். லக்ஷ்மி விலாசத்தின் பெரிய ஹாலில் சுலோசனாவின் படம்,—மகரம் இறக்கும் பொழுது எழுதியது—தொங்கவிடப் பட்டிருந்தது. விருந்தினருக்கு எல்லாம் இது அதிசயமாக இருந்தது. எல்லாரும் தாழ்ந்த குரலில் இதைப்பற்றிப் பேசிக்கொண்டு இருந்தார்கள். ஒரு வேளை மகரத்தின் மேல் இருந்த ஒரு அளவு கடந்த அன்பினால் இருக்கலாம்.

எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, "உங்களில் யாருக்காவது பேயில் நம்பிக்கையுண்டா?" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"ஏன் இந்த வீட்டில் இருக்கிறதா?" என்றாள் சுலோசனாவின்கூட வந்த ஒருபெண்.

"ஆம்! அதில்தான் சுவாரஸ்யம். என்னைப் போன்ற பிரம்மச்சாரிகளுக்குத் துணையாயிருக்கிறார்கள். ஒரு பேயாவது இருக்கவேண்டாமா?" என்று சிரித்தார் லக்ஷ்மிகாந்தம்.

"இங்கே நடந்த விஷயங்களைக் கேட்டால் ரஸமாக இருக்கும். இந்த வீட்டு மெத்தையில் ஒரு ஜன்னல் இருக்கிறது. அந்த ஜன்னல் நீங்கள் எப்படித்தான் மூடித் தாழ்ப்போட்டு வைத்தால் கூடத் தானே திறந்துக் கொள்ளும்," என்றார் மீண்டும்.

"நன்றாகப் பூட்டிவிட்டால்" என்றார் அங்கிருந்த இன்னொருவர்.

"இருபது வருஷத்திற்கு முன் இங்கே சுமதி என்ற பெண் தனது கணவனை அந்த ஜன்னல் வழியாப் பிடித்துத் தள்ளிவிட்டாள். அன்று அவன் சூரியாஸ்தமனத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தானாம். ஒரு தள்ளு, அவ்வளவுதான், கீழே புருஷனைப் பெட்டி வைத்துத்தான் பொறுக்க வேண்டி யிருந்தது," என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"அவளைத் தூக்குப் போட்டார்களா?" என்றார் பிரகாசம் என்ற நண்பர்.

"இல்லை இல்லை. அதெப்படி முடியும்? ஏதோ தவறி விழுந்துவிட்டதாக நினைத்தார்கள். யாரால் அதை நிரூபிக்க முடியும்? பேயைச் சாட்சியத்திற்குக் கோர்ட்டில் சம்மன் கொடுக்க முடியுமா?" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"தப்பித்துக் கொண்டாள் போலிருக்கிறது" என்றார் துப்பறியும் நாவல்கள் மொழி பெயர்ப்பதில் பெயர்போன பாரங்குச நாயுடு.

"அப்படியல்ல. பேயை ஒரு தடவை நேருக்கு நேர் பார்த்து பயத்தால் பேச முடியாது வாயடைத்துப் போய் கிலியடித்த வியாதியாலேயே உயிரை விட்டாள்" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"எல்லாம் வெறும் மனப்பிராந்தி. குற்றமுள்ள நெஞ்சு; பேயாவது உருளைக்கிழங்காவது" என்றார் திவான் பகதூர் சம்பந்த சாணாலயம்.

"பேயை வேறுயாராவது பார்த்திருக்கிறார்களா?" என்றார் வேறு ஒரு நண்பர்.

"பிறகு ஒரு பெண் பார்த்திருக்கிறாள்" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"பெண்கள் கண்ணுக்குத்தான் தென்படும் போலிருக்கிறது" என்றார் பாரங்குசம் நாயுடு.

"ஆமாம் குற்றமுள்ள நெஞ்சுடைய பெண்களுக்குத்தான்" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

போஜனம் முடிந்தது.

"அந்த அறையைப் பார்க்க வருகிறீர்களா?" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

எல்லோரும் பின் தொடர்ந்தார்கள். கூரைக்கும் இரண்டாவது மாடிக்கும் இடையில் ஒருசிறு காமிரா அறை. அதற்குக் செல்லுவதற்கு ஒரு சிறு ஏணி.

"இங்குதான் அவன் உட்கார்ந்திருந்தானாம். இதுதான் அந்தச் சன்னல். அடே! இதை யார திறந்தது," என்றார் லக்ஷ்மணசாமி.

"இந்த ஜன்னல்தானா" என்றாள் சுமதி. அவள்தான் சுலோசனாவுடன் வந்தவள்.

"இதுதான். வருஷத்தில் ஒருநாள் தான் இம்மாதிரித் தொந்திரவு செய்யும்.

அதுவும் இன்றுதான் போல் இருக்கிறது" என்று சிரித்தார் லக்ஷ்மிகாந்தம்.

"வந்து பாருங்களேன்; என்ன பயம்" என்றார் மறுபடியும்.

எல்லோரும் நெருங்கினார்கள் உள்ளுக்குள் பயந்தான்.

திடீரென்று எங்கும் இருண்டது. அறையில் ஒருவருக்கொருவர் முகந் தெரியவில்லை.

"அதென்ன என்னவோ இருட்டறதே" என்று சற்று உரத்த சத்தத்தில் நடுநடுங்கிக் கொண்டே கேட்டாள் சுமதி.

"ஒன்றுமில்லை, மேகமாக இருக்கும்" என்றார் லக்ஷ்மிகாந்தன். "கீழேவிழும் பொழுது என்ன நினைத்தானோ? யார் கண்டார்கள் ஒரு வேளை ஓலமிட்டிருக்கலாம்..................."

யாரோ இருட்டில் அசைந்தார்கள். தரையில் காலடிச் சப்தம். யாரோ ஒரு பெண் "ஐயோ அம்மாடி" என்று ஏங்கும் குரல்.

"எனக்கிங்கிருக்கப் பிடிக்கவில்லை," என்றாள் சுமதி.

"பின் வாருங்கள் போவோம். ஜன்னலைச் சாத்திவிட்டு வருகிறேன்," என்றார் லக்ஷ்மிகாந்தம்.

எல்லோரும் பயந் தெளிந்தமாதிரி ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டு திரும்பினார்கள். லக்ஷ்மிகாந்தம் ஜன்னலைச் சாத்திவிட்டுத் திரும்பினார். பாதி அறையைக் கடந்திருக்கலாம், திடீரென்று கூச்சல் போட்டுக்கொண்டு திரும்பினார்.

அந்த ஜன்னல் கதவு மெதுவாகத் தானே திறந்துக்கொண்டு இருந்தது.

"ஐயோ அங்கு பாருங்கள்" என்றார் திவான் பகதூர்.

"மிஸ்டர் பேய்க்கு நம்முடன் பேச இஷ்டம்போல் தெரிகிறது" என்று சிரித்தார் லக்ஷ்மிகாந்தம். இதற்குள் மற்றவர்கள் எல்லாம் ஓடி விட்டார்கள். இவரும் அவர்களைத் தொடர்ந்து கீழே இறங்கினார்.

"கொஞ்சம் கூல் ட்ரிங் சாப்பிடுவோமா?" என்று மணியை அடித்தார்.

பேசிக் கொண்டிருக்கும் பொழுதே திடீரென்று விளக்குகள் மங்கிவிட்டன.

எங்கோ தடால் என்ற சப்தம். விருந்தினர்கள் பயத்தில் உளறியடித்துக் கொண்டு எழுந்தார்கள். யாரோ ஒரு பெண் பயத்தால் கூச்சலிட்டாள்.

வெளிச்சம் மறைந்தமாதிரியாகத் திடீரென்று வந்தது. சுலோசனாவின் படம் கீழே சுக்கல் சுக்கலாக நொறுங்கிக் கிடந்தது. லக்ஷ்மிகாந்தம் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு அதை அப்புறப் படுத்தச் சொன்னார்.

அதற்குள் பரிசாரகன் கூல்டிரிங்குகளைக் கொண்டு வந்தான்.

"இதைச் சாப்பிடுங்கள் பயம் தெளியும்," என்றார் லக்ஷ்மிகாந்தம் "என்ன சுலோசனா பயந்து விட்டாயா? இதில் என்ன இருக்கிறது? மகாம் எழுதிய படம் வீணாகப் போனது வருத்தந்தான். நீ இதைக் குடி. மேல் எல்லாம் வியர்த்துவிட்டதே!" என்றார் மறுபடியும்.

சுலோசனா கையிலிருந்ததை வாங்கிக் குடித்தாள்.

அப்பொழுது ஒரு வேலைக்காரன் உள்ளே ஓடிவந்து, "பாங்களாக் காம்பவுண்டில் யாரோ இறந்துகிடக்கிறான். வெளியே சென்றபொழுது பார்த்தேன்" என்றான்.

எல்லோரும் திடுக்கிட்டுப் பேச நாவெழாமல் மௌனமாக இருந்தனர்.

"அவனை இங்கு எடுத்துக்கொண்டு வாருங்கள். கீழே இரத்தம் கித்தம் சிந்தி இருந்தால் கழுவி விட்டுவிடு. யாரும் வழுக்கி விழுந்து விடாமல்" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"சரி சார்" என்று வேலைக்காரன் போனான்.

"இன்றைக்கு வேடிக்கையாக இருக்கில்லையா? துப்பறியும் நாவல் மாதிரி சம்பவங்கள் நடக்கிறதே" என்று விருந்தினரைப் பார்த்துக் கூறினார்.

அந்தச் சமயத்தில் வேலைக்காரன் இருவர் பிணத்தை எடுத்துக்கொண்டு உள்ளே வந்தனர். அங்கிருந்த பெண்கள் மயங்கி விடுவார்களை போல் நடுநடுங்கினர்.

"அந்த மேஜையில் வையுங்கள்" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

எல்லோரும் அதையே நோக்கினர். பாங்குச நாயுடு அதைக் கூர்ந்து கவனிக்க நெருங்கினர்.

அந்தப் பிணம் உண்மையில் துணியினால் செய்யப்பட்ட பொம்மை. சாக்கைப்போட்டு மூடப்பட்டிருந்தது.

"மிஸ்டர் லக்ஷ்மிகாந்தம் நீர் ஒரு பெரிய ஆசாமி!" என்று விழுந்து விழுந்து சிரித்தார்.

மற்றவர்களும் அதை நெருங்கிக் கவனித்துவிட்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"இப்பொழுது பிணத்தைப் பார்த்தாகிவிட்டது. இவனை யாரோ வீட்டிலிருப்பவர்களில் ஒருவர்தான் கொன்றிருக்கிறார்கள். உளவுகளை வைத்துக் கொண்டு உண்மையைக் கண்டுபிடிப்பவர்களுக்கு 100 சிகரெட்டு பந்தயம்" என்றார்.

"நான்தான் துப்பறியும் கோவிந்தன் நான் கண்டுபிடிக்கப் போகிறேன்" என்று சிரித்தாள் சுமதி.

"என்ன சுலோசனா குற்றவாளியைச் கண்டுபிடிக்கப் போவதில்லையா" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

"இந்த முட்டாள்தனமான விளையாட்டு எனக்குப் பிடிக்கவில்லை" என்று முகத்தைச் சுளித்தாள் சுலோசனா.

அந்த அறையைச் சுற்றிக் கவனித்த சுமதிக்கு ஒரு கிழிந்த கடிதம் அகப்பட்டது. அதில் "விருந்திற்குப் பிறகு என்னைச் சந்தி........சனா" என்று மட்டும் தெரிந்தது.

பிணத்தையும் பரிசோதிக்க வேண்டும் என்று அந்தத் துணிப் பதுமைக்கு அணிந்திருந்த சட்டைகளில் என்ன விருக்கிறது என்று கையைவிட்டுத் தடவினாள். அதிலே ஒரு கைக்குட்டை கிடைத்தது. அதன் மூலையில் "சு" என்ற எழுத்துப் பின்னப்பட் டிருந்தது.

"சு...........சனா, சுலோசனா அவள் தான் கொலை செய்தவள். அவன்தான் இந்த விளையாட்டில் கலந்து கொள்ளவில்லை. அவள்தான் குற்றவாளி. துப்பறிபவனுக்குப் பேசிய 100 சிகரெட்டுகளைக் கொடுத்துவிட வேண்டும்" என்று உரத்த குரலில் சுமதி சிரித்துக் கொண்டு கேட்டாள்.

"அவசரப்படாதே. கோர்ட்டு என்ன தீர்ப்பு செய்கிறதோ அதிலிருந்துதான் முடிவு கட்டவேண்டும். திவான் பகதூர்தான் ஜட்ஜ். பாங்குச நாயுடு வாதி வக்கீல். நான் பிரதி வாதி

வக்கீல். மற்றவர்கள் எல்லாம் ஜூரிகள்."

"குற்றத்தின் காரணம், அது ஒரு விதத்தில் எப்படி நியாயமானது என்பதும் காண்பிக்கிறேன். பிணத்தின் நிலைமையிலிருந்து உயரத்திலிருந்து விழுந்தது என்று தெரிகிறது. அதன் உள் பையில் இருக்கும் கைக்குட்டை இறந்தவர் குற்றவாளியின்மீது அதிகப் பிரியம் வைத்திருந்தார் என்பதைக் காண்பிக்கிறது. அவருடைய நேசம், பாசம் எல்லாம் தொந்திரவைக் கொடுத்தது. அவன் இல்லாவிட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும் என்று பட்டது. அவன் எதிர் பார்க்காத பொழுது ஒரு தள்ளு தள்ளி விடுகிறது இயற்கைதானே. அவ்வளவு தானே சுலோசனா! அவன் இல்லாவிட்டால் நல்லதுதானே."

"அவர் மயங்கித்தான் விழுந்து உயிர் துறந்தார்."


"அவன் பயங்கொள்ளியல்ல தலை சுற்றிக்கீழே விழுவதற்கு. சரியாக ஒரு வருஷமாகி விட்டது. அப்பொழுது சௌகரியமாகக் கீழே வந்து உன் கதையைச் சொன்னாய். உன்னைத் தடுத்து மறுத்துப்பேச அவன் அங்கு இல்லை.

"சத்தியமாக அவர் மயங்கித்தான் விழுந்து விட்டார்."

"நிஜமாகவா? அவனை உன் முன்பு கொண்டுவந்து நிறுத்தினால் அப்படிச் சத்தியம் செய்வாயா?"

"உங்களால் அவரைக் கொண்டுவர முடியாது."

"கொண்டுவர முடியும். மகராம், மகராம். இங்கேவா! என்ற சற்று உரத்த சத்தத்தில் கூப்பிட்டார்.



"உன் முன் கொண்டுவந்து நிறுத்தினால் சத்தியம் செய்வாயா?"

விருந்தினர்கள் எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டிருந்தார்கள். சுலோசனாவின் முகத்தைக் கவனித்தவுடன் சிரிப்பு அடங்கிவிட்டது.

"நீங்கள் சொல்வது அர்த்தமாகவில்லை யாரைப்பற்றிப் பேசுகிறீர்கள்." என்றாள். முகம் பயத்தால் வெளிறி இருந்தது.

"அவனால் இடைஞ்சல்கள் அதிகமாக இருந்தது. அங்கு ஒருவரும் இல்லை. சான்ஸ் கிடைத்தால்........... பிறகு என்ன!"

எங்கும் நிசப்தம்.

பிறகு வெளியே டக், டக் என்ற செருப்புச் சப்தம். யாரோ ஜன்னலைத் தட்டுவதுமாதிரி...........

"அவரை உள்ளே கூப்பிடவேண்டாம். நான்தான் கொன்றேன்....... ஐயோ," என்று சொல்லிக்கொண்டே சுலோசனா மயங்கி விழுந்தாள்.

விளக்குகள் மறுபடியும் பிரகாசமாக எரிந்தன.

"ஜூரர்களே கைதி குற்றவாளியா அல்லவா" என்றார் லக்ஷ்மிகாந்தம்.

ரயில் போக்கு வரவு

மதராஸ்-எழும்பூர்

மெயின் லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
இண்டோ ஸிலோன் எக்ஸ்பிரஸ்	மாலை 9 0	காலை 6 40
செங்கோட்டை பாஸஞ்சர்	காலை 6 55	மாலை 7 25
கூடலூர் பாஸஞ்சர்....	மாலை 4 0	காலை 11 55
திருவனந்தபுரம் பாஸ்டு பாஸஞ்சர்....	மாலை 9 30	காலை 6 5
திருச்சி பார்சல்	மாலை 10 20	காலை 5 35

கார்டு லைன்.

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
தனுஷ்கோடி பாஸ்டு பாசஞ்சர்	காலை 11 15	மாலை 2 55
திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்	மாலை 7 30	காலை 7 15

மதராஸ்—ஸெண்ட்ரல்

வண்டிப் பெயர்	புறப்படும் நேரம்	வரும் நேரம்
கல்கத்தா மெயில்	மாலை 8 30	காலை 8 35
கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரஸ்	காலை 8 40	மாலை 4 35
பம்பாய் மெயில்	மாலை 8 40	காலை 5 55
பம்பாய் எக்ஸ்பிரஸ்	காலை 8 30	மாலை 5 0
பங்களூர் மெயில்	மாலை 9 30	காலை 6 15
,, எக்ஸ்பிரஸ் ...	மாலை 1 0	மாலை 2 10
,, பாஸஞ்சர்	காலை 6 15	மாலை 7 40
,, ,, ...	மாலை 9 40	காலை 5 30
ஜோலார்ப்பேட்டை பாஸஞ்சர்	மாலை 12 45	மாலை 2 0
அரக்கோணம் பாஸஞ்சர்	மாலை 5 30	—
,, ...	6 30	—
மலபார் எக்ஸ்பிரஸ்....	8 5	காலை 7 15
ப்ளுமௌண்டன் எக்ஸ்பிரஸ்	9 15	6 35

ஐரோப்பிய அரசியலில் மாறுதல்


இத்தாலியாவின் புதிய நட்பு

இத்தாலியா இங்கிலாந்துடனும் பிரான்சுடனும் சிநேகம் செய்துக் கொள்ளுகிறது என்று முதல் முதலாக ஹிட்லர் அறிந்தவுடன், "அவள் (இத்தாலியா) கொஞ்சம் புதிய ஆட்டந்தான் போட்டுப் பார்க்கட்டுமே" என்று வேடிக்கையாகக் கூறினாராம். ஆனால் இத்தாலியாவின் ஆங்கிலோ—பிரஞ்சுச் சினேக பாவத்தை இம்மாதிரிக் குத்தலாகப்பேசிவிட்டுச் சும்மா இருந்து விடமுடியாது. இந்த அரசியல் கூட்டுறவு ஜெர்மனிக்கு அபாயகரமானது. இந்தக் கூட்டுறவு ஊர்ஜிதப்பட்டால் அது ஜெர்மனியை எதிர்க்கும் என்று கூறவும் வேண்டுமோ? இத்துடன் ஸோவியத் ரஷ்யாவும் சர்வதேசச் சங்கத்தில் சேர்ந்து விட்டால் ஜெர்மன் துணையற்றுத் தனிமையாகிவிடும்.

யுத்தத்திற்குப் பிறகு

உலக யுத்தம் முடிந்த பிறகு இதுவரை இத்தாலியாவும் பிரான்சும் ஒன்றையொன்று சந்தேகித்து மறைமுகமான எதிரிகளாக இருந்து வந்தது. யுத்தத்தில் சேருவதற்கு முதல் ஒப்பந்தமாக இத்தாலியாவிற்கு மத்தியரைக் கடற்கரையின் ஓரத்திலிருக்கும் ஆசிய ஆப்பிரிக்க பிரதேசங்களைக் கொடுப்பதென்று இருந்தது. ஆப்பிரிக்கப் பிரதேசத்தைப் பொறுத்தட்டில், பிரான்சின் தன்னலத்தைக் கோரும் குறுகிய கொள்கையால், இத்தாலியாவிற்குக் கொடுக்கப் படவில்லை. ட்யூனிஸ் (Tunis) என்ற பகுதியை இத்தாலியருக்கு அரசியல்—பிரஜா உரிமைகள் பிரஞ்சுக் காரரைவிட தாழ்ந்தபடியில் தான் இருந்து வந்தது. எதேச்சாதிகாரி முஸ்தாபாக் கமால் பாஷாவின் வருகையால் இத்தாலியா ஆசியா மைனரில் வைத்திருந்த ஆசைகள் எல்லாம் நாசமாயின.

பிரான்சும் இத்தாலியாவும் ஒரே ஜாதி (Race), ஒரே முன்னோர்களின் தனிக்கிளைகள் என்ற ஹோதாவில் இரண்டு தேசங்களும் நட்பாகி விடலாம் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இம்மாதிரியான இலக்ஷியத்திற்காகப் பிரான்சின் இரண்டு தீவிரவாதிகளான திரு. பிரயன்டும் திரு. ஹேரியட்டும் இதுவரை



வான் ஹிண்டன்பர்க் காலஞ்சென்ற அன்று அவரது அரண்மனையில் கொடியைப் பாதி அளவு உயர்த்திக் கட்டியிருந்தார்கள். ஆகாய விமானங்கள் வணக்கம் தெரிவிப்பதற்காகத் தாழ்ந்து பறந்தன.

—S. F. B.

உருப்படியாக ஒன்றும் செய்துவிடவில்லை. திரு. பிரயன்ட்தான் அகில ஐரோப்பிய அரசியல் ஸ்தாபனம் ஒன்றிற்காகப் பாடுபடுகிறவர். திரு ஹேரியட் நீண்ட காலத்தின் போக்கிற்குத் தகுந்தபடி உயரிய நோக்குடைய அரசியல் வாதி. மேலும் அவர்தான் இத்தாலியாவின் நோக்கங்களை அறிந்து அதைச் சினேகப் படுத்திக்கொள்ள முனைந்து வேலை செய்து வருகிறவர். பிரஞ்சு அன்னியநாட்டு மந்திரியான பார்த்து உடன்படிக்கைகளும் அரசியல் கூட்டுறவுகளும் செய்துக் கொள்வதற்காக ஐரோப்பிய தேசங்களின் தலை நகருக்கெல்லாம் சென்று வருகிறார். கிடைக்கும் செய்திகளில் இருந்து அவரது கோரிக்கை பூர்த்தியாகுமென்றே தெரிகிறது.

லிட்டில் என்டென்ட் என்ற ஐரோப்பியச் சிறிய கூட்டுறவும் ஆஸ்திரியாவும் பிரான்ஸிற்குத் தெற்கிலும் தென் மேற்கிலும், இருந்து ஜெர்மனிக்கு எதிராகத் துணை புரிந்து வருகிறது. மத்திய ஐரோப்பாவிலும் ஐரோப்பாவின் தென்மேற்குப் பாகத்திலும் பிரான்சு தனது செல்வாக்கை அதிகப் படுத்திக் கொள்ளுவதை இத்தாலியா வெறுக்கிறது. இதற்குப் பின் வருமாறு பிரான்ஸ் பதில் கூறுகிறது. இத்தாலியா அட்ரியாட்டிக் கடல் கரையை யடுத்த யூகோஸ் லோவியாவில், இத்தாலியா தனது செல்வாக்கு உரிமையை விட்டு விட்டு, லிட்டில் என்டென்டின் மீது பிரஞ்சு ஆதிக்கத்தை ஒத்துக் கொள்ள வேண்டும் என்று பதில் கூறுகிறது. ஸீனியர் முஸோலினி பிரஞ்சுச் சினேகபாவத்தைப் பெற எத்தனையோ விஷயங்களை விட்டுக் கொடுக்க வேண்டும்.

திருப்பூர் கலர் சேலைகள்

ஆரஞ்சு, பச்சை, சிகப்பு, நீலம் (Blue), மஞ்சள், ரோஸ், கனகாம்பரம், கத்தரிப்பூ, கோக்தி, சகுந்தலா, வைலட், புரௌன் (காபி கலர்), சந்தனம், சிலேட், செமண்ட் முதலான பல கலர்களால் உடல் பூராவும் போடப்பட்டதும், ஓரத்திலும் முந்தியிலும் பார்வைக்கு மிக நன்றாய் இருக்கும்படியான அழகான மூன்று கலர்களில் (F. T. C.) அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை 8 கஜம் சேலை 1-க்கு ரூ. 5-0-0
,, 6 கஜம் ,, 3-12-0.

(வி. பி. சார்ஜ் வேறு)

எம். வி, கே. கதர் ஒர்க்ஸ்,
திருப்பூர், (தென் இந்தியா.)

ஆஸ்திரியப் பிரச்னை

கிடைக்கும் செய்திகளிலிருந்து, பிரஞ்சு அன்னிய நாட்டு இலாக்காவை விட ஸீனியர் முஸோலினிக்குத்தான் இந்தக் கூட்டுறவில் அதிக ஆவல் இருக்கிறது என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

ஆஸ்திரியாவில் நடந்த ஜூலைப் புரட்சியும் அதைத்தொடர்ந்து டாக்டர் டால்பஸின் சதிக்கொலையும் மத்திய ஐரோப்பாவில் நாஜிக்கட்சியினரின் ஆதிக்கம் அதிகமாகி விடும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. பிரான்சும் இத்தாலியாவும் இதைத் தடுக்க முயற்சிக்கிறது. ஏனென்றால், ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் ஒன்றாகச் சேர்ந்து விட்டால், ஜெர்மனிக்கு நிலப்பரப்பிலும் எண்ணிக்கையிலும் சக்தியதிகமாகிறது. பிரான்சும் இத்தாலியும் கூட்டுறவு ஏற்படுத்திக் கொண்டாலும் ஜெர்மனி இவர்களுக்கு மேற்பட்ட சக்தி படைத்த எதிரியாகி விடுகிறது. இதனால் பிரான்சும் ஸீனியர் முஸோலினியும் ஹாப்ஸ்பர்க்குகளை (ஆஸ்திரிய அரச வம்சம்) வியன்னுவிற்குக் கொண்டு வந்து முடி சூட்டி வைத்து விட ஆசைப்படுகிறார்கள். ஏனென்றால் ஆஸ்திரியாவில் முடியரசு ஏற்பட்டால் அது ஜெர்மனியுடன் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ளாது என்ற நம்பிக்கை.

கடற்படை வித்தியாசங்கள்

இத்தாலியாவிற்கும் பிரான்ஸிற்கும் உள்ள ஏற்றத் தாழ்வு வித்தியாசங்களில் கடற் படையிலிருப்பது போல் மற்றெதிலும் இல்லை. இத்தாலியா, இருவருக்கும் கடற்படை சமமாக இருக்க வேண்டும் என்று கேட்கிறது. பிரான்ஸ் இதற்கு உடன்பட வில்லை. அதாவது ஊர்ஜிதமான அரசியல் ஒப்பந்தம் எதுவும் இல்லாமல் எதுவும் முடியாது என்று சொல்லுகிறது. ஆப்பிரிக்காவைப் பிணிக்கும் கடல் வழியைப் பொறுத்த மட்டில், பிரான்ஸ் சினேகனாக இருந்தாலும் மற்ற எவனாக இருந்தாலும் கம்பித்தன் உரிமையை விட்டுக் கொடுக்காது.

இரண்டு நாடுகளிலும் இருக்கும் கப்பற் படையின் நிலைமை பின் வருமாறு: லண்டன் உடன்படிக்கைப்படி 70,000 டன்களுக்கு மேற்பட்டுப் புதிய யுத்தக் கப்பல்கள் 1936வரை பிரான்ஸ் உற்பத்தி செய்வது இல்லை என்று ஒத்துக்கொண்டிருக்கிறது. இதற்கு முந்திய வாஷிங்டன் உடன்படிக்கைப்படி டிரட்நாட் மோஸ்தரில் 7 யுத்தக் கப்பல்களும் பழைய மாதிரியில் 3 கப்பல்களும் வைத்துக் கொள்ள உரிமையைப் பெற்றது. இந்த உடன்படிக்கையின் ஷரத்துப் பிரகாரம் கடலில் முழுகிப்போன 'பிரான்ஸ்' என்ற யுத்தக் கப்பலுக்கும், மற்ற இரண்டு கப்பல்களுக்கும் பதிலாக மூன்று புதிய கப்பல்கள், 1922, 1927, 1929 வருஷங்களில் தயார் செய்துக் கொண்டிருக்கலாம்.

வாஷிங்டன் மோஸ்தரில் ஏழு 10,000 டன் கப்பல்கள் தயாராக இருக்கின்றன. பிரஞ்சு கப்பற்படை எண்ணிக்கையிலும் கடற்படைச் சிற்றணியின் தலைமையிலும் முன்னணியில் நிற்கிறது.

இத்தாலியப் படை.

வாஷிங்டன் உடன்படிக்கைப் பிரகாரம் இத்தாலியா ஆறு யுத்தக் கப்பல்களை வைத்திருக்க உரிமை பெற்றதுமல்லாமல் மொத்தமாக 70,000 டன்கள் வரும் படியாகப் புதிய கப்பல்கள் தயார் செய்துக் கொள்ளவும் அனுமதிபெற்றது. இந்த உரிமையை இதுவரைச் செயலில் காண்பிக்கவில்லை. 1933 வருஷத்தில் 23,000,000 பவுன்கள் கடற் படைச் செலவிற்கு ஒதுக்கப்பட்டது. அதில் 12,000,000 பவுன்கள் புதிய கப்பல்கள் தயாரிப்பதற்காக உபயோகப்படுத்தப் பட்டது.

இத்தாலியாவின் புதிய யுத்தக் கப்பல்கள் வேகத்திற்கும் சக்திக்கும் பெயர் போனவை. 5,069 டன் கப்பலான குய்ஸானோ என்ற இத்தாலிய யுத்தக் கப்பல் தான் உலகத்திலேயே அதிக வேகமாகச் செல்லக்கூடியது.

பிரஞ்சுக்காரர்கள் ஸப்மெரின்களை வைத்திருக்கும் உரிமையைக் கைவிட மறுத்தினாலும், இத்தாலியா மத்திய தரைக் கடலில், கப்பற் படைச் சம உரிமையைக் கேட்டதாலும் கடற்படை ஆயுதப் பரிஹரண மகாநாடு, முன்பு, ஒரு வேலையும் செய்யமுடியாமற் போய் விட்டது.

புதிய நண்பர்களாக உத்தேசிக்கும் பிரான்சும் இத்தாலியாவும் இனி என்ன செய்வார்களோ. அரசியல் நெருக்கடி எதை வேண்டுமானாலும் சாதிக்குமாம். இரண்டும் நட்பினராக முடியுமா?

கணவன்:—சமையல்காரன் வைத்து நமக்குக் கட்டுமா ?

மனைவி:—முடியாது. ஆகையால் இப்பொழுது ஏற்படுத்தப்பட் டிருக்கும் சமையற்காரனிடமிருந்து சீக்கிரம் சமையல் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்.

—ஜீ. ஆர். முருகேசன்.

ஹரிஜனங்களை ஆதரியுங்கள்

டிராபிகல் கம்பெனியின் விருத்தியை நோக்குங்கள் !

1933-ல் இணையற்ற வெற்றி, முன்னேற்றம்.

ரூ. 1,000-க்கு முதல் மதிப்பு போனஸ் ரூ. 50 முடிவு செய்யப்பட்டது.

1933-ல் புதிதாக 31 லட்சம் ரூபாய்க்கு மேல் பிஸினஸ் நடைபெற்றிருக்கிறது.

சுலபமானதும், லாபகரமானதுமான திட்டமுள்ள பாலிசி வேண்டுமா ?

அல்லது மிகுந்த வருமானம் கிடைக்கும் ஏஜென்சி வேண்டுமா ?

விவரத்திற்கு இவ்விலாசத்திற்கு எழுதுங்கள் :—

டிராபிகல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.,

289, எஸ்பிளனேட் ‘சென்னை.

விண்ணில் விபரீதம்

(கே. ஸ்ரீநிவாஸ் பீ. ஏ.)

"மானம் போய்விட்டதே" என்றாள் லட்சுமி.

"போன இடத்தைச் சொல்; தேடிப் பிடித்து வருகிறேன்" என்றார் விஷ்ணு.

வந்துவிட்டது கோபம் லட்சுமிக்கு. மிரண்டு நோக்கினாள். ஆதிசேஷன் நடுநடுங்கினார். புஸ், புஸ் என்று நாலுடன் விஷத்தைக் கக்கினார்.

திருப்பாற்கடல் பொங்க ஆரம்பித்துவிட்டது. அண்டங்கள் அனைத்தும் அலறின. வால் நட்சத்திரங்கள் பிய்த்துக்கொண்டு விர், விர் என்று வானத்தில் ஊஞ்சலாடின. உலகத்தில் பெரிய அமளி.

ந்யூயார்க் கட்டிடங்கள் கிடு, கிடு என்று ஆடின. முசோலினி ஒரு "ஸாமர் ஸால்ட்" அடித்தார். ஹிட்லருடைய பூட்ஸ் அவருக்கு எச்சரிக்கை கொடுக்காமல் நர்த்தனம் புரிந்தது. காந்திஜி திடீரென்று 'டான்ஸ்' பண்ண ஆரம்பித்தார்.

"ப்ரியே! நின் சஞ்சலத்திற்குக் காரணம் யாது?" என்று கேட்டார் விஷ்ணு.

திருமகளின் கண்கள் சிவந்தன. "போதும் உம் வீராப்பெல்லாம்! அக் கலைமகளின் பாதத்தைக் கட்டுரை மலர்கள் மலைபோல் மறைக்கின்றனவே!" என்றாள் திருமகள்.

விஷ்ணு:—அதற்கென்ன?

திருமகள்:—"கபடமற்ற உம்மைக் கணவனாகப் பெற்ற என் பாக்கியம் தான் என்னே!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே பகர்ந்தாள்.

"ப்ரியே! விவரமாகக் கூறு!"

"அன்பரே! கட்டுரைப் பைத்தியம் பிடித்துத் திரியும் இந்தத் தமிழுலகில் என் ஆட்சிக்கே ஹானி வந்துவிடுமென்பது தங்களுக்குப் புலப்படவில்லையா?"

"அங்கை நெல்லிக்கனிபோல்!"

"உம் எக்களிப்புப் போதும். தமிழ் நாட்டின் பணக் குவியலெல்லாம் பத்திரிகை ரூபமெடுப்பது, என் மருமகளின் பெருமை உச்சஸ்தானம் அடைந்திருப்பதை நிலைநாட்டவில்லையா?"

"ஆம்!" என்று ஒத்துப் பாடினார் மாயன்.

ஒரு விபரீத ஒளி திருமகளின் நேத்திரங்களில் நர்த்தனம் புரிந்தது. விஷ்ணுவுக்குக் கொஞ்சம் திகில்தான்.

"விதண்டா வாதம் செய்துகொண்டே போனால் ...."

"புண்ணியமா? புருஷார்த்தமா?" என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டே கேட்டார் ஹரி.

"உம், நிறுத்தும்! கிட்டே வாரும்!"

மறு பேச்சின்றி திருமாலின் திருச்செவிகள் திருமகளின் உதடுகளை நாடின. குசு, குசு என்ற பேச்சு நடைபெற்றது. "அச்சா!" என்றார் விஷ்ணு.

"என்ன புரிந்ததா?"

"பலே பேஷ்!"

* * *

காலை. மணி பத்து. குஷாலாக நுழைகிறார்கள் ஆசிரியர்கள் காரியாலயத்தினுள். 'உஸ்' என்று ஸ்வரம் போட்டுக்கொண்டே நாற்காலியில் சாய்கிறார்கள். கதவு திறக்கிறது.

"எஜமான்!"

"யார் அங்கே?"

"தபாலுங்க."

'அசால்டாக'க் கட்டுரைத் தஸ்தாவேஜுகளை எடுக்கிறார்கள். பாக்கெட்டுகள் எல்லாம் உடைக்கப்பெறுகின்றன.

"ஹா!" என்ற சப்தம். கட்டுரைகளெல்லாம் வெறுங் கடுதாசி மயமாகத்தானிருக்கிறது. எழுத்து ஒன்றும் காணப்படவில்லை. சஹாரா பாலைவனந்தான்! மெதுவாக உள்ளே நுழைகின்றனர் துணை ஆசிரியர்கள். காகிதங்களெல்லாம் 'ப்ளாங்க்' ஆக இருப்பதைக் கண்டு மருள்கின்றனர். ஆபீஸ் முழுதும் ஒரே அமளி!

* * *

கட்டுரை எழுதுவதில் ராமநாதன் சமர்த்தன். ஊழியனுக்குப் பல தடவை விஷயதானம் செய்ததும் உண்டு. மகத்தான காரியத்தை அன்று சாதிக்கவேண்டுமென்பதே அவன் கோரிக்கை. பேனாவை எடுக்கிறான். எண்ணங்கள் துள்ளி எழுகின்றன. பேனாவோ எழுதவில்லை. உதறுகிறான்; பயனில்லை. சத்தியாக்கிரகந்தான் செய்வேன் என்று பேனா அழுத்தமாக தெரிவிக்கிறது. சோர்ந்து சாய்கிறான் சோபாவில்!

* * *

மணி மூன்று. தந்தி விர், விர் என்று வந்து குவிகின்றன. மிஷின்கள் அலறுகின்றன.

"எடு பேனாவை!" என்று உறுமுகிறார் தினசரிப் பத்திரிகாசிரியர்கள்.

பேனாவும் கையில் ஏறுகிறது. நாட்டினார் பேனாவைப் பேப்பரில். சர, சர என்று ஓடுகிறது பேனா முனை. போகிற வேகத்தில் எலெக்ட்ரிஸிடி எடுக்கலாம் போலிருக்கிறது. ஆனால் எழுத்து ஒன்றும் காணப்படவில்லை! பேப்பர் வெண்மையாக மிளிருகிறது.

"ஐயோ!" என்று வீறிடுகிறார் ஆசிரியர்.

ஒரு தினசரிப் பேப்பரும் அடிபடவில்லை. நகரம் அல்லோல கல்லோலப் படுகிறது.

* * *

மனம் கலங்கினாள் கலைமகள் (சரஸ்வதி).

கண்களில் கண்ணீர்த் ததும்ப தன் பர்த்தாவை நோக்கினாள்.

காலச் சக்கரத்தின் ரீங்காரத்தில் லயித்து நிற்கும் அயன் (பிரம்மா) கண்ணைத் திறந்தார். அவருக்கு ஞானோதயம் போல் உண்மைப் புலப்பட்டது. ஒரு சிரிப்பு அவர் முகத்தில் ஜ்வலித்தது.

மின்னல் பேனாவை எடுக்கிறார். நட்சத்திர ஏட்டில் சில வார்த்தைகள் வரைகிறார்.

மறு விநாடியே கலைவாணி (சரஸ்வதி) வீணைத் தந்திகளை மீட்டி, கவிதா நாதத்தை எழுப்பினாள். கற்பனாசக்தியின் நர்த்தனத்தில் கலைகள் திகழ்ந்தன. வேதங்கள் புத்துயிர்க்கொண்டு ஆசிரியர் நாவில் ஆசி கூறின. நீரோடைகள் இனிய கீதங்களை ஒலித்துக் காதிற்கு இன்பம் அளித்தன. மாணிக்கக் கற்கள் மதிப்பாற்று மங்கிப் போயின. செல்வத்தின் செருக்கு ஒழிந்தது! திருமகள் இல்லத்தில் கலைமகள் குடிப் புகுந்தனள்!

வைட்டமின்

(உடலுக்கு உரம் அளிக்கும் உணவுச் சத்து)

(மயிலை. சீனி வேங்கடசாமி)

Vitamin C.—உ வைட்டமின்.

சென்ற இதழ்களில் அ, இ வைட்டமின்களைப்பற்றி (Vitamins A and B) எழுதினோம். இப்பொழுது, மூன்றாவதாக உ வைட்டமினைப் பற்றி (Vitamin C) எழுதுவோம்.

உ வைட்டமின் (Vitamin C) என்பது நமது தேகத்திலுள்ள இரத்தத்தைச் சுத்தமாகவும் அதன் இயற்கைத்தன்மை கெடாமலும் வைப்பதற்கு இன்றியமையாதது. இன்னும், இந்த வைட்டமின் தேகத்தை வளர்க்கச் செய்வதில்—முக்கியமாகப் பற்களையும் எலும்புகளையும் வளர்க்கச் செய்வதில்—மற்ற வைட்டமின்களுக்குத் துணை செய்கிறது. மற்றும் ஜீர்ணக் கருவியாகிய குடலை ஆரோக்கியமாக வைக்கிறது; தொத்து நோய்க் கிருமிகளைத் தேகத்தில் புகவொட்டாமல் தடுக்கிறது.

இந்த வைட்டமின் இல்லாதவர்களுக்கு இருதயம் விரைவாக அடித்துக் கொண்டிருக்கும்; வாய் நாறும்; பற்களிலுள்ள ஈறுகள் (gums) கெட்டுத் தேய்ந்துவிடும். சோம்பல், பசியின்மை, தேக வெளுப்பு, கணுக்கால்களில் நோவு முதலியவை யுண்டாகும். அன்றியும் இந்த வைட்டமின் இல்லாதவர்களுக்கு Scurvy என்னும் (சர்ம வியாதி) காண்பதுண்டு.

இந்த உ வைட்டமின் (Vitamin C) பசுமையான இலைகளிலும் பழங்களிலும் காணப்படுகிறது; (ஆனால், அரிசி பருப்பு முதலிய தானியங்களிலும் கொட்டைகளிலும் எண்ணெய், வெண்ணெய், காய்ந்த பழங்கள், காய்ந்து போன காய்கறிகள், சர்க்கரை, டின்களில் பதம் செய்யப்பட்டு விற்கப்படுகிற பழவகைகள் முதலியவற்றில் இந்த வைட்டமின் கொஞ்சமும் கிடையாது.) பருப்பு, கம்பு, சோளம் முதலிய தானியவகைகளில் இந்த வைட்டமின் இல்லை என்று சொன்னோம். ஆனால், அவற்றில் இந்த வைட்டமினைச் செயற்கையாக உண்டாக்கிக் கொள்ளலாம். எப்படி என்றால், தானியங்களை ஊற வைத்து முளைக்கச் செய்தால், முளை விடப்பட்ட அந்தத் தானியங்களில் இந்த வைட்டமின் உண்டாய் விடுகிறது.

இரத்தத்தைச் சுத்தப்படுத்தி அதைக் கெடாமல் வைக்கிற இந்த உ வைட்டமின் (Vitamin C) சொற்ப அனல் (சூடு) பட்டாலும் அழிந்து விடுந்தன்மையது. எல்லா வைட்டமின்களிலும் அனல்பட்ட மாத்திரத்தில் வெகு சீக்கிரமாக அழிந்துவிடும் வைட்டமின் இதுவே.

இலைகளிலும் பழங்களிலும் இந்த உ வைட்டமின் (Vitamin C) இருக்கிறதென்று சொன்னோமல்லவா? இலைகளைத் தின்னும் ஆடு, மாடு, முதலிய மிருகங்களின் பாலில் இந்த வைட்டமின் உண்டு. ஆனால் காய்ந்த வைக்கோலையும் பிண்ணாக்கையும் தின்னும் மாடுகளின் பாலில் இந்த வைட்டமின் கிடையாது. அன்றியும், அனலில் அழிந்து விடும் இயற்கையுடையதாகையால், பாலைக் காய்ச்சும் போது பாலிலுள்ள இந்த வைட்டமின் அறவே அழிந்துவிடும். அது போலவே, இலை உணவுகளைச் (கீரைகளை) சமைத்து உண்கிற படியால் இந்த உ வைட்டமினைப் (Vitamin C) பெற வேண்டுமானால் கீரைகளைச் சமைக்காமல் சாப்பிட வேண்டும். ஆனால், சமைக்காமல் சாப்பிடக் கூடிய கீரை பசலைக் கீரை (Spinach) ஒன்று தவிர வேறொன்றுமில்லை. எனவே, இந்த வைட்டமினைப் பெறுவதற்கு நல்ல வழி பழங்களைச் சாப்பிடுவது தான்.

இந்த வைட்டமினை அதிகமாக உடையதும் சொற்ப விலைக்குக் கிடைக்கக் கூடியதுமான பழம் தக்காளிப் பழம் (Tomato) ஒன்றே. இந்தப் பழத்தை அவசியம் தினந்தோறும் உண்ண வேண்டும் என்று மற்றொரு முறை வற்புறுத்திக் கொள்கிறேன். ஏனென்றால், அ, இ, உ வைட்டமின்கள் (Vitamin A, B, & C) மூன்றும் இப்பழத்தில் ஒருங்கே பொருந்தியிருக்கின்றன. இந்தப் பழத்தைச் சமைக்காமல் பச்சையாகவே சாப்பிட வேண்டுமென்பதைக் கவனப் படுத்துகிறேன். இந்தப் பழத்தைத் தவிர வேறு உணவுப் பொருள்களிலும் இந்த உ வைட்டமின் உண்டு. அவைகளைவிட்டு இப்பழத்தை மட்டும் அதிகமாகச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், இந்தப் பழம் சொற்ப விலைக்குக் கிடைக்கும்; இரண்டாவதாக ஒவ்வொரு வீட்டிலும் இந்தச் செடியை அதிக கஷ்டமின்றி பயிரிட்டுக் கொள்ளலாம்.

இனி, இந்த உ வைட்டமின் (Vitamin C) உள்ள பொருள்களைச் சொல்வோம்:—சமைக்கப்படாத முட்டை கோஸ் (Cabbage) பசலைக் கீரை (Spinach) முளைவிடப்பட்ட பயறு முதலிய தானியவகைகள், லெமன் (Lemon) என்னும் பழம் (இது எலுமிச்சம் பழம் ((Lime) அல்லது ஆரஞ்சுப் பழம், சீமைத் தக்காளிப் பழம், அன்னாசிப் பழம் முதலியவைகளில் இந்த வைட்டமின் அதிகமாக உண்டு.


குறிப்பு:—பாலைக் காய்ச்சுவதால் பாலிலுள்ள இந்த வைட்டமின் அழிந்துவிடுகிறது. ஆகையால், காய்ச்சிய பாலையுண்ணும் குழந்தைகளுக்கு ஆரஞ்சுப் பழ ரசத்தையும் கொடுத்து வந்தால் குழந்தை சுகமாக வளரும்.

லெமன் (Lemon) என்னும் பழம் நமது நாட்டில் பயிராகிறதில்லை. இதை ஐரோப்பாவிலிருந்து கப்பல்களில் கொண்டுவந்து ஸ்பென்ஸர் கம்பெனியார் சிற்சில சமயங்கள் டஜன் 1 ரூபாய் அல்லது $1\frac{1}{2}$ ரூபாய்க்கு விற்கிறார்கள். இந்த லெமன் பழத்தில் இந்த வைட்டமின் ஏராளமாக உண்டு. ஆனால், நமது நாட்டு எலுமிச்சம் பழத்தில், லெமன் பழத்தில் இருப்பதுபோல அவ்வளவு உ வைட்டமின் (Vitamin C) இல்லை. லெமன் பழத்தில் இருக்கும் வைட்டமினைவிட எலுமிச்சம் பழத்தில் மூன்று பங்கு குறைவாக இருக்கிறது. அதாவது, ஒரு அவுன்ஸ் லெமன் பழச்சாற்றில் உள்ள வைட்டமின், மூன்று அவுன்ஸ் எலுமிச்சம் பழச்சாற்றில் பெறலாம். திராக்ஷையிலும் இந்த வைட்டமின் உண்டு. ஆனால் அதிகமாக இல்லை. வாழைப் பழத்திலும் இந்த வைட்டமின் சொற்பமாக உண்டு.

அடுத்த இதழில் எலும்புக்குப் பலந் தருகிற எ வைட்டமினைப்பற்றி (Vitamin D) எழுதுவோம்.

லிட்டில்ஸ்

ஓரியண்டல் பாம்



அணா

இந்தியாவின் முதன்மை யான ஔஷதம்

"சிறந்த இந்திய நிவாரணி"

மூன்றாவது அறிவிப்பு.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாமை எல்லோரும் வாங்க வேண்டுமென்பதற்காக இப்பிரசித்தி பெற்ற நான்கு அணா அளவு புதிதாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் கொடுக்கும் நான்கணாவுக்கு, கடந்த ஐம்பது வருஷங்களாக வழங்கிவரும் பிரக்யாதி வாய்ந்த முறையில் சிறிதும் மாறுபடாத அதே L. O. B. தான் உங்களுக்குக் கிடைக்கிறது. தவிர நீங்கள் அசல் விலையில் கால் விலைக்கே வாங்குகிறீர்கள். 4 அணா அளவு L. O. B. ஐ உங்கள் வியாபாரியிடம் கேளுங்கள்.

அதிகப்படியான சுங்க வரி முதலியவைகளில்லாத எல்லா ஜில்லாக்களிலும் நகரங்களிலும் ஒரே விலைதான்.

கீல் பிடிப்பு, சுளுக்கு, வாதம், முதுகு வலி, நரம்பு வலி, தலை வலி, காது வலி, பல் வலி, சிராய்ப்புகள், தசை வலிகள் முதலியவற்றைப் பூரா நிவர்த்திக்க லிட்டில்ஸ் ஓரியண்டல் பாமை உபயோகியுங்கள்; நீண்ட காலமாகப் பெயர் பெற்று விளங்கும் இந்நிவாரணி உங்கள் வலியைத் தீர்க்க தவறாது.

Made in India (Madras City) for Half a Century

பெட்டி 67
மதராஸ்

LITTLE'S Oriental BALM

4 ANNAS

the World Renowned Relief for Aches and Pains

"பட்டுபோன்ற சருமத்திற்கு" "லிட்டில்ஸ் ஓரியண்டல் சோப்பை" பரீக்ஷியுங்கள்.

டஜன் 1-க்கு ரூபா 1—4—0.

புராண விநோதம்

(வைசம்பாயனன்)

முழுமுதற் கடவுளாகிய பரமசிவன் மாணிக்க வாசகரைப் பாண்டியராஜன் துன்பப்படுத்தியதைப் பார்த்துச் சகிக்க மாட்டாதவராய்க் காட்டிலே ஊளை யிட்டுக்கொண்டு திரிந்த நரிகளை யெல்லாம் பெரிய பெரிய குதிரைகளாக்கிக் கொண்டு வந்து பாண்டிய ராஜனிடம் கொடுத்ததாகவும் அந்தக் குதிரைகளெல்லாம் மதுரைக்கு வந்த அன்றைய இராத்திரியே "பழைய கருப்பனே கருப்பன்" என்றபடி நரிகளாகமாறி ஊரையே அல்லோல கல்லோலப்படுத்தி விட்டதாகவும் கதையில் இருக்கிறது. எப்படி ஐயா நரி குதிரையாக ஆகமுடியும் என்றால் நரி. பரி. என்று முதலெழுத்தை மாத்திரம் வேண்டுமானால் மாற்றி எழுதலாமே யொழிய நரி குதிரையாக உள்ளபடி ஆகுமா? அப்படியானால் இப்போது குதிரைப் பந்தயத்தில் அபாரப் பிரியமுள்ள நண்பர்களெல்லாம் கூடிப் பரமசிவனிடம் முறையிட்டுப் பார்த்து நரிகளைக் குதிரைகளாகச் செய்கிற காரியம் பார்த்தால் விலை சகாயமாக அநேகம் முதல்தரமான நரிக் குதிரைகளைப் பழக்கிப் பந்தயம்விட ஏற்பாடு செய்யலாம் என்று தோன்றுகிறது.

* * *

தடாதகைப் பிராட்டியாருடைய தாயார் பெயர் காஞ்சனமாலை. அந்த அம்மாள் சமுத்திர ஸ்நானஞ் செய்ய விரும்பித் தன் மகளிடம் தகவலைத் தெரிவித்தாள். மகள் உடனே புருஷனாகிய சோமசுந்தரக் கடவுளிடம் தெரிவித்தாள். உடனே சோமசுந்தரக் கடவுள் ஒரு கடலை மாத்திரம் வரவழைக்காமல் எழுகடலையும் எழு நிறமாக ஒரே குளத்துக்குள் வரும்படி செய்து விட்டார். எப்படி எழுகடலும் மதுரைக்குள்ளிருக்கிற குளத்துக்குள் வரமுடியும் என்று கேட்க வேண்டாம். ஒரு வேளை சமுத்திரத்திலிருந்து நேரே குழாய் போட்டிருக்கக்கூடாதா? ஆனால் இப்போதும் அந்த எழுகடல் தீர்த்தமிருக்கிறது. மதுரையிலுள்ள கச்சடாத் தண்ணீர் முழுக்க அதற்குள்ளாகத்தான் வந்து தங்குகிறது. அந்த வீதியில் போனாலே தீர்த்தத்தின் வாசனை வந்துவிடும். மூச்சு விடமுடியாது. இதிலே இன்னொரு ரசமிருக்கிறது. அது என்னவென்றால் காஞ்சனமாலை விதவையாக இருந்தாள். விதவை எப்படித் தனியே கடலாட முடியும். ஆதலால் எவ்வளவோ நாளைக்கு முன் இறந்துபோன கணவனாகிய மலையத்துவச பாண்டியனை வரவழைத்துக் கணவனும் மனைவியுமாகக் கைகோத்துத் தீர்த்தமாடச் செய்த சங்கதிதான் அது. இப்போது அப்படிப்பட்ட ஆட்களிருந்தால் விதவைகளுடைய கணவன்மார்களை யெல்லாம் எழுப்பி அவரவர்களிடம் சேர்த்து இன்பமாக இருக்கச் செய்யலாம்.



10-9-34-ந் தேதியில் இரங்கூனைச் சேர்ந்த பசுமந்தான் நகரத்தார் மடத்தில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் தலைவர் திருவாளர் சா. அ. ச. இராமன் செட்டியாரவர்கள் தலைமையில் நடந்த சீர்திருத்த மணத்தின் தம்பதிகள்.

திருவாளர் செல்லப்பா இராமசாமி, திருமதி கண்ணப்பு விசாலாட்சி.

போட்டிப் பந்தயம்.

பரிசுத் தொகைகள் எக்காரணத்தைக் கொண்டும் குறைவு படாது.

சரியான விடை ஒலவக்கோடு மலபார் இண்டர்.நேஷனல் ஆபீஸில் சீல் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1.	சரியான விடை அனுப்புகிற ஒவ்வொருவருக்கும்	பரிசு	ரூ.	30—0—0
2.	ஒரு தவறுள்ள விடை அனுப்புகிற ஒவ்வொருவருக்கும்	,,	,,	15—0—0
3.	இரண்டு தவறுள்ள விடை அனுப்புகிற ஒவ்வொருவருக்கும்	,,	,,	5—0—0

சரியான விடை உள்ளவருக்கு முதல் பரிசிலும், இரண்டாவது பரிசிலும், மூன்றுவது பரிசிலும், ஒரு பங்கு உண்டு.

1.__ணன்	கிருஷ்ணன்
2._வ	ஓர்தமிழ்வருடம்
3. அ__	தாய்
4. க__ர்	திருடர்
5. மயக்க_	புத்திகலங்கல்
6. தொண்_	ஊழியம்

ஷை 6 வார்த்தைகளுக்கு நேரேயுள்ள பதங்களில்—இம்மாதிரி கோடிட்ட இடங்களில் விடப்பட்டிருக்கிற எழுத்துக்களைப் பூர்த்தி செய்து காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டியது. விடைகள் யாவும் 20—10—34 தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டியது.

சரியான விடையும் பரிசு பெற்றவர்களின் விவரமும் 2—11—34 தேதி ஊழியனில் வெளிவரும். இந்தப் போட்டிப் பந்தயம் 5—10—34 தேதி விநோத நேசனிலும் வெளிவரும்.

விடைகள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

மானேஜர், மோதிலால் நிலையம்,
(விடுபட்ட எழுத்துப் போட்டி 1)
ஒலவக்கோடு. (S. மலபார்)

சென்ற 17—8—34 தேதி சங்கீதப் போட்டிப் பந்தயத்தின் சரியான விடை. 1. ஆண்டி பண்டாரம். 2. கை ராட்டினமே. 3. மாலேயோ கழுத்தை விட்டு. 4. யான் படும்பாடு. 5. வண்ணான் வந்தானே. 6. பட முடியாதினித்துயரம். 7. ராட்டினமே. 8. விரித்த செஞ்சடையாட.

சரியான விடைகள் 20. பேர்களிடமிருந்தும் 1 தப்புள்ள விடைகள் 200 பேர்களிடமிருந்தும் கிடைத்துள்ளன, பரிசுத் தொகைகள் பங்கிட்டு 10-9-34உ யன்று அனுப்பப்பட்டன.

—மானேஜர்.

தேசீயக் கட்சித் தேர்தல் அபேக்ஷகர்கள்


ஐக்கிய மாகாண 7 நகரத் தொகுதியிலிருந்து ஸ்ரீமான் சிந்தாமணி தேசீயக் கட்சி யாதரவுடன் அபேக்ஷகராக நிற்கப் போவதாகத் தெரிகிறது. பண்டித நானக்சந்த் மீரத்தில் மேற்படி கட்சி அபேக்ஷகராக நிற்பார். பீஹாரில் ஸ்ரீமான் ஜி. என். சிங். ஸ்ரீமான் கே. பி. ஜெய்ஸ்வால், ஸ்ரீமான் ஜகத் நாராயணலால் ஆகியவர்கள் மேற்படி கட்சியின் சார்பாக அபேக்ஷகர்களாக நிற்பார்கள் என்று தெரிகிறது.

பம்பாயில் காங்கிரஸ் நகர்.

செப்டம்பர் 16-ந் தேதி இரவு பம்பாயில் திரு. கே. எப். நரிமானின் தலைமையில் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. ஏகமனதாக திரு. பாபு ராஜேந்திர பிரசாத் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அன்று காலையில் சர்தார் வல்லபாய் படேல் (தற்போதைய காங்கிரஸ் தலைவர்) வோர்லியில் காங்கிரஸ் நகருக்குக் கல்நாட்டு விழா ஆற்றினர். இந்நகரம் எல்லைப்புறக் காந்தி காபர்கான் பெயரால் அழைக்கப் படும்.

மே. த. கவர்னரின் அலுவல்கள்

தற்போதைய ஏற்பாட்டின்படி மே. த. கவர்னரும் லேடி பியர்ட்ரீஸ் ஸ்டான்லியும் அக்டோபர் 16-ந் தேதி உதகமண்டலத்திலிருந்து மைசூருக்குப் பிரயாணமாவார்கள். 19-ந் தேதி மைசூரை விட்டுப் புறப்பட்டு 20-ந் தேதியில் சென்னைக்கு வருவார்கள். நவம்பர் 14-ந் தேதி சென்னையை விட்டுப் பம்பாயிக்குப் பிரயாணமாகி, 17-ந் தேதி ராஜபுதானக் கப்பலில் ஊருக்குப் புறப்படுவார்கள்.



விகடத்திரள்

ஆசிரியர்:—ஓயாது கோபங்கொள்ப வரை எப்படி அழைக்கலாம்?

மாணவன்:—வாத்தியார் என்று அழைக்கலாம்.

—ஆர். நாகசுந்தரம்.

* * *



சிறுவன்:—அம்மா! அம்மா! நீ என் இன்று மாலையில் காபி தரவில்லை; எனக்கு நன்றாக வயிறு பசிக்கிறதே.

தாயார்:—எத்தனை தரந்தான் காபி சாப்பிடுவாய்! பள்ளிக்கூடத்தில் வாத்தியார் காப்பி தந்தார் என்று சொன்னுய் அல்லவா?

சிறுவன்:—அது சாப்பிடும் காபி அல்ல அம்மா! அடிபடும் காபி. கோட்டு அல்லவா அது.

—எம். லக்ஷ்மி.

* * *

குப்பு ஐயர்:—டே! நடராஜா! அடுத்த வீட்டுப் பாட்டியைக் கூப்பிடு.

சிறுவன்:—அடுத்த வீட்டில் பாட்டி இல்லையே?

குப்பு:—சீ! மடையா! கிழவியைக் கூப்பிடடா?

சிறுவன்:—ஆ! கிழவிதானு பாட்டி!

—K. P. சாரதி.

தாயார்:—அடே! மணி அப்பாவை அடியாதேடா!

மணி:—என் அம்மா?

தாயார்:—பெரியவர்களை சிறியவர்கள் அடிப்பது பிழையல்லவா?

மணி:—சிறியோர் கொடுத்த அடிகளையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே அல்லவா?

—T. N. மாணிக்கம்.

* * *



வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கோர்ட்டுக்கு வந்த சிலர் உரக்கப்பேசினர்கள். நீதிபதி முதலில் எச்சரிக்கை செய்தார். அப்பால்:—யாராவது சத்தம் போட்டால் கோர்ட்டுக்கு வெளியே துரத்தி விடுவேன்.

உடன் கூண்டில் நின்றுகொண்டிருந்த குற்றவாளி "ஓ" வென்று கத்தினன்.

—"விநாயகர்,'

* * *

ஆசிரியர்:—சில சாமிகளின் பெயரைச் சொல்?

ஒரு மாணவன்:—விநாயர், சரஸ்வதி சுப்பிரமணியர், சிவன், விஷ்ணு.

ஆசிரியர்:—போதும்; அடுத்தவன் சொல்.

அடுத்த மாணவன்:—முனிசாமி, கோவிந்தசாமி, ரங்கசாமி, ஆரோக்ய சாமி, ராமசாமி.

—M. ராஜம்.

* * *



சிறிய உருவங்களைப் பெரிதாக்கிக் கொடுப்பதாக விளம்பரம் செய்திருந்த ஒரு போட்டோகிராபரிடம் ஒரு நாட்டுப்புறத்தான்:—ஐயா இந்த 5 ரூபாய் நோட்டை 100 ரூபாய் நோட்டாகப் பெரிதாக்குங்கள். சார்ஜை தந்துவிடுகிறேன்.

* * *

வேலைக்காரி:—(எஜமானரிடம்) ஒருவர் அதிகமாக வளர்ந்த மீசை தாடிகளுடன் தங்களைப் பார்க்க வந்திருக்கிருர்.

எஜமான்:—எனக்கு க்ஷவரம் செய்யத் தெரியாது. அம்பட்டனிடம் போகச் சொல்.

—ல. கருப்ப கோனர்.

* * *

ராஜன்:—உன் நண்பர் ஓர் பழைய சாமான் விரும்பி.

கிட்டு:—எப்படித் தெரியும் எனக்கு?

ராஜன்:—அவர் கல்யாணம் செய்துகொண்டவள் ஓர் விதவை. அவளுக்குப் போட்டதெல்லாம் முதல் மனைவியின் நகை. செலவிட்ட பணம் பத்து வருடங்கட்குமுன் எடுத்துவைக்கப்பட்டது. கல்யாணம் நடந்த ஊர் பழவூர். இடமும் மிகப்பழமையான ஓர் கட்டிடமே.

—எம். என். ஜி. கோவிந்தம்மாள்.

* * *

காந்திஜி அறிக்கை

காங்கிரஸிலிருந்து விலக்கம்

"எல்லைப்புறத்தில் ஓர் கிராமத்திருந்து சேவை செய்வேன்"

காங்கிரஸ் செய்யவேண்டுவதென்ன?

காந்திஜி ஒரு அறிக்கை விடுத்துள்ளார் அதன் சுருக்கம் வருமாறு:—

நான் காங்கிரசிலிருந்து விலகப் போவதாக வெளிவந்த வதந்தி மெய்யே. எனினும் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலும் ஜாயிண்டு பார்லிமெண்டரி போர்டிலும் கலந்துகொள்வதாக வார்தாவுக்கு வந்த நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சமீபத்தில் பம்பாயில் கூடப்போகும் காங்கிரசுக்குப் பிறகு காங்கிரஸைவிட்டு விலகுவது நலமாயிருக்குமென்றெண்ணி முடிவு செய்துவிட்டேன். காங்கிரஸை விட்டு நான் நீங்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்று சர்தார் வல்லபாய் படேலும் ஒப்புக்கொண்டு விட்டார். அறிவாளிகளான காங்கிரஸ்காரரில் பெரும்பாலாருக்கு என்னுடைய வேலைத் திட்டத்திலும் கொள்கைகளிலும் வேலை முறையிலும் வெறுப்புத் தோன்றி விட்டதென்றும் காங்கிரஸின் வளர்ச்சிக்கு நான் உதவியாயிராமல் தடையாயிருப்பதாய் அவர்கள் எண்ணுவதாயும் காங்கிரஸ் ஜனநாயகஸ்தாபன மாகவும் பிரதிநிதி ஸ்தாபனமாகவும் இருப்பதற்குப் பதிலாக எனது சர்வாதிகாரத்துக்குட்பட்ட ஒரு ஸ்தாபனமாகி விட்டதென்று பல பேர் எண்ணிக் கொண்டிருப்பதாயும் பகுத்தறிவுள்ளவர்களுக்குக் காங்கிரஸில் இடமில்லை யென்று காங்கிரஸ் காரரில் பலர் நம்புவதாயும் எனக்கு ஏற்பட்டிருக்கும் நம்பிக்கை சரியா தப்பா என்று நாளடைவில் அறிய வசதியுண்டாகுமென்ற நம்பிக்கையின் பேரிலே எனது முடிவை ஒத்திப் போடவேண்டுமென்று பலர் என்னைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

லக்ஷ்யத்தில் மாறுபாடு

என்னிடம் பக்தி செலுத்தவேண்டிய கடமை குறுக்கே நிற்காவிட்டால் அறிவாளிகளான காங்கிரஸ்காரர்கள் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் எந்த வழியைப் பின்பற்றுவார்களோ அந்த வழிக்கு நேர்மாறாக நான் சென்றுக் கொண்டிருப்பதாக நான் உணர்கிறேன். காங்கிரஸ் பின்பற்ற வேண்டுமென்று நான் வகுத்த வேலைத் திட்டத்தை எதிர்த்து ஆட்சேபித்த காலத்தும் அறிவாளிகளான காங்கிரஸ்காரர்கள் என்னிடம் காட்டிய பக்தியைப் போல் எந்தத் தலைவரும் தனது கோஷ்டியாரிடமிருந்து பெற்றிருக்கவே மாட்டார். என்னிடம் வைத்த பக்தியை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு மேலும் மேலும் அவர்களைத் துன்பப் படுத்துவது எனக்குக் கஷ்டமாகவே இருக்கிறது. எனது சகாக்களின் பக்திக்கு மதிப்புக் கொடுக்கும் பொருட்டு எனக்கும் அறிவாளிகளான காங்கிரஸ் காரருக்கும் இருந்துவரும் அபிப்பிராய வித்தியாசங்களை எடுத்துக் காட்டாமலிருக்க முடியாது.

ராட்டும் கதரும்

காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் கதருக்கு முதன்மை ஸ்தானம் அளித்திருக்கிறேன். பலர் நூல் நூற்பது இயலாததென்கின்றனர். என்மீதுள்ள பக்தியாலேயே பலர் கதரை ஆதரிக்கின்றனரென்பதை நானறிவேன். ஆனால் கதர் பாமர மக்களின் சுயராஜ்யத்தைக் கொடுப்பதென்பதும் ஏழைகள் வயிற்றுக்குக் கஞ்சி வார்ப்பதென்பதும் உண்மை. கதர் நிபந்தனையை நாம் வற்புறுத்தினால் பல காங்கிரஸ் வாதிகட்கு அதில் இடமிராது. தினம் கைகொண்டு நூற்ற நாலு 4 அணு சந்தாவுக்குப் பதிலாக ஏற்படுத்தினால்தான் அவர்கள் காங்கிரஸ் வாதிகளாக இருக்க முடியும்.

பார்லிமெண்டரி போர்டு

நான் ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவித்தவனாக இருந்தாலும் சட்ட மறுப்புத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கும் தற்காலத்தில் காங்கிரஸ் ஏற்படுத்தக்கூடிய வேலைத் திட்டத்தை நடத்தி வைக்கக் காங்கிரசுக்குள் ஒரு பார்லிமெண்டுக் கட்சி இருக்கவேண்டியதென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். எனினும் இவ்விஷயத்தில் நமக்குள் பலமான அபிப்பிராய வித்தியாசம் இருந்து வருகிறது. பாட்னு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பார்லிமெண்டரி போர்டைப்பற்றி நான் வற்புறுத்திப் பேசியது நமது உத்தம சகாக்கள் பலருக்கு மிக்க மனவருத்தத்தையுண்டுபண்ணியது. எனினும் ஒரு எல்லைவரை, தம் மனச்சாட்சிப்படி நடக்க அவர்கள் தயங்கினர். தன்னைவிட மேலானவர்கள் அல்லது அனுபவசாலிகளின் அபிப்பிராயத்துக்காகத் தமது அபிப்பிராயங்களை விட்டுக்கொடுப்பது ஒரு நற்குணமே. ஆனால் தினந்தோறும் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கும்படி வற்புறுத்தப்பட்டால் எவராலும் அதைத் தாங்க முடியாது. அநேகர் என்னை எதிர்த்து எதிர்த்து மனச்சோர்வடைந்து விட்டனர். இது மிகவும் மானக்கேடான நிலைமையே.

அபேதவாதக் கட்சி

அபேதவாதக் கட்சி ஸ்தாபனத்துக்கு நான் நல்வரவு கூறியிருக்கிறேன். அபேதவாதக் கட்சியாரில் அநேகர் கண்ணியமானவர்கள். தியாகிகளான எனது சகாக்கள். அவர்களுடைய வேலைத் திட்டத்துக்கும் எனது கொள்கைக்கும் பலமான வித்தியாசமிருந்து வருகிறது. அவர்கள் வெளியிட்டுள்ள கருத்துகள் நாடெங்கும் பரவினால் ஆச்சரியப்படமாட்டேன். அவர்களுடைய கருத்துகள் எனக்கு பிடிக்காதவைகளா யிருந்தன. அவர்கள் காங்

ரசில் ஆதிக்கம் பெற்றால்—ஒருக்கால் ஆதிக்கம் பெறவும் கூடும்—எனக்குக் காங்கிரசில் இருக்க முடியாது. என் வாழ்நாளில் நான் எத்தனையோ ஸ்தாபனங்களில் ஈடுபட்டிருந்தாலும், அத்தகைய நிலைமையில் நான் ஒருபொழுதும் இருந்ததே இல்லை.

அப்பால் சுதேச சமஸ்தான விஷயத்தை எடுத்துக் கொள்வோம். சுதேச சமஸ்தானங்களுக்கும் காங்கிரசுக்கும் தொடர்பிருக்க வேண்டியதைப்பற்றிப் பலர் கூறும் அபிப்பிராயங்களை நான் ஆதரிக்கவே இல்லை.

தீண்டாமை

தீண்டாமை ஒழிப்பு விஷயத்திலும் எனது அபிப்பிராயம் பலர் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டதாகவே இருக்கிறது. எனக்குத் தீண்டாமை யொழிப்புப் பிரச்னை மத சம்பந்தமானதும் மதாசார சம்பந்தமானதுமாக இருக்கிறது. தீண்டாமை ஒழிப்புக்காக நான் கைக்கொண்ட முறையும் காலமும் பொருத்தமானதல்ல வென்றும் அதனால் சட்டமறுப்புக்குப் பெரிய பாதகம் ஏற்பட்டுவிட்டதென்றும் பலர் நினைக்கிறார்கள்.

அஹிம்சை

14 வருஷப் பரீட்சைக்குப் பிறகும் அஹிம்சையைக் காங்கிரஸ் வாதிகளில் பெரும்பாலோர் ஒரு சம்பிரதாயமாகவே மதித்து வருகிறார்கள். ஆனால் எனக்கு அஹிம்சை ஜீவாதாரக் கொள்கையாக இருந்து வருகிறது. அஹிம்ஸா தர்ம விஷயத்தில் காங்கிரஸ் வாதிகளுக்குள் சந்தேகமிருந்தால் சட்டமறுப்பு விஷயத்தில் கொஞ்சம்கூட சந்தேகமிருக்கத்தான் செய்யும். எனினும் காங்கிரஸ் கமிட்டியில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு எனக்குச் சாதகமாகவே எனது சகாக்கள் ஓட்டுக் கொடுத்தார்கள். தீர்மான விஷயத்தில் நம்பிக்கையில்லாமலே வேண்டாமனத்துடன் அவர்கள் ஓட்டுக்கொடுத்ததை எண்ணும் போது அவர்கள் மனம் புண்பட்ட மாதிரியே என் மனமும் இப்பொழுது புண்படுகிறது. அவர்களும் நாமும் நம்பும் பொது லக்ஷியத்தை நாம் அடைய வேண்டுமானால் இருசாரார் மனத்துக்கும் துன்பத்தை யுண்டுபண்ணும் இந்த நிலைமை மாறியே தீர வேண்டும். எனவே அவரவர் மனச்சாட்சிப்படியும், நம்பிக்கைப்படியும் எல்லாரும் தாராளமாக நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

சத்யமே கடவுள்

எனது உயிரையே அர்ப்பணஞ் செய்திருக்கும் இப் பரிசீலனையை நடத்துவதற்காக, எனக்குப் பூரண விடுதலை வேண்டும். நடவடிக்கை யெடுப்பதற்குப் பூரண சுயேச்சை வேண்டும். சாத்விக எதிர்ப்பு, ஒருபாகமாக விளங்கும் சத்யாக்கிரகமே எனது வாழ்க்கையின் உயிர். சத்தியமே எனது கடவுள். அஹிம்சையின் மூலமே நான் அவரைத் தேடக்கூடும். இதர முறையினாலன்று. இவ்வுலகத்திலேயோ அல்லது மறுவுலகத்திலேயோ நான் தேடுகின்ற எந்த வஸ்துவிலும், உலக விடுதலையுடன் எனது நாட்டு விடுதலையும் உண்மையாகவே சேர்ந்துள்ளது. இதைத் தேடுவதற்காகவே நான் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டேன்.

பொது லட்சியம்

நமது பொதுலட்சியத்தை ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் உணர்ந்துளாரா வென்பதை நான் சந்தேகிக்கிறேன். பூரண சுயேச்சை யென்ற குறிப்பின்படி அதற்குரிய ஆங்கிலப் பதத்தின் பூரண ஆங்கில உணர்ச்சியுடன் கூடிய பூரணசுயேச்சையே இந்தியாவிற்கு வேண்டுமென நான் விரும்புவது. எனக்குப் பூரண சுயராஜ்யம் என்பது, பூரண சுயேச்சை யென்பதின் பொருளினும் மிகவும் பெரிது. ஆனால் பூரண சுயராஜ்ய மென்பது பூரணமாக விளக்கப்படவில்லை. ஒரு வார்த்தையோ அல்லது சில வார்த்தைகள் சேர்ந்து குறிப்பிடப்படுவதோ எல்லோரும் அறிந்து கொள்ளக்கூடிய பொருளை நமக்கு அளியாது. ஆகவே சுயராஜ்யத்திற்கு அநேக சந்தர்ப்பங்களில் அநேக வியாக்யானம் கூறியுள்ளேன். அவையாவும் உண்மையெனவே நான் அபிப்பிராயப் படுகிறேன். நாம் யாவரும் (சுயராஜ்யத்திற்கு) ஒரே மாதிரியான வழியைப் பின்பற்றினால் முடிவின்னதென்பது பற்றிக் கஷ்டப்பட வேண்டியதில்லை. இப்பகிரங்கமான உண்மையை அநேக காங்கிரஸ் வாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை யென்ற விஷயம் அங்கிகரிக்கப்பட வேண்டும். இவ் வேற்றுமையின் பலனே தற்சமயமுள்ள காங்கிரஸ் திட்டத்தைப் பயனற்றதாக்கியது. ஏனெனில் அதை நம்பாமல், வெறும் வாயாதரவு மட்டும் அளித்த நண்பர்கள் இயற்கையாக அதை அனுபவத்திற்குக் கொண்டுவரத் தவறி விட்டனர். எனினும் நாட்டின் முன்பு வைக்கப் பட்டிருக்கும் காங்கிரஸ் திட்டத்தைத் தவிர எனக்கு வேறு திட்டம் இல்லை. தீண்டாமை விலக்கு, இந்து முஸ்லீம் ஒற்றுமை, பூரண மதுவிலக்கு, கதர் உற்பத்தி, கிராமக் கைத்தொழில்கள் புனருத்தாரணம் செய்யப்படக் கூடிய முறையில் பூரண சுதேசியம், ஏழு லட்சம் கிராமங்களையும் பொதுவாகத் திருத்தியமைப்பது ஆகிய விஷயங்கள் நாட்டின்பால் அன்பு கொண்டுள்ள யாவருக்கும் திருப்தியளிக்க வேண்டும். என் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு இந்திய கிராமத்தில் விசேஷமாக ஒரு எல்லைப்புற கிராமத்தில் தனித்து எனது வாழ்க்கையை நடத்த நான் விரும்புவேன்.

குதாய் கித்மத்கார் ஸ்தாபனத்தைச் சார்ந்தவர்கள், பூரண அஹிம்சா வாதிகளாயிருப்பின், சாத்வீக உணர்ச்சி பரவவும், இந்து முஸ்லீம் ஒற்றுமை வளரவும் அவர்கள் விசேஷ பங்கெடுத்துக் கொண்டவராவர். ஏனெனில் அவர்கள் மனோ, வாக்குச் செய்கைகளில் சாத்வீக முடையவர்களா யிருப்பின், இந்து முஸ்லீம் ஒற்றுமையை விரும்புவர்களாயிருப்பின், உண்மையாகவே அவர்கள் மூலம் இந்நாட்டிற்கு வேண்டிய இரு அவசியமான விஷயங்கள் நிறைவேறுவதை நாம் காண்போம். அப்பொழுது நாம் அஞ்சும் ஆப்கன் பீதி பழங் கதையாகிவிடும். ஆகவே அவர்கள் சாத்வீக உணர்ச்சியுட னிருக்கின்றன ரென்ற உண்மையைச் சோதிக்க நான் பெரிதும் ஆவல் கொண்டுள்ளேன். இதய பூர்வமாக இந்து முஸல்மான், ஏனையோர் ஒற்றுமைப்படுவதில் அவர்கள் நம்புகின்றனரா வெனவும் பரிசீலனை செய்ய விரும்புகிறேன். கைராட்டினத்தின் மேன்மையைப் பற்றி அவர்களிடம் நேரில் நானே அறிவிக்கவேண்டு மென்பதும் எனது விருப்பம். இத்துறையிலும் இன்னும் வேறு பல துறைகளிலும், நான் அதனுள்ளிருப்பினும், இராவிடினும் எனது தாழ்மையான முறையில் காங்கிரஸிற்குப் பணியாற்ற வேண்டுமென்பது எனது விருப்பம்.

ஒழுங்கின்மை

நம்மிடை ஒழுங்கின்மை அதிகரித்து வருவதுபற்றிக் கடைசியாகக் குறிப்பிடு

கிறேன். நான் யாது கூறியிருப்பினும், நாட்டிலேயே மிகவும் சக்தி வாய்ந்த, விசேஷ பிரதிநிதித்துவம் உடைய ஸ்தாபனமாகவே காங்கிரஸ் என்னுல் இன்னும் மதிக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்திலிருந்தே அது இடைவிடாது உயர்ந்த பணியும் சிறந்த தியாகமும் செய்து வந்திருக்கிறது. வேறெந்த ஸ்தாபனத்திற்கு நேர்ந்ததினும் மகத்தான இன்னல்களை அது ஏற்று நிலைத்திருக்கிறது. எந்த நாடும் பெருமையடையக் கூடிய முறையில் அது கந்நலத் தியாகத்தை மேற்கொண்டிருக்கிறது. இன்னும், யாதொரு குற்றமும் சாட்டப்படக் கூடாத ஆர்வமுடைய ஏராளமான ஆடவர்களையும் மகளிரையும் அது தன்னுள் கொண்டிருக்கிறது. நான் இப்படிப்பட்ட ஸ்தாபனத்திலிருந்து விலக வேண்டியிருப்பின்த் விசேஷ துபாக்துடனின்றி விலகமுடியாது. அதற்கு வெளியிலிருந்து, அதிலிருப்பதிலும் நாட்டிற்கு விசேஷ பணியாற்றக் கூடுமென நான் உணரும் பொழுதே நான் அந்த ஸ்தாபனத்திலிருந்து வெளியேறுவேன். நான் குறிப்பிட்ட எல்லா விஷயங்களையும், காங்கிரஸ் மகாசபையின் விஷயாலோசனைக் கமிட்டி முன்பு, சில தீர்மான ரூபமாக என் அபிப்பிராயத்தை அமுலுக்குக் கொண்டுவரும் முறையில் பிரேரேபித்து, காங்கிரஸின் உணர்ச்சியின்னதென நான் பரிசீலனை செய்யக் கருதுகிறேன்.

எனது திருத்தம்

நான் கொண்டுவர விரும்பும் முதல் திருத்தமென்ன வெனில் "நியாயமும் அமைதியும்" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக "உண்மையும், சாத்வீகமும்" என்ற வார்த்தைகளை உபயோகிக்க வேண்டுமென்பதாகும்.

நூல் சந்தா

இரண்டாவது நான்கணு சந்தாவிற்குப் பதிலாக ஒவ்வொரு அங்கத்தினரும் காங்கிரஸ் பண்டக சாலைக்குத் தன்னுல் நூற்கப்பட்ட எண்ணுயிரம் அடி நீளமுள்ள நன்ருக முறுக்கப்பட்ட 15ம் நிர் நூல் கொடுக்கவேண்டுமென்பதாம். ஏழையென ருசுப்படுத்தினுல் வேண்டிய அளவு பஞ்சு பண்டகசாலையிலிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

மூன்ருவது பிரேரணை

மூன்ருவது திருத்தப் பிரேரணையாதெனின், தொடர்ச்சியாக ஆறுமாத காலத்திற்குக் காங்கிரஸ் பதிவுப் புஸ்தகத்தில் பெயரிருந்து வராத அங்கத்தினர்களும், அந்தக் காலத்திற்கு வழக்கமாகக் கதர் அணியாதவர்களும் எந்த காங்கிரஸ் தேர்தலிலும் வாக்களிக்கக் கூடாதென்பதாம்.

ஆயிரம் பிரதிநிதிகள்

காங்கிரஸ் நிர்வகிக்க முடியாத பெரிய ஸ்தாபனமென்பது அனுபவம் மூலம் வெளியாகியிருக்கிறது. ஆருயிரம் பிரதிநிதிகளே யிருப்பினும் அனுபவத்தில் ஒருபோதும் ஆருயிரம் பிரதிநிதிகள் காங்கிரஸிற்கு வந்ததில்லை. உண்மையான பிரதிநிதித்வமுடைய ஜாப்தா இல்லாதபோது பிரதிநிதித்வம் உண்மையானதெனக் கொள்ள முடியாது. ஆகவே பிரதிநிதிகளின் தொகையை ஆயிரத்திற்குக் குறைக்கவேண்டும் அல்லது ஆயிரம் வாக்காளருக்கு ஒரு பிரதிநிதியெனத் திருத்தப் பிரேரணைகொண்டுவர வேண்டும். பூரண பிரதிநிதிகளும் வந்தால் பத்து லட்சம் வாக்காளரென்பது அதன் பொருளாம். 3150 லட்சம் ஜனங்களிருக்கும் நாட்டில் இது அளவுக்கு மீறிய ஆசையன்று.

ஜன நாயகத்துவம்

ஜன நாயகத்துவமும் செல்வாக்கும், வருஷாந்திரக் கூட்டத்திற்கு வரும் ஏராளமான பிரதிநிதிகள், பார்வையாளர்கள் ஆகியோர் தொகையால் மதிக்கப்பட வில்லை. அதனுல் ஆற்றப்படும் பணியின் அதிகரிப்பினுலேயே மதிக்கப்படுகிறது. ஏற்கனவே பயனற்றதாக, ருசுச் செய்யப்படாதிருப்பினும் மேல் நாட்டு ஜன நாயகத்துவமுறை இப்பொழுது பரிசோதனைக்குள்ளாகி யிருக்கிறது. அதன் வெற்றியைக் கண்ணுக்குப் புலனுகும்படி காட்டி உண்மை ஜனநாயக சாஸ்திரத்தை வகுக்கும் பெருமை இந்தியாவினதாகவே யிருக்குமாக.


சந்தேகமின்றி, தற்சமய முள்ளதே போல, லஞ்சமும், வெளி வேஷமும் ஜனநாயகத்தின் தடுக்க முடியாத பொருள்களாக யிருக்க வேண்டிய அவசியமே யில்லை. மேலும், கூட்டமும், ஜன நாயகத்தின் உண்மையான சோதனையன்று. தாங்கள் பிரதிநிதிகளாக யிருப்பவர்களின் உண்மையான உணர்ச்சி, அபிலாஷைகளின் பிரதிநிதிகளாக ஒரு சிலரிருப்பது உண்மை ஜனநாயகக் கொள்கைக்கு முரண்பட்டதன்று. பலாத்கார வழிகள் மூலம் ஜனநாயக ஆட்சி வகுக்கப்படக் கூடுமென நான் கருத வில்லை. ஜனநாயக உணர்ச்சி வெளியிலிருந்து புகுத்தப்பட முடியாது. உள்ளிருந்தே அவ்வுணர்வு யெழ வேண்டும்.

நமது லட்சியத்தை விரைவில் நாம் பெற வேண்டுமாயின், இவ்வறிக்கையின்

(46 பக்கம் பார்க்க)

கே. ரத்னம் அண்டு கம்பெனி.

ஸானிட்டரி & ட்ரெய்னேஜ் என்ஜினியர்ஸ்,



311, தம்புச்செட்டித் தெரு,
ஜி. டி. மதராஸ்.

நயமும் நம்பிக்கையுமான கம்பெனி.

பாத் டப்புகள், பாத்ரூம் சாமான்கள், இந்திய அல்லது ஐரோப்பிய முறைக்கிணங்கியபடி வாட்டர் கிளாசட்டுகள், வாஷ் பேசின்கள், யூரினல்கள், பிடெட்டுகள், வெந்நீர் பாய்லர்கள், இரும்பு அல்லது பீங்கான் பிளஷிங் டாங்குகள் வாட்டர் பைப்புகள், ஜலதாரைக்கு வேண்டிய ஸ்பெஷல் குழாய்கள், முதலியனவும் மேஜை டாப்புகளுக்கும் தளங்களுக்கும் சலவைக் கல்களும், தளத்திற்கும் சுவற்றிற்கும் மார்பிளைட்டுகளும், ஆஸ்பெஸ்டாஸ் செமென்ட் தகடுகளும், டைல்கள் பிளெய்ன் மஜோலிக்கா (பூக்கற்கள்) முதலிய சுகாதாரத்திற்கு வேண்டிய சாமான்களும், நல்ல வெண்மையான செமன்ட்டும் இங்கு கிடைக்கும். இதைப்பற்றிய தகவல்களையும் ஆர்டர்களையும் எதிர்பார்க்கிறோம்.



வட்டி விகிதம்.

இம்பீரியல் பாங்கு:—மூன்றரை பெர் [செண்டு.

இங்கிலாந்து பாங்கு:—இரண்டு பெர் [செண்டு.

இரங்கூன் நடப்பு வட்டி.

பவ-ஞு ஆவணி	0—4—0

இரங்கூன் தவணை வட்டி.

ஆடி 7-உ	0—3—6

சிங்கப்பூர் நடப்பு வட்டி.

பவ-ஞு ஆனி	0—5—3

சிங்கப்பூர் 3 மாத தவணை வட்டி.

ஆடி 1-உ	0—4—9

கொழும்பு நடப்பு வட்டி.

ஆகஸ்டு	0—6—0

செய்கோன் நடப்பு வட்டி.

பவ-ஞு சித்திரை	0—5—3
தவணை வட்டி.	0—5—3

சென்னை நடப்பு வட்டி

பவ சித்திரை	0—8—0
வைகாசி	0—7—6
ஆனி	0—7—0
ஆடி	0—6—6
ஆவணி	0—6—0

உண்டியல் விலை.

டிமாண்ட் விற்பனை	157½
„ 30 நாள் தவணை வாங்குவது	150

கப்பல்.

லண்டன் கிளாஸ்கோ

கிளான் ஆகல்வி: செப்டம்பர் 17-ந் தேதி வரும்.

சிடி அப் சிட்னி செப்டம்பர் 17-ந் தேதி வரும்.

கிளான் அல்பைன் அக்டோபர் 3-ந் தேதி வரும்.

ரங்கூன்

எதோபியா: செப்டம்பர் 24-ந் தேதி வந்து 28-ந் தேதி புறப்படும்.

கோல்பாரா: செப்டம்பர் 21-ந் தேதி வந்து அன்றே புறப்படும்.

எரின்புரா அக்டோபர் 1-ந்தேதி வந்து 5-ந் தேதி புறப்படும்.

மலேயா

ரோணு: செப்டம்பர் 22-ந் தேதி வந்து 25-ந் தேதி புறப்படும்.

ரஜூலா: அக்டோபர் 6-ந் தேதி வந்து 9-ந் தேதி புறப்படும்.

பாண்டிச்சேரி, சிங்கப்பூர், செய்கோன்

பேர்ணார்டின் டி சேண்ட் பேரி: அக்டோபர் 30-ந் தேதி சென்னை வந்து சேரும்.

எக்ஸ்ப்ளோரேடர் கிராண்டியர் 27-ந் தேதி வரும்.

ரப்பர்.

லண்டன், செப்., 17உ

புகைப்போட்ட ரப்பர் (ஸ்டாண்டர்டு) வாங்குவோர் விலை 7 5/16 பென்ஸ்.

தங்கம், வெள்ளி.

சென்னை, செப். 18உ

சவரன் (சில்லரை)	22—1—6
„ மொத்தமாக	22—1—0
ஆலைத்தங்கம் தோலா 1-க்கு	34—12—0
மூனா தங்கம் „	34—7—0
வெள்ளி	
1 ரூபா எடைக்கு	0—10—0
100 ரூபா எடைக்கு	60—12—0

(45-ம் பக்கத் தொடர்ச்சி.)


உணர்ச்சிக்கொத்தவாறு தீர்மானங்களிருக்க வேண்டிய தவசியம். பூரண மனத்துடன், தீர்மானங்களும் வேலை முறையும் தன் அங்கத்தினர்களால் நிறைவேற்றப்படாத எந்த ஸ்தாபனமும் வெற்றியடையாது. விசுவாசமாகவும், முணுமுணுப்பின்றியும், புத்திசாலித்தனமாகவும் பின்பற்றப்படாத எந்தத் தலைவரும் தம்மைப் பற்றி சிறந்த விவரம் எடுத்துக்காட்ட முடியாது. ஆகவே இதில்குறிப்பிடப்பட்டுள்ள பாராக்களில் சுருக்கமாக எடுத்துக் காட்டியிருக்கும் வேலைத் திட்டத்தின் அவசியங்களையொட்டிச் சமரசம் செய்வதற்கிடமில்லையென்பது இதன் மூலம் தெரியக்கிடக்கிறது. காங்கிரஸ் வாதிகள் பட்சபாதமின்றி அவற்றின் யோக்கியதையைப் பொறுத்துப் பரிசீலனைசெய்யவேண்டும். அவர்களது யோசனையிலிருந்து என்னை நீக்கிவிட்டுத் தங்கள் நியாய உணர்ச்சிப்படி நடந்துக் கொள்ள வேண்டும்.

கவி தாகூரின் சென்னை விஜயம்.

ரவீந்திரநாத் தாகூர் சென்னைக்கு வருவதை யுத்தேசித்து வரவேற்புக் கமிட்டி மைலாப்பூரில் கூடியது. அவர் அக்டோபர் மாதம் இறுதியில் சென்னைக்கு வருவார்.

ஸயண்டிபிக்
தங்க ஆபரணங்கள்
(உண்மையான தங்கத்திற்குப் பதிலானது)


ஹைகோர்ட்டு ஜட்ஜுகளாலும், அரசாங்க மந்திரிகளாலும், மற்றும் பிரக்யாதி பெற்றவர்களாலும் புகழப்பெற்றது.



(காட்லாக் இனம்.)

தி ஸயண்டிபிக் கோல்ட் பாங்கிள்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஹெட்டாபீஸ்:—43, பைராகிமடம் தெரு, தபால் பெட்டி 203, மதராஸ்.



நயம் மூக்குக்கண்ணாடிகள் கிடைக்குமிடம் இதுவே. மூக்குக்கண்ணாடி வியாபாரிகளுக்கும் கண் வைத்திய டாக்டர்களுக்கும் எல்லாவிதமான பிரேம்களும் (Frames) நெம்பர் வாரியாக கண்ணாடி பில்லைகளும் சமீப திருஷ்டி தூர திருஷ்டி என்னும் கண்ணாடிகளும் மொத்தமாகவும் சில்லரையாகவும் தயாராகக் கிடைக்கும். வெளியூர் வியாபாரிகளுக்குத் தகுந்த இடம்.

ஆர். ஜெ. ராம் அண்டு கோ,
மூக்குக்கண்ணாடி வியாபாரிகள்,
நெ. 23, பிராட்வே, மதராஸ்.

ஊழியன் சந்தா.


உள்நாடு வருடச் சந்தா	ரூ	6-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	3-0-0
வெளிநாடு வருடச் சந்தா	,,	10-0-0
,, ஆறு மாதங்கட்கு	,,	5-0-0

காரியஸ்தர்,
ஊழியன் ஆபீஸ்,
56, தம்புசெட்டித் தெரு,
சென்னை.

ஜெயோபோன்ஸ்

சிறந்த தொனியை பரப்புவது.

5 வருஷ உத்திரவாத முள்ளது.



கிராமபோன் சம்பந்தமான எல்லா வித ஸ்பேர் ஸாமான்களும் ஸ்டாக் வைக்கிறோம்.
எல்லாம் பிரிட்டிஷ் சாமான்களே.

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ஜெயோ போன் கம்பெனி,
2/15, லக்முதாஸ் தெரு, பி. டி. மதராஸ்.

இண்டோ - கம்மர்ஷியல் பாங்கி,
லிமிடெட்.

சென்னை, மதுரை, மாயவரம், ஈரோடு,
கும்பகோணம், காரைக்குடி, திருவாரூர், விருதுநகர்.

பஜார் பிராஞ்சு:—260, சைனாபஜார் ரோட், சென்னை.
சப் ஆபீஸ்கள்:—சீயாழி, சிதம்பரம்.

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் நடத்தப்படும். நிபந்தனைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

107, ஆர்மீனியன் தெரு, ஜி. டி. சென்னை. — S. N. N. சங்கரலிங்க அய்யர், மானேஜிங் டைரக்டர்.

உங்கள் வியாபாரம் லாபகரமாகவிருக்க வேண்டுமானால்
ஊழியன் வாரப்பதிப்பில்
விளம்பரம் செய்யுங்கள்

ஆச்சரியமாய் குணமாகும்.

முகப் பருக்கள், அம்மை, வைசூரி இவைகளின் வடுக்கள் டாக்டர் பார்த் என்பவரின் ஜெர்ம் கில்லர் சோப்பினால் மாறிவிடும். எல்லாவித சர்ம வியாதிகளும் இச் சோப்பினால் ஆச்சரியமாய்க் குணமாகும். பாஷாணம் சம்பந்தமில்லாதது.
3 சோப் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூ. 2—4—0.
3 சோப்புக்குக் குறைந்து வி. பி. பி-யில் அனுப்ப முடியாது.
விலாசம்:- பி. எஸ். பொம்மையா அண்டு கோ., 125, பிராட்வே, மதராஸ். 8

ஏஜண்டுகள் தேவை.

தஞ்சாவூர், கும்பகோணம், திருநெல்வேலி, சிதம்பரம், யாழ்ப்பாணம், நாகப்பட்டிணம், நன்னிலம், திருவாரூர், நீடாமங்கலம், விழுப்புரம், செங்கற்பட்டு, திண்டுக்கல், இராமனதபுரம், மணியாச்சி; திண்டிவனம், கடலூர், சீயாழி, மணப்பாரை, மானமதுரை, பரமக்குடி, காஞ்சீபுரம், திருவண்ணுமலை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி முதலிய இடங்களில் நமது "ஊழியன்" பத்திரிகையை விற்பனே செய்ய ஏஜண்டுகள் தேவை.


நிபந்தனைகட்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,
☞ ஊழியன் ஆபீஸ்,
56, தம்புச் செட்டித் தெரு, சென்னை.

பிளாக்குகள், ரப்பர் ஸ்டாம்புகள்

ஒரே முறை பரிட்சியுங்கள்.









ஸ்பார்ட்டன் அண்டு கம்பெனி,
156, பிராட்வே, சென்னை. O.

Printed and published by Rama Kasinathan for the India Publications Ltd., at the Oolian Power Press, 56, Thambu Chetty Street, Madras.